# உதயன்

விலை ரூ.20

பக்கம் 28

சுடர் 30 | கதிர் 085 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 7 வியாழக்கிழமை 19-02-2015


### மர்ம பொருள் வெடித்து பெண் காயம்

கரணவாய், பெப்.19
மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கரவெட்டி, உச்சில் வீதியைச் சேர்ந்த தியாகராசா கோமளா (வயது-38) என்பவரே காயமடைந்தார். பக்.24

### சிறைச்சாலை பதவி வெற்றிடம் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், பெப். 19
சிறைச்சாலைகளில் நிலவும்பதவிவெற்றிடங்களை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. சிறைச்சாலை உத்தியோகத்தர்களாக 200 பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன புஸ்பகுமார தெரிவித்துள்ளார். பக்.24

### விபத்தில் 10 பேர் காயம்

கிளிநொச்சி, பெப்.19
நேற்று மாலை பிரமந்தனாறுச் சந்தியில் டிராக்டர் தடம்புரண்டு விபத்துக்குள்ளானத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர். மயில்வாகனபுரத்தில் இருந்து இரண்டு டிராக்கடர்களில் புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோவிலுக்கு பக்தர்கள் சென்று கொண்டு இருந்த போது பிரமந்தனாறு சந்தியில் முன்னே சென்று கொண்டிருந்த பக்.24

### தேர்தல் முறையை மாற்றாது பொதுத்தேர்தல் வேண்டாம்!

கொழும்பு, பெப்.19
தேர்தல் முறையில் மாற்றம் செய்யாமல் நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்ல வேண்டாம் என நீதியான சமூகத்துக்கான தேசிய செயற்றிட்டத்தின் தலைவர் மாதுலுவாவே சோபித்த தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் அதனை செயற்படுத்த முடியாவிடின், நாடாளுமன்றைக் பக்.24

# உள்ளக விசாரணையை மதிப்பீடு செய்யும் ஐ.நா.

## ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, பெப்ரவரி 19
உள்நாட்டுவிசாரணை தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவனமாக மதிப்பீடு செய்யும் என்று ஐ.நா பொதுச் செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹன் ஹக் தெரிவித்துள்ளார்.
"புதிய அரசு பொறுப்புக் கூறும் உள்நாட்டுப் பொறி முறை ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இது குறித்து ஐ.நா. பொதுச் செயலர் அறிவார். அதன் முன்னேற்றங்கள் குறித்து கவனமாக மதிப்பீடு செய்யப்படும்" என்று அவர் தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த மாத அமர்வில் சமர்ப்பிக்கப்பட இருந்த இலங்கை குறித்த அறிக்கை பிற்போடப்பட்டுள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். பக்கம் 24

## "ஐ.நா. தீர்மானத்துடன் ஒத்துப்போகின்றோம்"

### அமெரிக்கா கூறுகின்றது

கொழும்பு, பெப். 19
இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையை ஒத்தி வைக்க ஐ.நா மனித உரிமைகள் சபை எடுத்த தீர்மானத்துடன் ஒத்துப் போவதாக, அமெரிக்கா தெரிவித்துள்ளது.
"இலங்கை தொடர்பான அறிக்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை எடுத்துள்ள ஒருமித்த முடிவை அமெரிக்கா ஆதரிக்கிறது"- என்று ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் கீத் ஹாப்பர் தெரிவித்துள்ளார்.
"போருக்குப் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் – மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் – நம்பகமான நீதி மற்றும் பொறுப்புக் கூறும் பொறிமுறைக்கு ஆதரவளிக்கவும் – ஜன நாயகத்தை மீளமைக்கவும் – நல்லாட்சியை ஏற்படுத்தவும் – புதிய அரசு எடுத்துள்ள ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை நாம் மதிக்கின்றோம். புதிய திசையில் இலங்கை பயணிப்பதற்கு மக்கள் வாக்களித்துள்ளனர்."– என்று அவர் குறிப்பிட்டார்.
"இப்போதிருந்து அறிக்கை வெளியிடப்படும் வரையாக உள்ள நேரத்தை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறும், அறிக்கை வெளியிடப்படும்போது அதிலுள்ள பரிந்துரைகளை கவனத்தில் கொள்ளுமாறும் இலங்கை அரசை நாம் ஊக்குவிக்கிறோம்."– என்றும் அவர் தெரிவித்தார். பக்கம் 24



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று நுகேகொடவில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.
விரிவான செய்தி 26 ஆம் பக்கத்தில்

## "மாற்றம்" நிகழ்வில் பங்கேற்கார் முதல்வர்

யாழ்ப்பாணம், பெப். 19
கொழும்பு அரசின் அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட மாகாண அமைச்சர்கள்பங்கேற்கமாட்டார்கள்என்றுகூறப்பட்டுள்ளது. பக்கம் 24

## டெங்கு பரவும் சூழல்; 500 பேருக்கு அபராதம்

### பொலிஸாரின் முயற்சிக்கும் நீதிமன்று பாராட்டு

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ்நகரப் பகுதியில் டெங்கு பரவும் சூழலைப் பேணிய குற்றத்துக்காக கடந்த வாரம் மட்டும் 500 பேருக்கும் மேற்பட்டோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
இவற்றைத் தாக்கல் செய்த யாழ். பொலிஸ் நிலைய சுற்றாடல் பொலிஸாரை நீதிமன்று பாராட்டியது. அத்துடன், டெங்கு பரவும் சூழல் காணப்படும் திணைக்கள அதிகாரிகளுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் பொலிஸாருக்கு நீதிமன்று பணித்தது.
யாழ்.நகரப் பகுதியில் டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.அதையடுத்துபொதுச் சுகாதாரப் பகுதியினரும், பொலிஸாரும் இணைந்து டெங்கு நுளம்பு ஒழிப்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர். கடந்த வாரம் பொலிஸார் அதிரடியாகக் களமிறங்கி டெங்கு பரவும் சூழலைப் பேணிய பெருமளவானோருக்கு எதிராகப் வழக்குத் தொடர்ந்தனர். அவர்கள் கடந்த வாரம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். பக்கம் 24

## வன்னியில் ஆசிரியர் பற்றாக்குறை ஏப்ரல் மாதத்தின் பின்னர் ஏற்படாது

### வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.19
வன்னியில் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகள் ஏப்ரல் மாதம் நிரப்பப்படும் என்று வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.
வன்னி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. பக்கம் 24

## உயிரைப் பறித்த பகிடிவதை

கொழும்பு, பெப்.19
சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பிரிவில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவியொருவர் பகிடிவதை காரணமாகத் தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். ஹோமாகமவை சேர்ந்த 21 வயதுடைய எஸ்.எஸ். அமாலி என்பவரே உயிரிழந்தவராவார்.
இவர் கடந்த வருடம் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றவர் என்றும் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையை தாங்காமல் கடந்த வருடம் மார்ச் மாதத்தில் வீட்டிற்கு திரும்பி வந்தார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. படிப்பை தொடர்வதற்காக மீண்டும் பல்கலைக் கழகத்துக்குச் சென்ற அமாலி பகிடிவதையால் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார் பக்கம் 24

# திருட்டுப் பேர்வழிகள் பொலிஸில் மாட்டினர்

யாழ்ப்பாணம்,பெப். 19

கச்சேரியடியில் இடம்பெற்ற கொள்ளை முயற்சி, கோப்பாயில் இடம்பெற்ற மோட்டர் திருட்டுகளுடன் தொடர்புடைய இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.கச்சேரியடியை அண்மித்து கடந்த திங்கள் இரவு வீடு புகுந்த கொள்ளையர் வயதான கணவன், மனைவி இருவரையும் வெட்டிவிட்டுக் கொள்ளையடிக்க முற்பட்டவேளை மகன் அங்கு வந்ததால் தப்பிச் சென்றிருந்தனர். அவர்கள் பயன்படுத்திய கத்தி ஒன்றையும் பொலிஸார் அந்த வீட்டிலிருந்து மீட்ட நிலையில் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் குருநகரைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றையவர் இன்னும் கைதாகவில்லை.

இதேவேளை, கோப்பாயில் வீடு புகுந்து தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தைத் திருட முற்பட்ட 3 பேர் கொண்ட குழுவினரைப் பொதுமக்கள் சேர்ந்து துரத்திச் சென்று ஒருவரைப் பிடித்துள்ளனர். ஏனைய இருவரும் தப்பியோடிவிட்ட னர். தாம் பிடித்த திருட்டுப் பயலை மக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

## 'புரொன்ட்லைன்' தடை புதிய அரசால் நீக்கம்




இந்தியாவிலிருந்து வெளிவரும் 'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு இலங்கையில் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த சஞ்சிகையை விநியோகம் செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க சுங்கப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நேர்காணலை மீள் பிரசுரம் செய்த காரணத்துக்காக புரொன்ட் லைனுக்கு இலங்கையில் தற்காலி கத் தடை விதிக்கப்பட்டது. புரொன்ட் லைன் சஞ்சிகையின் 30ஆம் இதழைப் பாதுகாப்பு அமைச்சின் உத் தரவுக்கு அமைய இலங்கை கட்டு நாயக்க சுங்கப் பிரிவினர் தடுத்து வைத்திருந்தனர்.

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனான நேர்காணல் குறித்த சஞ்சிகையில் மீள்பிரசுரம் செய்யப்பட்டிருந்ததால் அது தேசியப் பாது காப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எனக் காரணம் கூறப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சஞ்சிகையினால் தேசியப் பாதுகாப்புக்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதன் மீதான தடையை நீக்குமாறு உத்தரவிட்டுள்ளார். புரொன்ட் லைன் சஞ்சிகை இந்திய ஊடக நிறுவனமான தி ஹிந்து ஊடகத்தின் ஓர் பிரசுரம் என்பது குறிப்பிடத்தக்கது. (த-10)

# இடமாற்றம் இழுத்தடிப்பு

## வன்னி ஆசிரியர்கள் ஆளுநரிடம் முறையீடு

யாழ்ப்பாணம், பெப். 19

இரண்டு வருடங்கள் வெளிமாவட்ட சேவையாற்றிய ஆசிரியர்களை எதுவித நிபந்தனையுமின்றி விடுவிக்கும் அதிகாரிகள், 6 வருடங்கள் சேவையை நிறைவு செய்த எம்மை மட்டும் ஏன் நிபந்தனை அடிப்படையில் விடுவிக்கவேண்டும் என்று கேள்வியெழுப்பியுள்ள வன்னியில் பணிக் காலத்தை நிறைவு செய்த யாழ். மாவட்ட ஆசிரியர்கள், தம்மை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்றுக் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

அவரது அலுவலகத்துக்குச் சென்ற குறித்த ஆசிரியர்கள் அவரிடம் நேரடியாகக் கடிதத்தைக் கொடுத்து இடமாற்றத்தை உடன் நடைமுறைப் படுத்துமாறு கோரியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

05.09.2014 ஆம் திகதியிடப்பட்ட வருடாந்த இடமாற்றச் சபையின் விண்ணப்பத்துக்கு அமைவாக வலயங்களின் இடமாற்றச் சபை கூட்டப்பட்டு வலயங்களால் இடமாற்றத்துக்குத் தகுதியுடையோர் என ஒக்ரோபரில் எமது பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது. இருந்தும் இன்று வரை இடமாற்றம் வழங்கப் படாத நிலையில் பாடசாலையில் நேரசூசியும் இல்லாமல் இன்று வரும் நாளை வரும் என்ற எதிர் பார்ப்புடனே காலம் நகர்கிறது. விலைமதிக்க முடியாத நாள்களை வீண் விரயம் செய்யும் அதிகாரிகளின் பொறுப்பற்ற தனத்தால் அவதிப்படும் எங்கள் குடும்பங்களின் நிலையைக் கருத்திற்கொண்டு உடன் இடமாற்றத்தை வழங்கி எங்களையும் மாற்றத்தைக் கண்டு வாழ வழி செய்ய வேண்டும்.

வன்னிக்குச் சேவையாற்றச் சென்ற வேளை அங்கு மின்சார வசதிகளோ போக்குவரத்து வசதிகளோ வதிவிட வசதிகளோ கிடையாது. ஷெல் வரும், கிபிர் அடிக்கும், கிளைமோர் வெடிக்கும், எப்பொழுது என்ன நடக்கும் என்று தெரியாது கேள்விக்குறியாக வாழ்ந்தபோதும் நாங்கள் கடமையைச் சரியாகச் செய்தவர்கள். எங்களுக்கு இவர்கள் தந்த மரியாதை என்ன?

அண்மையில் 3 வருட இடமாற்றத்துக்காக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் 3 வருடங்கள் வெளிமாவட்ட சேவைக்காகப் பணிக்கப்பட்டவர்களுக்குப் பதிலாக 2 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே விடுவிக்கப்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தச் சுற்றறிக்கையில் வருடாந்த இடமாற்றம் தொடர்பாக எதுவித கருத்தும் தெரிவிக்கப்படாதது எங்களுக்கு ஏமாற்றம் தருவதாகவே அமைந்துள்ளது. அரசமைப்பின் அத்தியாயம் 3 உறுப்புரை 11 இல் வழங்கப்பட்டுள்ளவாறான 'அனைவரும் சட்டத்தின் முன்னால் சமமானவர்கள், சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்' என்ற அடிப்படை உரிமை எமக்கு மீறப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 4 மாதங்களாகியும் வருடாந்த இடமாற்றம் செய்யப்படாதது ஏன்?

2 வருட இடமாற்றம் பெற்று வன்னிக்குச் செல்பவர்கள் திரும்பும் திகதி அறிவிக்கப்படும்போது எங்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை? சமநிலையில்லாத ஆசிரியர்களின் இந்த இடமாற்றக் கொள்கை தேவைதானா? உங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு வழங்கும் சலுகையால் வேதனைப்பட வேண்டியது நாங்களா? 2 வருடம் வெளி மாவட்ட சேவையாற்றும் ஆசிரியர்கள் 2 வருடம் முடிவடைந்ததும் எதுவித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்படும் அதே நேரம் 6 வருடங்கள் சேவையை நிறைவு செய்த நாங்கள் மட்டும் ஏன் நிபந்தனை அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும்?

எனவே உளப்பாதிப்புக்குள்ளாகி இருக்கும் ஆசிரியர்களது சேவையைக் கருத்திற் கொண்டும் எமது சேவையைத் திறம்படச் செய்வதற்கும் இந்த இடமாற்றத்தை உடனடியாக வழங்கி எமது சேவை தொடர உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# இனியபாரதியின் அலுவலக வளாகத்தைத் தோண்டுங்கள்

## திருக்கோவிலில் மக்கள் ஆர்ப்பாட்டம்



அம்பாறை, பெப். 19

முன்னாள் ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.புஷ்பகுமார் என்றழைக்கப்படும் இனிய பாரதியின் காரியாலயம் அமைந்துள்ள வளாகத்தில் புதைக்கப்பட்டவர்களின் எச்சங்களையும், அங்கு புதைக்கப்பட்டுள்ள ஆயுதங்களையும் தோண்டி எடுத்து விசாரணைகள் நடத்துமாறு கோரி மனு கையளிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போன தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச மக்கள் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தை கட்டடத் தொகுதிக்கு முன்பாக நேற்றுப் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர நேரு சந்திரகாந்தன் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ரி.கலையரசன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன், அக்கரைப்பற்று,திருக்கோவில், பொத்துவில் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.கே.கேமந்த டிக்கோவிட்டவிடம் மனுவொன்றைக் கையளித்தார்.

இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு பிரதேசத்தில் பிறந்தவரும் தற்போது திருக்கோவில் பகுதியில் வசிப்பவரும் முன்னாள் ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும், கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.புஸ்பகுமார் என்ற இனியபாரதி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அம்பாறை மாவட்டத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்திலும் பின்னர், முன்னாள் ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராக இருந்த காலத்திலும் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்ட மற்றும் கடத்திச் செல்லப்பட்ட எங்களது உறவுகளை மீட்டுத் தாருங்கள், அவரால் பலவந்தமாக ஏழைகளிடமிருந்து அபகரிக்கப்பட்ட உடைமைகள், சொத்துக்களை மீட்டுத்தாருங்கள்.அவர் இருந்த காரியாலயம் அமைந்துள்ள வளாகத்தில் புதைக்கப்பட்டவர்களின் எச்சங்களையும் அங்கு புதைக்கப்பட்டுள்ள ஆயுதங்களையும் தோண்டி எடுத்து நீதி விசாரணைகள் நடத்துங்கள். தற்போது அவர் வசிக்கின்ற திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தைக்கு அருகிலுள்ள வீட்டில் பதுங்கு குழியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் மற்றும் நகைகள் பற்றிய விசாரணைகளை நடத்துங்கள்-என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்ப கட்டப் போராட்டமாக இருப்பதுடன் தொடர்ந்து நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும்' அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் இதன்போது தெரி வித்தார்.

திருக்கோவில், தம்பிலுவில், ஆலையடிவேம்பு, கண்ணகிபுரம், பனங்காடு, வினாயகபுரம் போன்ற பிரதேசங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட் டத்தில் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், 'பாரதியே நீ கடத்திச் சென்ற என் மகன்எங்கே?','சீலன்பிடித்துச்சென்ற பிள்ளைகள் எங்கே?', 'அடக்குமுறையால் அழித்துவிட்டீரே எம் மக்களை', 'அரசே? அடைத்து விடு பாரதியைச் சிறையில்' போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-10)

# ஐ.நாவின் கால அவகாசம் இன அழிப்பை ஊக்குவிக்கும்

## அமெ.அதிகாரிகளிடம் ரவிகரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 19

ஐக்கிய நாடுகள் சபையினால் வழங்கப்பட்ட கால அவகாசம், இலங்கையின் இன அழிப்பை ஊக்குவிப்பதாகவே அமைகின்றது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார். அமெரிக்க தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரிகளை நேற்றுச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட வடக்குமாகாண சபை, 60 ஆண்டுகளாக இங்கே தமிழர்களுக்கு எதிராக இன அழிப்பு நடைபெற்று வருகிறது என ஆதாரங்களுடன் தீர்மானம் வெளியிட்டிருக்கின்றது.

இதை தமிழர்களின் ஒருமித்த அதிகாரபூர்வமான குரலாக அங்கீகரித்து, இங்கு நடந்ததை வெறுமனே மனித உரிமை மீறல் என்றோ போர்க்குற்றம் என்றோ மட்டுப்படுத்தி அடையாளப்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும்.

அபகரிக்கப்பட்ட தமிழர் நிலங்



களை விடுவிப்பதற்கு தற்போதைய அரசிடம் நீதியான அணுகுமுறை இல்லை. மத அடையாளங்கள் திணிப்பு தொடர்பில் எந்த மாற்றமும் இல்லை. ஆக, கடந்த தேர்தலில் நடந்தது ஆள் மாற்றம் மட்டுமே என்பது தெளிவாகியுள்ளது. இந்த நிலையில் சர்வதேச விசாரணை அறிக்கையை வெளியிடாமல் இலங்கைக்கு கொடுக்கும் கால அவகாசமானது தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பை ஊக்குவிக்கவே பயன்படப்போகிறது-என்று அமெரிக்க அதிகாரிகளிடம் அவர் எடுத்துக்கூறியுள்ளார். (த-5)

# அச்சுறுத்தலானவர்கள் ஆபிரிக்க அணியினர்

## எச்சரிக்கின்றார் சச்சின்



தென்னாபிரிக்க அணியினர் களத்தடுப்பில் துடிப்பானவர்கள். பந்துவீச்சில் மிரட்ட ஸ்ரெயின் காத்திருப்பதால், இந்திய வீரர்கள் கூடுதல் கவனத்துடன் விளையாட வேண்டும். இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் தெரிவித்தார்.

உலகக் கிண்ணத் தொடரில், தென்னாபிரிக்க அணியை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்தியா எதிர்கொள்கின்றது. உலகக் கிண்ணத்தில் இதுவரை இந்தியா ஒரு போதும் தென்னாபிரிக்க அணியை வெற்றி கொள்ளவில்லை. இந்த நிலையில் இது குறித்து இந்திய கிரிக்கெட் ஜம்பவான் சச்சின் கூறியதாவது, தென்னாபிரிக்க வீரர்கள் மிகவும் துடிப்பானவர்கள். பாகிஸ்தான் அணியை விட களத்தடுப்பில் சிறப்பாக செயற்படுவார்கள். பந்தை அருகில் தட்டிவிட்டு, ஓர் ஓட்டம் எடுப்பது

பக்கம் 04




## மிரட்டக் காத்திருக்கின்றோம்

இங்கிலாந்து அணியை மிரட்டுவதற்கு காத்திருப்பதாக, ஸ்கொட்லாந்து அணியின் தலைவர் பிரஸ்டன் மம்சென் தெரிவித்துள்ளார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் கத்துக்குட்டி அணிகளாக கருத்தப்பட்ட பல அணிகளும் பலம் வாய்ந்த அணிகளுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றன. அந்த வகையில் சிம்பாப்வே, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து அணிகள் எதிரணியை மிரட்டியெடுக்கின்றன. பயிற்சி கிரிக்கெட்டில் அயர்லாந்தை ஒரு கைபார்த்த சிறிய அணியானஸ்கொட்லாந்து, 2 ஆவது

பக்கம் 04

# இந்தியா

## அரையிறுதிக்குக் கூட முன்னேறாது



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறாது. அந்த அணி அரையிறுதிக்குள் நுழைவதற்கு தகுதியான அணியும் அல்ல. எனது கணிப்புப்படி ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை அணிகளே அரையிறுதிக்கு தகுதி பெறும் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக் ஹசி தெரிவித்துள்ளார்.

இந்திய அணி வீரர்களின் செயற்பாடு தற்போது அருமையாக உள்ளது. திறமையுடன் காணப்படும் இவர்கள், எதிர்வரும் ஆட்டங்களில் இன்னும் எழுச்சி காண்பர். இந்திய அணி வீரர்கள் 'பவுன்சரையும்' எதிர் கொள்ள பழகிக் கொண்டனர். இதை, டெஸ்ட் தொடரிலேயே, கவனித்தேன்.

விராட் ஹோக்லி, ஸ்டீவன் ஸ்மித்துடன் நான் இணைந்து செயல்பட்டது கிடையாது. இதனால், இவர்களை ஒப்பிட்டு பேசுவது கடினம். இருவரும் நேர் எண்ணம் கொண்டவர்கள்.

இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேற வாய்ப்பு இல்லை. ஏனெனில், என் கணிப்புப்படி ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் அரை யிறுதிக்குள் நுழையும். சம்பியன் பட்டம் வெல்ல, ஆஸ்திரேலியாவுக்கு வாய்ப்பு உள்ளது. இருப்பினும், இறுதி ஆட்டம் இடம்பெறுவதற்கு இன்னமும் அதிகமான காலம் இருக்கின்றது. இதனால் இதனை உறுதியாகச் சொல்ல முடியாது – என்றார். (5–ரி)

## 16 கோடி

### யூவி தகுதியானவர்

உலகக் கிண்ண இந்திய அணியில் தேர்வு செய்யப்படாத யுவராஜ் சிங், ஐ.பி.எல். ஏலத்தில் 16 கோடிக்கு விலை போனார். அந்தத் தொகைக்கு யுவராஜ் சிங் தகுதியானவர்தான் என்று இந்திய முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

யுவராஜுக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர் மிகச் சிறப்பான வீரர். அவர் கடந்து வந்த பாதையைப் பாருங்கள். இந்திய கிரிக்கெட்டுக்கு அவர் மிகச் சிறந்த சேவையை ஆற்றியுள்ளார். 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணதத் தொடரின் போது அவர் தான்

பக்கம் 04

# வங்கப் புலிகள் தாண்டவம்



## இரையாகியது ஆப்கான்

அடுத்த சுற்றுக்கே நுழையாத அணி என்று கணிக்கபட்டதால் பெரிதளவான எதிர்பார்ப்புக் களோ அல்லது விறுவிறுப்புக்களோ ஆட்டத்தில் இருக்கவில்லை. இருந்த போதிலும் 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பதைப்போல ஆப்கானை ஆதரிக்கவும் ரசிகர்கள் வந்திருந்து ஆதரவினை வழங்கினர்.

தமது முதலாவது உலக்கிண்ண தொடரில் பங்கேற்கும் ஆப்கானை குறைத்து மதிப்பு போட்டு களமிறங்கினர். இந்தியாவையே பயிற்சி ஆட்டத்தில் புரட்டி எடுத்தவர்கள் ஆப்கானியர்கள்.

பந்து வீச்சுக்கு தரமான அணி. அவர்களுக்கு பங்களாதேஷே பந்து வீசும் வாய்ப்பை வலிந்து வழங்கியது. இக்பால் – ஹக் ஜோடிக்கு ஹசன் – சடான் ஜோடி அழுத்தி வீசியது பந்துகளை. இக்பால் ஆட்டமிழக்கும் நடுவர்களின் பக்கச் சார்பால் தவறவிட்டது ஆப்கான். தமிம் இக்பால் 6 ஓட்டங்கள்.

பக்கம் 04

## மனம் தளர வேண்டாம்



இந்தியாவுடனான ஆட்டத்தில் தோற்றதற்காக மனம் தளர வேண்டாம் என்று பாகிஸ்தானிய வீரர்களிடம் தெரிவித்துள்ளார், முன்னாள் அணித் தலைவர் இம்ரான் கான்.

நீண்ட நாள்களுக்குப் பிறகு கிரிக்கெட் ஆட்டத்தை முழுதும் பார்த்த இம்ரான்கான் சமூக வலைத்தளம் மூலம் பாகிஸ்தான் வீரர்களுக்கு ஆறுதல் தெரிவித்துள்ளார். 'பாகிஸ்தான் வீரர்கள் தோல்வியினால் மனம் தளர்ந்து விட வேண்டாம். ஆட்டத்திறனை துல்லியமாக ஆய்வு செய்தால், இந்தத் தோல்வி ஒரு மறைமுக ஆசீர்வாதமே. நான்

பக்கம் 04

## பந்து வீசத் தடை

பங்களாதேஷ் அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சமியுல்லா ஐஷன் வாரி முதல் பந்துப் பரிமாற்றத்தில் பிட்ச்சில் ஓடியதால் எச்சரிக்கப்பட்டார். அதன் பின் 2 ஆவது பந்துப் பரிமாற்றத்திலும் பிட்ச்சில் ஓடியதற்காக எச்சரிக்கப்பட்டார். இரண்டு முறை எச்சரிக்கை விடுக்கப்பட்டதால், அவர் பந்து வீச நடுவர்கள் தடை விதித்தனர்.

இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் வீரர் முகமது இர்பான் பிட்ச்சில் ஓடியதற்காக 2 முறை எச்சரிக்கப்பட்டார். ஆனால் அவர் இரண்டு முறையிலும் ஒரு பக்கமாகவே பிட்ச்சில் ஓடினார். ஆனால் ஐஷன்வாரி ஒரே முனையில் இரண்டு முறை தவறு செய்ததால் பந்து வீச அனுமதிக்கப்படவில்லை. (5–ரி)

## பதட்டமாக இருந்தது

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்கும் போது கொஞ்சம் பதட்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் சமாளித்து ஆரம்பத்தில் ஆடியதும், பின்னர் சிறப்பாக ஆட முடிந்தது என்று தெரிவித்துள்ளார் ரெய்னா.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 56 பந்துகளில் 74 ஓட்டங்களை ரெய்னா எடுத்தார். தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்துக்காக ரெய்னா தயாராகிக் கொண்டுள்ளார். இதன் போது அவர் தெரிவித்ததாவது,

பொதுவாக எப்போதும் பின் வரிசையில் தான் துடுப்பெடுத்தாடுவேன். கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் அதிக ஆட்டங்களில் நான் களமிறங்கவில்லை. இருப்பினும் யுவராஜ் சிங்கின் துடுப்பாட்டம், முடிக்கும் திறனை பார்த்தேன்.

இவரிடம் இருந்தும், அணித் தலைவர் டோனியிடமிருந்தும் நிறைய விடயங்களை கற்றுக் கொண்டேன். கடந்த தொடரில் யுவராஜ் அசத்தியதை போல, இந்த முறை துடுப்பாட்டம், களத்தடுப்பு, பந்து வீச்சு என்று சிறப்பாக செயல்பட ஆசைப்படுகிறேன். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தின் அன்று காலை

பக்கம் 04




எப்படி இருக்கிறது?
லகான் திரைப்படத்தை தற்போதைய இந்திய அணிக்கு பொருத்தியுள்ளனர். இணையத்தில் உலா வரும் படங்களில் இதுவுமொன்று.

## பாகிஸ்தான் பயிற்றுவிப்பாளர் 'பாய்... பாய்...'

இந்திய அணியுடனான தோல்வியைத் தொடர்ந்து பாகிஸ்தான் வீரர்கள் செயற்பாட்டில் வெறுப்படைந்த அந்த அணியின் களத்தடுப்பு பயிற்சியாளர் கிரான்ட் லுடென் தனது பணியிலிருந்து விலகுவதாக கடிதம் கொடுத்துள்ளார்.

பாகிஸ்தான் அணி வீரர்கள் சிலர் அவரிடம் நடந்துக்கொள்ளும் முறையில் கிரான்ட் லுடென் பெரிதும் வெறுப்பு அடைந்திருந்தார். மேலும் இந்தியாவுக்கு எதிரான முதல் ஆட்டத்தில் அவர்களின் மோசமான ஆட்டத்தில் ஏமாற்றம் அடைந்திருந்தார். குறிப்பாக ஹோக்லியின் பிடியெடுப்புக்களை பாகிஸ்தான் வீரர்கள் தவறவிட்டிருந்தனர். இதனால் பாகிஸ்தான் அணி தோற்க வேண்டி ஏற்பட்டது.

இதனால் தனது பதவி விலகக் கடிதத்தை பாகிஸ்தான் கிரிகெட் அணி நிர்வாகத்திடம்

பக்கம் 04

# வங்கப்புலிகள் தாண்டவம் இரையாகியது ஆப்கான்

2015 உலகக் கிண்ணம்

பங்களாதேஷ் எதிர் ஆப்கானிஸ்தான்
105 ஓட்டங்களால் பங்களாதேஷ் வெற்றி

நாணயச் சுழற்சி பங்களாதேஷ்

பங்களாதேஷ்

| வீரர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4' | 6' |
|---|---|---|---|---|---|
| ஹக்கியு | LBW B அஸ்ரப் | 29 | 55 | 04 | 0 |
| இக்பால் | C ஷசாய் B அஸ்ரப் | 19 | 42 | 0 | 0 |
| சார்கர் | LBW B சடான் | 28 | 25 | 03 | 01 |
| மஹ்மதுல்லா | C ஷசாய் B சடான் | 23 | 46 | 0 | 0 |
| சகிப் அல்ஹசன் | B ஹமிட் | 63 | 51 | 06 | 01 |
| ரஹிம் | C சென்வாரி B நபி | 71 | 56 | 06 | 01 |
| ரஹ்மான் | B ஹமிட் | 03 | 08 | 0 | 0 |
| மோர்ராஷா | B அலாம் | 14 | 09 | 03 | 0 |
| எம்.ஹக்கியு | RO B ஷசாய் | 03 | 03 | 0 | 0 |
| ஹொசைன் | ஆட்டமிழப்பில்லை | 0 | 02 | 0 | 0 |
| அஹமட் | B அலாம் | 01 | 03 | 0 | 0 |
| உதிரிகள் | | 13 | | | |

| வீரர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஹாசன் | 10 | 61 | 02 | 0 |
| சடான் | 07 | 20 | 02 | 01 |
| அலாம் | 09 | 55 | 02 | 0 |
| அஸ்ரப் | 09 | 32 | 02 | 03 |
| நபி | 09 | 58 | 01 | 0 |
| அஹமடி | 4.5 | 32 | 0 | 0 |
| சென்வாரி | 1.1 | 02 | 0 | 0 |

TOTAL 267 (50)

1-47 (ரமீம்), 2-52 (ஹக்கியு), 3-102 (சர்கார்), 4-119 (மகமதுல்லா), 5-233 (சகிப் அல் ஹசன்), 6-241 (ரஹ்மான்), 7-247 (ரஹீம்), 8-263 (எம்.ஹக்கியு), 9-263 (மோர்ராஷா), 10-267 (அஹமட்)

ஆப்கானிஸ்தான்

| வீரர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4' | 6' |
|---|---|---|---|---|---|
| அஹமட் | C & B மோர்ராஷா | 01 | 02 | 0 | 0 |
| ஷசாய் | LBW B ஹொசைன் | 01 | 05 | 0 | 0 |
| மங்கல் | C ஹொசைன் B மஹ்மதுல்லா | 27 | 57 | 01 | 0 |
| ஸ்ரானிக்சை | C மஹ்மதுல்லா B மோர்ராஷா | 01 | 07 | 0 | 0 |
| சென்வாரி | RO B ரஹிம் | 42 | 75 | 0 | 0 |
| நபி | C சர்கார் B மோர்ராஷா | 44 | 43 | 05 | 0 |
| சடான் | LBW B ஹசன் | 17 | 34 | 01 | 0 |
| அஸ்ரப் | C மோர்ராஷா B ஹசன் | 10 | 15 | 0 | 01 |
| அலாம் | RO B ரஹிம் | 14 | 12 | 02 | 01 |
| எச்.ஹசன் | C ஹக்கியு B அஹமட் | 0 | 05 | 0 | 0 |
| எஸ்.சடான் | ஆட்டமிழப்பில்லை | 02 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | | 03 | | | |

| வீரர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மோர்ராஷா | 09 | 20 | 03 | 02 |
| ஹொசைன் | 06 | 27 | 01 | 0 |
| அஹமட் | 7 | 23 | 01 | 0 |
| சகிப் அல் ஹசன் | 8.5 | 43 | 02 | 0 |
| மகமதுல்லா | 8 | 31 | 01 | 01 |
| சர்கர் | 3 | 13 | 0 | 0 |
| ரஹ்மான் | 01 | 04 | 0 | 0 |

TOTAL 162 (42.5)

1-2 (அஹ்மட்), 2-2 (ஷசாய்), 3-3 (ஸ்ரானிக்சை), 4-65 (மங்கல்), 5-78 (சென்வாரி), 6-136 (சடான்), 7-136 (நபி), 8-154 (அஸ்ரப்), 9-154 (எச்.ஹசன்), 10-162 (எஸ்.சடான்)

ஆட்ட நாயகன் ரஹீம்



ஆட்ட நாயகன் முஷ்பிகுர் ரஹிம்

ஹசன் வீசிய பந்து கால்காப்பில் தாக்கியது. நடுவரிடம் கோரிக்கை. ஆட்டமிழப்பு இல்லை என்று மறுப்பு. மூன்றாம் நடுவருக்குச் செல்லும் வாய்ப்பை ஆப்கான் பயன்படுத்த தவறியது. ரீப்பிளேயில் ஆட்டமிழப்பு தெளிவாகத் தெரிந்தது. கிடைத்த வாய்ப்பை ஆப்கான் வீணடித்து விட்டது. ஓட்டங்களைப் பெற முடியவில்லை. நிதான ஆட்டம். அரைவாசிப் பந்துப் பரிமாற்றத்திலேயே நூறு ஓட்டங்களை எட்ட முடிந்தது. சகிப் அல் ஹசன் – முஷ்பிகுர் ரஹிம் இணைந்தது. அனு பவ ஜோடி. அறிமுக ஆப்கானை திணறடித்தது. ஆளுக்கொரு அரைச் சதத்தை அடித்துக் கொண்டனர்.

இறுதி நேரத்தில் மீண்டெழுந்தது ஆப்கான். வங்கப் புலிகளின் பின்வரிசையை ஆட்டம் காணச் செய்தனர். இதனால் 267 ஓட்டங்களுக் குள் முடிந்தது ஆட்டம்.

கடினமான வெற்றி இலக்கு. களம்புகுந்தவர்களை வங்கப் புலிகள் வாட்டி வதைத்தனர். நிற்க இடம் கொடுக்காமல் அடுத்தடுத்து வெளியேற்றினர். மத்திய வரிசையில் சென்வாரி – நபி இணை கொஞ்சம் நம்பிக்கை கொடுத்து ஆடினர். ஆனாலும் அனுபவ பங்களாதேஷ் அறிமுக அணியையை அடக்கி விட்டது.

162 ஓட்டங்களுக்குள் ஆப்கான் தன்னை அடக்கிக் கொண்டது. வங்கப் புலிகள் வரிந்து கட்டி முதல் வெற்றியை, நடப்பு உலகக் கிண்ணத்தில் பெற்று விட்டார்கள். (5–ரி)

## மனம் தளர வேண்டாம்

ஆட்டத்தைப் பார்த்தவரை நிறைய திறன்கள் வெளிப்பட்டன, ஆனால் உத்தி ரீதியாக முன்னேற்றம் தேவை. பந்துவீச்சைப்பொறுத்தவரை இர்பான், வஹாப் ரியாஸ், யாசிர் ஷா ஆகியோர் நன்றாக வீசுகின்றனர். துடுப்பாட்ட வீரர்கள் ஒரு நல்ல இலக்கை நிர்ணயித்தால் இந்த பந்து வீச்சாளர்கள் நிச்சயம் வெற்றிக்கு இட்டுச் செல்வார்கள். யுனிஸ் கான் அடுத்த ஆட்டங்களிலும் ஆடுவது அவசியம்' – என்றார். (5–ரி)

# இவர்களை மறக்க முடியுமா

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் சில முக்கியமான வீரர்களின் பங்களிப்பு இல்லாதது ரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்துள்ளது. கடந்த காலங்களில் ஒரு உலகக் கிண்ணத்திலிருந்து மற்ற உலகக் கிண்ணத்துக்குச் செல்லும் போது, யாராவது ஒரு முக்கியமான – பிரபலமான – பரிச்சயமான வீரரைத்தான் ரசிகர்கள் இழப்பார்கள். ஆனால் கடந்த உலகக் கிண்ணத்திலிருந்து இந்த உலகக் கிண்ணத்துக்கு இடையில் ரசிகர்கள் ஒரு தொகுதி பிரபல வீரர்களை இழந்து விட்டார்கள்.

**சச்சின் டெண்டுல்கர்**

இந்திய அணி இந்த உலகக் கிண்ணத் தொடரில் சச்சின் டெண்டுல்கர் இல்லாமல் களமிறங்கி விளையாடி வருகிறது. கிரிக்கெட் துறையில் பல சாதனைகளை படைத்த சச்சின், இளம் வீரர்களுக்கும் முன்னோடியாக திகழ்கிறார்.

**ஷேவாக்**

தனி ஆளாக ஆட்டத்தின் முடிவை மாற்றும் திறன் படைத்த அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக்கை இந்த உலகக் கிண்ணப் தொடரில் இந்திய அணி இழந்துள்ளது.

**ரிக்கி பொண்டிங்**

ஆஸ்திரேலிய அணியின் சிறந்த அணித் தலைவர். அதிக ஓட்டங்களை குவித்தவர், அதிக பிடிகளை எடுத்தவர் என சாதனை படைத்த ரிக்கி பொண்டிங் இல்லாமல் ஆஸ்திரேலிய அணி இந்த உலகக்கிண்ண தொடரில் விளையாடி வருகிறது. இவர் இரண்டு தடவைகள் ஆஸ்திரேலியாவுக்கு கிண்ணம் வென்று கொடுத்தவர்.

**கிரேம் ஸ்மித்**

தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர். சிறந்த அணித் தலைவரான கிரேம் ஸ்மித் இல்லாமல் தென்னாபிரிக்க அணி இந்த உலகக்கிண்ணத் தொடரில் கலந்து கொண்டுள்ளது.

**கலிஸ்**

சிறந்த சகலதுறை வீரராக இருக்கும் கலிஸையும் தென்னாபிரிக்கா இந்த உலகக் கிண்ணத்தில் இழந்துள்ளது. பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் மிரட்டும் கலிஸ் அதிக ஓட்டங்கள் எடுத்து வீரர்கள் பட்டியலிலும் இடம் பிடித்துள்ளார்.

**சந்தர்போல்**

பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அசத்தல் ஆட்டக்காரார் சந்தர் போலை அந்த அணி இந்த உலகக் கிண்ண தொடரில் தவறவிட்டுள்ளது.



**யுவராஜ்**

கடந்த உலகக் கிண்ணத் தொடரில் தொடர் ஆட்டநாயகன் விருது வென்ற அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ் இல்லாமல் இந்திய அணி தற்போது விளையாடி வருகிறது.

**ஜேக்கப் ஓரம்**

உலகக் கிண்ணத் தொடரில் சிறந்த பந்து வீச்சாளராக வலம் வந்தவர் நியூஸிலாந்தின் ஜேக்கப் ஓரம். களத்தடுப்பிலும் அசத்தும் ஓரம் இல்லாமல் நியூசிலாந்து அணி இந்த உலகக் கிண்ணத்தில் விளையாடி வருகிறது.

**பிரட்லீ**

மின்னல் வேகப்பந்து வீச்சாளர் பிரட்லீ இல்லாமல் ஆஸ்திரேலிய அணி இந்த உலகக் கிண்ணத் தொடரை விளையாடி வருகிறது. உலகக்கிண்ணத்தில் அதிக இலக்குகள் வீழ்த்தியவர்கள் வரிசையிலும் இடம் பிடித்துள்ளார்.

**முத்தையா முரளிதரன்**

தனது சுழற்பந்தால் எதிரணியை கலங்கடிக்கும் ஜாம்பவான் முத்தையா முரளிதரனை இலங்கை அணி இந்த உலகக் கிண்ணத்தில் தவறவிட்டுள்ளது. (5–ரி)

# பாகிஸ்தான் பயிற்றுவிப்பாளர்

சமர்ப்பித்துள்ளார். இருப்பினும் நிர்வாகம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பாகிஸ்தான் அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக தொடர்ந்து நீடிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. ஆன்ால் அவர் தனது முடிவில் மாற்றமில்லை என்று தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் அவர் மீது தொடர் அழுத்தத்தை பிரயோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளராக இருந்த கிராண்ட் லுடென் 2014 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டவர். அப்போதே தனது எதிர்காலம் குறித்து பயந்த அவர் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்க மறுத்தார் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. (5–ரி)

## யூவி தகுதியானவர்

தொடர் நாயகன். பின்னர் அவருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது. அதன் பிறகு மீண்டும் வந்து அசத்தினார்.

யுவராஜ் சிங் தனது ஆட்டத்தின் மூலம் டில்லி மைதானத்தை ரசிகர்களால் நிரப்புவார். உலகக் கிண்ண இந்திய அணியில் யுவராஜ் இணைத்துக் கொள்ளப்படாதது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அவர் திறமையான வீரர். டில்லி அணி கொடுத்த 16 கோடிக்கு அவர் தகுதியானவர்தான் – என்றார். (5–ரி)

# அச்சுறுத்தலானவர்கள் ஆபிரிக்க அணியினர்

கடினம். தொடக்க ஜோடி சிறப்பான அடித்தளம் அமைக்க வேண்டும்.

ரோகித் சர்மா அடுத்த ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார். அணித் தலைவர் டோனியின் திறன் கவலை தருவதாக இல்லை. இந்திய அணி 320 ஓட்டங்களுக்கு அதிகமாக ஓட்டங்களை குவிப்பதை இலக்காக கொள்ள வேண்டும். ஏனெனில், கடந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் சிறப்பாக விளையாடி இருந்தால், 300 ஓட்டங்களை எட்டி இருக்கும்.

தென்னாபிரிக்கா வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் நம்ப முடியாத திறமை வாய்ந்தவர். இவரின் பந்துவீச்சை சரியாக கணித்து விளையாடுவது கடினம் – என்றார். (5–ரி)

## பதட்டமாக இருந்தது

சற்று பதட்டமாக இருந்தது. ஷிகர் தவான் ஆட்டமிழந்ததும், என்னை துடுப்பெடுத்தாட அனுப்பினர். களத்தில் 15 முதல் 20 பந்துகளை சந்தித்த பின், அன்று எனக்கான நாள் தான் என்று புரிந்து கொண்டேன். ஹோக்லியுடன் ஆலோசித்து, களத்தில் நீண்ட நேரம் தாக்குப் பிடித்தேன். திட்டமிட்டு ஓட்டங்களைச் சேர்த்து வெற்றிக்கு உதவினேன் – என்றார். (5–ரி)

# முன்னேற்றம் தேவை



எங்களது அணியின் ஆட்டத்தில் முன்னேற்றம் தேவை. ஸ்கொட்லாந்து வீரர்கள் சிறப்பாக விளையாடினர் என்று நியூஸிலாந்து அணியின் தலைவர் பிரண்டன் மக்கலம் தெரிவித்துள்ளார். எங்கள் வீரர்களின் பந்துவீச்சு அருமையாக இருந்தது. ஆனால், துடுப்பாட்டத்தில் இன்னும் முதிர்ச்சி அவசியம். தேவையில் லாமல் அடித்து விளையாடி இலக்குகளை பறிகொடுத்தது கவலை அளிக்கிறது.

மொத்த 'ரன் ரேட்டை' அதிகரிக்க வேண்டும் என்பதற்காக அதிரடியில் இறங்கியதில் தவறில்லை.

# மிரட்டக் காத்திருக்கின்றோம்

பயிற்சி ஆட்டத்தில் 3 ஓட்டங்களில் தோற்ற போதிலும் இறுதிவரை மேற்கிந்தியத் தீவுகளை புரட்டியெடுத்தது. இதைத் தொடர்ந்து நியூஸிலாந்து அணியையும் கடந்த ஆட்டத்தில் விழிபிதுங்க வைத்தது ஸ்கொட்லாந்து.

இந்த நிலையில் அந்த அணியின் சிறப்பான செயல்பாடு குறித்து அந்த அணியின் அணித்தலைவர் பிரஸ்டன் மம்செ்ன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் குறைவான ஓட்டங்கள் எடுத்த போதிலும் அதை வைத்துக் கொண்டு எங்களது வீரர்கள் வெளிப்படுத்திய போராட்டம் பெருமை அளிக்கிறது. உலகக் கிண்ணத்தில் நாங்கள் ஒரு ஆட்டத்தில் கூட வென்றதில்லை என்ற புள்ளி விவரங்களால் வெட்கப்பட வேண்டியதில்லை.

ஏனெனில் நாங்கள் அனுபவம் இல்லாத அணி. அடுத்து இங்கிலாந்துக்கு எதிரான மோதலுக்கு தயாராக இருக்கிறோம். இங்கிலாந்து அணியை 23 ஆம் திகதி ஆட்டத்தில் மிரட்டவுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (5–ரி)

ஆனால், அடுத்தடுத்து இலக்குகள் சரிந்த பிறகு கொஞ்சம் பொறுப்புடன் விளையாடி இருக்கலாம். எளிய இலக்கு என்பதால் சமாளித்துவிட்டோம்.

வலுவான இங்கிலாந்து அணியுடன் நாளை மோதும் போது இப்படி அலட்சியமாக செயல்பட முடியாது. அந்த அணியை வீழ்த்த கடுமையாகப் போராட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்துள்ளோம். எங்கள் ஆட்டத்தில் இன்னும் முன்னேற்றம் தேவை. ஸ்கொட்லாந்து வீரர்கள் சிறப்பாக விளையாடி நெருக்கடி கொடுத்தனர் – என்றார். (5–ரி)

# தேவையென்றால் வாருங்கள்



பாகிஸ்தான் அணி வீரர்களுக்கு ஆலோசனைவழங்க நான் தயார். அதற்காக பாகிஸ்தான் நிர்வாகத்துக்கு முன்னால் போய் நிற்க முடியாது. தேவையென்றால் என்னிடம் வாருங்கள். இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

நான் தற்போது ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் தான் தங்கி இருக்கிறேன். உலகக் கிண்ணத்தில் விளையாடும் பாகிஸ்தான் அணி வீரர்களுக்கு ஆலோசனைகள் கூறி உதவவும் தயார்.

ஆனால், அணி நிர்வாகத்திடம் இருந்து எனக்கு இதுவரை அழைப்பு வரவில்லை. மற்ற நாட்டு வீரர்களுக்கு குறிப்பாக; இந்திய அணி வீரர்களுக்கு நான் ஆலோசனைகூறுவதாக குறை கூறுபவர்கள், சொந்த நாட்டு அணி, என்னை அலட் சியப் படுத்துவதை கவனத் தில் கொள்ளவில்லை. நான் என்னதான் செய்ய முடியும்.

கடாபி விளையாட்டரங்கு முன்னால் போய் நின்று கொண்டு எனக்கு வேலை கொடுங்கள் என்று கெஞ்ச முடியாது.

எனது அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தான் அணி நிர்வா கிகள் ஒருவருக்கும் தோன்றாதது துரதிர்ஷ்டவசமானது. இதுமிகுந்தவேதனைஅளிக்கிறது – என்றார். (5–ரி)

# இலங்கையும் சாதனையும்

உலகக் கிண்ண வாசகர் களம்

1996ஆம் ஆண்டு இலங்கை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. நடத்திய நாடே உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது இதுவே முதல் முறை. இலங்கை 1996ஆம் ஆண்டு அதிர்ஷ்டத்தால் கூட வென்றது என்று கூறலாம். ஏனெனில் இலங்கையில் நடந்த குண்டு வெடிப்புக் காரணமாக ஆஸ்திரேலியா– மேற்கு இந்திய அணிகள் இலங்கைக்கு வர மறுத்ததால் இலங்கை வெற்றி என்று அறிவிக்கப் பட்டது.

இறுதியில் ஆஸ்திரேலியாவை வெற்றி கொண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. அர்ஜுனரணதுங்க ஒரு ராசியுள்ள அணித் தலைவர் என்று சொல்ல வேண்டும்.

ஏனெனில் 2007 ஆம் ஆண்டு மஹேல, 2011ஆம் ஆண்டு சங்ககார போன்ற அணித்தலைவர்கள் சிறந்த முறையில் தொழிற்பட்டும் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு பறிபோனது.

இப்போதைய இலங்கை அணி மிக அனுபவம் வாய்ந்த வீரர்களுடன் காணப்படுகின்றது. குறிப்பாக சாதனை மன்னன் சங்ககார மற்றும் மஹேல, டில்சான் போன்ற துடுப்பாட்ட வீரர்களும் குலசேகர ஹேரத் மலிங்க போன்ற சிறந்த பந்து வீச்சாளர்களும் காணப்படுவதால் கிண்ணம் வெல்லும் அதிக வாய்ப்பு இலங்கை அணிக்கே காணப் படுகின்றது.

மத்தியுஸும் ஒரு ராசியுள்ள அணித்தலைவர்– அவர் தலைமை தாங்கிய ஆட்டங்கள் அதிகம் வெற்றி பெற்றுள்ளன. மத்தியூஸ் தலைமை தாங்குவதும் இலங்கைக்கு கிண்ணம் வெல்லும் வாய்ப்பு சாதகமாக அமைகிறது.

எல்லாவிதமான சாதனைகளிலும் இலங்கை வீரர்கள் அடுக்கடுக்காக காணப் படுகின்றனர். குறிப்பாக சங்ககாரவை பார்த்தோமானால் உலகில் 2 ஆவது கூடிய ஓட்டங்களை பெற்ற வீரர் என்ற பெருமை பெற்றுள்ளதோடு, கில்கிறிஸ்டின் சாதனையை முறியடித்துள்ளார். இப்படி பல சாதனைகளைச் செய்துள்ளார்.

இப்படி அனுபவம் வாய்ந்த வீரர்களைக் கொண்டு காணப் பட்ட இலங்கை அணி இந்த ஆண்டு உலகக் கிண்ணத்தை வெல்லும் என்ற நம்பிக்கை நிறையவே இருக்கின்றது.

*ச.குகேஸ், மீசாலை மேற்கு, மீசாலை.*

Tilko Jaffna City Hotel



TILKO
JAFFNA CITY HOTEL
✓ LUXURY ROOMS ✓ BANQUET HALL
✓ SWIMING POOL ✓ SAUNA & GYM
✓ RESTAURANT ✓ CONFERANCE HALL
✓ STEAM BATH
70/6, K.K.S. Road, Jaffna. Sri Lanka.
Tel: 021 222 5969, Fax : 021 222 7291
e.mail : info@cityhoteljaffna.com Web: www.cityhoteljaffna.com

## தினம் ஒரு பரிசுப் போட்டி 8

பாகிஸ்தான் – மே.இந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையில் நாளைமறுதினம் (21.02.2015) அன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

..........................................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தொலைபேசி இல.: ..........................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (20.02.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

## போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

## அரையிறுதி பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)...................... 2)......................

3)...................... 4)......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு

மாபெரும் இறுதிப் போட்டிக்கு
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES Jaffna
021 221 9910 / 077 710 2131
வழங்கும் 5 லட்சத்தை வெல்லுங்கள்

## மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

......................

தொலைபேசி

......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2 1/2 லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1 1/2 லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

**லக்கி பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கன்ன் போட்டோ**
165 பிரதான வீதி,பருத்தித்துறை.
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்**
85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சேலை**
இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்தி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்**
பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி.
**சிவன் ஸ்ரோர்ஸ்**
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வெலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
**ஓம் கணேசா**
இல01, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**
14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
இல. 376 பிரதான வீதி யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோஸ்**
சித்தங்கேணி வீதி பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்**
சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ**
கே.கே.எஸ் வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்**
ஏ9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி**
ஏ 9 வீதி கொடிகாமம்.
**கஜானன்**
அல்லாரை வீதி மீசாலை சந்தி
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி.
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்**
ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்**
31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுபாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்.பி.சி.எஸ்)** பூநகரி.
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயண்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்**
விசுவமடு.
**வரணா புக்சொப்**
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்.
**ராஜாதேனீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
வரணி.
**விநாயகர் களஞ்சியம்**
அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,**
நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்**
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள்.

**இடபம்:** எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர்களின் ஆதரவுக் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்துப் போகும். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கடகம்:** செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள். எதிலும் நிதானித்து செயற்படப் பாருங்கள்.

**சிங்கம்:** சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். புதிய வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி:** அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**துலாம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். பயணங்கள் சிறப்பாக அமையும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும்.

**கும்பம்:** யாருக்காகவும் சாட்சிக் கையொப்பமிட வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப் போங்கள். எதிலும் அவசரப்பட வேண்டாம்.

**மீனம்:** எதிர்பாராத வகையில் பணவரவு உண்டு. நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.



## ஊனம் தடையல்ல

இரு கைகளுமற்ற நபரொருவர், கைவிசிறிகளில் கால்களைப் பதித்தவாறு சிக்கலான உருக்களை கச்சிதமாக வர்ணம் தீட்டி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்திய சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.

ஷங்காய்க்கு அண்மையிலுள்ள நகரைச் சேர்ந்த ஒரு ஓவியரே இவ்வாறு கால்களால் ஓவியம் வரைந்துள்ளார். அவர் தூரிகையை பாத விரல்களால் பிடித்து இந்த ஓவிய உருக்களை வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஓவியங்கள் மிகவும் அழகாகவும் - நேர்த்தியாகவும் உள்ளன.




## இணைந்த இரட்டையர்கள்





குறைப் பிரசவத்தில் பிறந்து மருத்துவ பராமரிப்பு உபகரணத்தில் வைக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக அருகருகே படுக்க வைக்கப்பட்ட இரட்டை குழந்தைகள், ஒருவர் கரத்தை ஒருவர் பற்றியவாறு விடுபட மறுத்த சம்பவம் பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

எடின்பேர்க்கில் டட்டிங்ஸ்டன் பிரதேசத்தை சேர்ந்த லோரா லோவ்டன் என்ற பெண், 30 வார காலப்பிரசவத்தில் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்திருந்தார்.

உரிய பிரசவ காலத்துக்கு முன்னர் குறைப்பிரசவத்தில் பிறந்த சுமார் 3 இறாத்தல் நிறையை மட்டுமே கொண்ட இந்த குழந்தைகளை மருத்துவமனையில் வெவ்வேறு மருத்துவ பராமரிப்பு உபகரணங்களில் வைத்துப் பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிலையில் ஆரோக்கிய நிலையை அடைந்த பிளயர் மற்றும் இன்னஸ் ஆகிய மேற்படி இரு குழந்தைகளும் ஒரே மருத்துவ பராமரிப்பு உபகரணத்தில் அருகருகே படுக்க வைக்கப்பட்ட போது, அந்தக் குழந்தைகள் ஒன்றின் கரத்தை மற்றையது பற்றியவாறு விடுபட மறுத்துள்ளன. ஒரே சமயத்தில் கருத்தரித்து பிறந்த தாம் என்றென்றும் இணை பிரியாதவர்கள் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் இந்தக் குழந்தைகளின் செயற்பாடு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.






## இணையத்தை அசிங்கப்படுத்தும் வீடியோக்கள்

நடிகை ஹன்சிகா குளிப்பது போன்ற ஆபாச படம் இணையத்தளத்தில் பரவ விடப்பட்டுள்ளது. இது வட்ஸ்அப்களுக்கு ஊடாகவும் வேகமாகப் பரப்பப்படுகின்றது. இதனால் இணையப் பாவனையாளர்கள் முகம்சுழித்து வருகின்றனர். நடிகைகளின் ஆபாச படங்கள், இணையங்களில் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் உள்ளன. ராதிகா ஆப்தே, வசுந்தரா போன்றோரின் படங்கள் வந்தன. இருவரும் தமிழ் படங்களில் நடித்துள்ளார்கள். ராதிகா ஆப்தே ஆடையில்லாமல் குளிப்பதை தனக்குத் தானே செல்பியில் படம் பிடித்தது போல் அது இருந்தது. வசுந்தரா, ஆண் நண்பருடன் படுக்கையில் நெருக்கமாக இருப்பதுபோல் படங்கள் வந்தன. ராதிகா ஆப்தே இதனை மறுத்தார். தனது படத்தை கிரபிக்ஸ் மூலம் ஆபாசமாக சித்தரித்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

இந்த நிலையில்தான் ஹன்சிகாவின் ஆபாச குளியல் காட்சி படம் வெளி வந்துள்ளது. ஹன்சிகாவின் ஆபாச குளியல் காட்சி படம் என்ற பெயரில் யாரோ திருட்டுத்தனமாக இந்த வீடியோவை வெளியிட்டுள்ளனர்.

இதனால் நடிகர், நடிகைகள் மத்தியில் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது ஹன்சிகா வீடியோ படம் தானா அல்லது கிரபிக்ஸ் செய்யப்பட்ட போலிப் படமா என்ற சந்தேகம் கிளம்பியுள்ளது. வீடியோவில் இருப்பது ஹன்சிகா அல்ல என்று அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வாழ்வுரிமை உறுதியானாலே ஈழ அகதிகள் நாடு திரும்புவர்


சென்னை, பெப்.19

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு அவர்களின் வாழ்வுரிமை உறுதி செய்யப்பட்ட பின்னரே இந்தியாவில் உள்ள அதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது குறித்து சிந்திக்க முடியும் என்று தமிழக ஆளுநர் கே.ரோசையா தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்றத்தின் ஆளுநர் உரையில் அவர் மேலும் கூறியதாவது:

இலங்கைத் தமிழ் அகதிகள் விருப்பத்தின் அடிப்படையில் நாடு திரும்புவது குறித்து, இரு தரப்பு பேச்சு வார்த்தைகளைத் தொடங்க மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இலங்கையில் அண்மையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள், இன நல்லிணக்கம் குறித்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள போதிலும், தற் போது அங்கு நிலவிவரும் பயம் மற்றும் மிரட்டல் நிறைந்த சூழல், தமிழர் வாழும் பகுதிகளில் இலங்கை ராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொள்ள வைக்கப்பட்டுள்ளமை, உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இன்னமும் மீள்குடியமர்த் தப்படாதிருப்பது; புதிய இலங்கை அரசால் திட்டவட்டமான நம்பத் தகுந்த நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படாதது போன்ற விடயங்களைக் கருத்தில் கொள்ளும்போது, இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்புவது குறித்து விவா திப்பதற்கான கூட்டத்தை நடத்துவதற்கு உகந்த தருணம் இன்னமும் ஏற்படவில்லை என்பது தெளி வாகிறது.

அதனால் இத்தகைய கூட்டம் தள்ளி வைக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு உறுதிபடத் தெரிவித்துள்ளது. இலங்கைத் தமிழ் அகதிகள் அமைதியான, நியாயமான முறையில் உரிய மரியாதையுடன் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதிகொண்டுள்ளது.



அகதிகள் தாயகம் திரும்புவதற்கான உகந்த சூழலை உருவாக்கத் தேவையான, போதிய பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிறுபான்மைத் தமிழர்களின் சுயாட்சி மற்றும் ஜனநாயக உரிமைகள் முழுமையாக வழங்கப்பட்டு உள் நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்ட பின்னரே, இங்கு வாழும் அகதிகள் தாயகம் திரும்புவது குறித்து சிந்திக்க வாய்ப்பு ஏற்படும் என்பதே இந்த அரசின் கருத்தாகும் என்று தெரிவித்துள்ளார். (வ)

# ஈழ அகதிகள் பிரச்சினையை திசை திருப்புகிறது அ.தி.மு.க

## தமிழிசை சவுந்தரராஜன் குற்றச்சாட்டு

சென்னை, பெப்.19

இலங்கை அகதிகள் பிரச்சினையை தமிழக அரசு திசை திருப்புவதாக தமிழக பாரதீய ஜனதா கட்சித் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் குற்றம் சுமத்தியுள்ளார்.

சட்டப் பேரவையில் தமிழக ஆளுநர் ஆற்றிய உரை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையின் தமிழ் அகதிகளை சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் திட்டம் தொடர்பான கூட்டத்துக்கு தமிழக அரசு தனது பிரதி நிதியைக் கூட அனுப்பவில்லை என்று தமிழிசை சவுந்தரராஜன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஆளுநரின் உரை மூலம் அந்தப் பிரச்சினையை மாநில அரசு திசை திருப்ப முயல்வதாகவும்



அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களை பிரதமர் நரேந்திர மோடி மீட்டெடுத்ததாக தெரிவித்துள்ள தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர், அதனை மறக்கடிப்பதைப் போலவே ஆளுநரின் உரை அமைந்திருந்ததாக தெரிவித்துள்ளார். (வ)

# வாகரையில் அத்துமீறிய குடியேற்றத்தைத் தடுக்கவும்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைரெட்னம் வலியுறுத்து

மட்டக்களப்பு, பெப்.19

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புணாணை பகுதியில் இடம்பெயர்ந்த மக்களை, மீள்குடியேற்றவும் அந்தப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்துமீறிய குடியேற்றங்களை தடுக்குமாறும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்னம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புணாணை பகுதிக்கு திங்கட்கிழமை பயணம் செய்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைரெட்னம் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியதுடன் அந்தப்பகுதியையும் பார்வையிட்டார்.

அதனைத்தொடர்ந்து அந்தப் பகுதி மக்களின் நிலைமைகள் தொடர்பில் மீள்குடியேற்ற மற்றும் இந்துமத விவகார அமைச்சர் சுவாமிநாதனுக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலகப் பிரிவு புணாணை கிழக்கு 211 வி கிராமசேவையாளர் பிரிவில் உள்ள புணாணை கிராமம் 1990.06.10 ஆம் திகதி எற்பட்ட போர் காரணமாக சுற்றிவளைக்கப்பட்டு பலாத்காரமாக அண்ணளவாக 30 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை அவர்களின் அனுமதியின்றி வெளியேற்றி அந்த இடத்தில் இராணுவத்தினர் நிரந்தரமாக இராணுவமுகாம் அமைத்துக் கொண்டனர்.

அவ்விடத்தில் இலங்கை இராணுவமும் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸ்துறைபிரிவும் இன்று வரை இருந்து வருவது குறிப்பிடத் தக்கது.

அந்தக்கிராமத்தில் இருந்த 30 க்கும் மேற்பட்ட வீடுகள் பாதுகாப்பு அரண் அமைப்பதற்காக அகற்றப்பட்டு, முகாமாக மாற்றப் பட்டு பாதுகாப்பு மண் மேடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினரிடம் உரிய இடங்களை மீள ஒப்படைக்குமாறு கோரிய போதிலும் 1990–2014 ஆம் ஆண்டு வரை மீள ஒப்படைக்கப்பட வில்லை.

எனவே, அவர்களுக்கான சொந்த இடங்களை மீளப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

30 குடும்பங்கள் இடம் பெயர்ந்த போதிலும் குடும்பங்கள் பெருக்கத்துக்கு ஏற்ப தற்போது 72 குடும்பங்கள் தற்காலிக இடங்களிலேயே வசித்து வருகின்றனர். அவர்கள் 03-02-2014 அன்று மீள்குடியேற்ற அமைச்சால் மீள குடியமர்த்தப்பட்டு, அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப் படாத நிலையில், மீண்டும் இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

எனவே, அவர்களுக்கான கீழ் குறிப்



பிடப்பட்டுள்ள தேவை களைப் பூர்த்தி செய்து அவர் களை மீளவும் அவர்களது இடத்தில் குடியமர்த்த நடவடிக்கையெடுக்கவும்.

தற்போது இராணுவமுகாம் உள்ள இடம் பொதுமக்கள் வசித்து வந்த மேட்டு நிலப்பகுதியாகும். நிலத்தை மீண்டும் மக்களிடம் வழங்குதல்

தற்சமயம் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்ட இடம் தாழ் வான பிரதேசமானதால் அந்த இடத்தில் வேளாண்மை செய்ய 2 ஏக்கர் வீதம் காணிகளை வ்ழங்குதல்

சேதமாக்கப்பட்ட உடமைகளுக்கு நட்டஈடு வழங்குதல், நிரந்தர வீட்டு வசதிகளை பெற்றுக்கொடுத்தல், எல்லைப்பகுதியில் யானை வேலிகளை அமைத்தல்.

குடி தண்ணீர், கிணறுகள் அமைத்துக்கொடுத்தல், சுற்று வேலிக்கான முட்கம்பி, கொங் கிறீட் தூண், வீதி, சுகாதார, மின்சாரவசதி போன்றவைகள் அமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுத்தல், பாதுகாப் புக்காக அமைக்கப்பட்டுள்ள மண்மேடுகளை அகற்றுதல்.

ஆறு மாதங்களுக்கான உலர் உணவு வழங்கப்பட வேண்டும், விவசாய நடவடிக்கைகளுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

அந்தப்பகுதியில் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் இந்து ஆலயமொன்றின் காணிக்குள் விகாரை அமைத்து சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது அத்து மீறிய நடவடிக்கையாகும்.

கடந்த இரண்டு வருட காலமாக இந்த அத்து மீறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றன. இது தொடர்பில் அதிகாரிகளாலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த அத்துமீறிய காணி அபகரிப்புக்கு கடந்த காலத்தில் ஆளும் கட்சியில் உள்ளவர்களும் ஆதரவளித்தனர்– என்றுள்ளது. (வ)


# காத்தான்குடியில் இளைஞனின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, பெப்.19

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

புதிய காத்தான்குடி பதுறியா பாடசாலை வீதி மோதினாரங் ஒழுங்கையைச் சேர்ந்த 17 வயதுடைய பாறுக் முஹம்மது றிகாஸ் என்ற இளைஞனின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலி ஸார் தொவித்தனர்.

அந்த இளைஞன் தமது வீட்டினுள்ளே உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார். அந்தச் சமயம் வீட்டில் எவரும் இருக்க வில்லை



என்று தெரிவிக் கப்படுகின்றது.

சடலத்தை மீட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (வ)

# தூண்டில் மீன்பிடியில் ஈடுபடும் பெண்கள்



அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நன்னீர் மீன் பிடித்தொழிலின் மூலம் அதிகமான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டுவருகின்றன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் தம்பட்டை பிரதேசத்தில் தமது வாழ்வாதாரத்துக்காக பெண்களும் நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பெண்கள் தூண்டில் மீன்பிடித்தொழில் மூலம் நாளாந்தம் 350 ரூபா தொடக்கம் 400 ரூபா வரை வருமானம் ஈட்டி தமது வாழ்வாதாரத்தை முன் னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

# பள்ளிவாசல்களின் விவரங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை

## முஸ்லிம் சமய விவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.19

நாட்டில் பதிவு செய்யப்படாது இயங்கும் பள்ளிவாசல்களை துரிதமாக பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக முஸ்லிம் சமய விவகார மற்றும் தபால் துறை அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

அக்குறணை கசாவத்தை பிர தேசத்தில் செவ்வாய்க்கிழமை நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்,

"நாட்டிலுள்ள பதிவு செய் யப்படாத பள்ளிவாசல்கள் அனைத்தும் பதிவு செய்யப்படவுள்ளன. கடந்த ஆட்சிக் காலத்தில் பதிவு செய்வதில் அநீதி இழைக்கப்பட்ட பள்ளி வாசல்களையும் புதிதாகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் சமூகத்தினர் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்தனர். பல பள்ளி வாசல்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகின. ஆனால் இவை தொடர்பில் மஹிந்த அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் பல பள்ளி வாசல்கள் பதிவுப்படாதமை தெரியவந்துள்ளது. அத்துடன் கடந்த ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்ட முறையில் பள்ளிவாசல்களின் பதிவு தாமதப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் தெரிய வந்துள்ளது.

எனவே இதுவரை பதிவு செய்யப் படாத அனைத்துப் பள்ளிவாசல் களையும் துரிதமாகப் பதிவு செய்யவுள்ளோம். இதற்காக புதியவழிமுறை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம். இது இலகுவானது. முன்னர் இருந்த தேவையற்ற கெடு பிடிகள் தளர்த்தப்பட்டுள்ளன"– என்றார். (வ-10)

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.19
எழுதுமட்டுவாழ் கரம்பகம் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.
பாடசாலை அதிபர் இ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் சிறப்பு விருந்தினர்களாக மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய அதிபர் வி.கணபதிப்பிள்ளை, தென்மராட்சிகல்வி வலயஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

★★★

யாழ்ப்பாணம், பெப்.19
மன்னார் அல்.அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எம்.வை. மாஹிர் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எம். சியான் கலந்துகொள்வார். (வ)

★★★

யாழ்ப்பாணம், பெப்.19
சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலையின் 'செயற்படுவோம் மகிழ்வோம்' விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் சி.தவநாயகம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சம்பத் வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் எஸ்.பரமநாதன் மற்றும் சிறப்பு விருந்தினராக பாரதிபுரம் வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் க.இராசேந்திரம், கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் சி.மனோகரன் ஆகியோர் கலந்துகொள்வர். (வ)

★★★

யாழ்ப்பாணம், பெப்.19
மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் இ.லோகேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கனடா சிவயோகர் சிறுவர் பாடசாலை அதிபர் ஆர்.எஸ். பஞ்சாட்சரம் மற்றும் சிறப்பு விருந்தினராக திரு. திருமதி ரவீந்திரதாசன் ஆகியோர் கலந்துகொள்வர். (வ)

★★★

யாழ்ப்பாணம், பெப்.19
நவாலி சென்.பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் சென். பீற்றேஸ் தேவாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய (நிர்வாகம்) பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சசிவானந்தராசா ஆகியோர் கலந்து கொள்வர். அருளாசியை நவாலி அருட்தந்தை றோய் பேடினண்ட் வழங்குவர். (வ)

---


## இதயம் மறவா
## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் **முத்தையா இராசரத்தினம் (பத்தர்)**



மலர்வு 10.08.1926 உதிர்வு 01.03.2006

திதி: பூர்வபட்ச பிரதமை (19.02.2015) வியாழக்கிழமை

*வருடங்கள் ஒன்பது சென்றது அப்பா! ஆனாலும்*
*ஆறாது எம் துயரம் என்றென்றும்*
*அன்புடன் எமையணைத்து அறிவுரைகள் பல கூறி*
*பண்புடன் எம்மை வளர்த்து பாரினில் உயரவைத்தீர்*
*ஆயிரமாயிரம் உறவுகள் இருந்தாலும் என்னப்பா*
*உங்கள் அன்பைப் போல் வருமா எமக்கு!*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி, ஓம் சாந்தி!*

"மலர்வாசம்" மகாஜனக்கல்லூரி வீதி, தெல்லிப்பழை. (56918)(4.7)

என்றும் உங்கள் நினைவுடன் வாழும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


---


## 44 ஆம் ஆண்டு நினைவு    முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம் 25.04.1925 மறைவு 02.02.1971





தோற்றம் 24.09.1924 மறைவு 01.03.2014

**செல்லர் நாகலிங்கம்**
(முன்னாள் தலைமை ஆசிரியர் - குரு/இந்து தமிழ் கலவன் பாடசாலை)

**நாகலிங்கம் சின்னத்தங்கச்சி அம்மா**
திதி: பிரதமை (19.02.2015)

அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு - என்ற
ஆன்றோர் வாக்கிற்கு இலக்கணமாம் நீங்கள் இருவரும்
உங்கள் அன்பினை இழந்து - இன்றும்
ஏங்கிய விழிகளுடன் ஏதிலிகளாக நிற்கின்றோம்
இப்போதும் ஏற்க முடியவில்லை - உங்கள் இழப்பை
பெற்ற பிள்ளைகளும் நேசம் மிக்க மருமக்களும்
பாசப் பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும்
பெறாமக்களும் - ஏனைய உறவுகளும்
கலங்கித் தவிக்கின்றோம் - உங்கள்
ஆத்மசாந்திக்காக என்றென்றும் இறைவன் பாதம் பணிகின்றோம்.

*உங்கள் நினைவலைகளில்*
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்.

3ஆம் கட்டை, கல்வியங்காடு,
021 223 0387, 077 614 1358 (56944) (45.3.7)


---


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
**கந்தையா பொன்னுத்துரை**



*ஆண்டுகள் இரண்டு ஆனதையா*
*ஆறவில்லை உங்கள் நினைவு!*
*நீங்கள் இல்லா எம்வாழ்வு*
*நீர்க்குமிழி ஆனதையா!*
*வாடுகின்றோம் உங்களை*
*நினைத்து வாராயோ*
*எமை எண்ணி எம்மிடத்தில்!*
*உங்கள் ஆத்மசாந்திக்காக*
*எல்லாம்வல்ல இறைவனை*
*வேண்டுகின்றோம்.*

தோற்றம் 19.08.1943 மறைவு 12.03.2013

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.
(54207)(5.3.7)
வீரப்பதிராயன், கரணவாய் தெற்கு, கரவெட்டி.
TP : 021 226 2146

திதி: பூர்வபக்க பிரதமை (19.02.2015)


---


## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி    18 ஆம் மாத நினைவஞ்சலி





மன்னார் வலைப்பாட்டில் சங்கமமான
**திருச்செல்வம் கமலேந்திரராணி** (குமுதினி)
தோற்றம் 23.06.1974
**திருச்செல்வம் கம்சினி**
தோற்றம் 05.06.1996
**சிவலிங்கம் திருச்செல்வம்**
தோற்றம் 08.02.1972

மறைவு 19.02.1997

**கைலாயபிள்ளை சிவலிங்கம்**
தோற்றம் 18.08.1934 மறைவு 01.09.2013

பதினெட்டாண்டுகள் சென்றதுவே ஆண்டவன் அழைப்பை ஏற்று அவன்பாதம்
அலங்கரிக்க மூவரும் ஒன்றாக சென்றுவிட்டு
ஐயாவையும் அழைத்து விட்டீர்களோ எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள் எங்கள் உள்ளத்தை விட்டகலாது

சி.தேவகுஞ்சரம், கதிரிப்பாய், அச்சுவேலி.

*உங்கள் பிரிவால் துயருறும்*
அம்மா, அக்கா, அத்தான், அண்ணாமார், அண்ணிமார், பிள்ளைகள்.

(56882)(4.3.7)


---


## 26 ஆவது பிறந்ததினத்தில் நீங்கா நினைவஞ்சலியும்
சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக
## நிழல் குடை திறப்பும்



அன்னை மடியில் 19.02.1989 ஆண்டவன் அடியில் 05.10.2013

**சோகேஸ்வரன் கஜேந்தன்**
(யாழ். பல்கலைக்கழகத்தின் 2013 ஆம் வருட வரலாற்றுத்துறை இறுதி வருட மாணவன்)

நிலையில்லா வாழ்கையில் நிறைவான வாழ்வினிலே!
நிலைத்து நிற்கும் வேளையிலே
நெஞ்சமதைக் கனவாக்கி நீண்டவழி சென்றீரே!
குடும்பத்தின் சொர்க்க வாசல் திறந்துவைக்கும் வேளையிலே
சொர்க்கத்திற்கு தன்னுடன் உறவாட கூப்பிட்டானோ இறைவன்
இல்லத்தின் விளக்கை அணையாமல் பார்த்தவனே!
மாணவர் மனதில் வரலாற்று ஆசானாய் திகழ்ந்தவனே!
பாரினிலே வரலாற்று நாயகனாய் ஒளிர்பவனே!
உன் வரலாறு எழுதவல்லோ இறைவன் எம்மை ஆளாக்கிவிட்டான்
உம் பிறந்ததினத்தில் உந்தன் நீங்கா நினைவுகளுடன் தவிக்கின்றோம் ஐயா!
வருடம் ஒன்று கடந்தாலும் மாதங்கள் சென்றாலும்
உம் பிறந்ததினத்தில் உம்மை வாழ்த்த நீர் இல்லையே!
எம் மனமானது உம்மை நினைத்துத் துடிக்கிறது
மறுபிறப்பு என்று ஒன்று உண்டென்றால் - என்றும் நீ
எம்மிடத்தில் மலர்ந்திட வேண்டும் ஐயா விரைவில்!
என்று இறைவனிடம் கேட்டு உம் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கெருடாவில், சாவகச்சேரி. (56927)(4.3.7)

என்றும் உன் நினைவில் குடும்பத்தினர்.
077 714 8082

## 'தியாகம்' என்ற பதம் உணர்த்துவது எதனை?

மனைவி, மக்கள், வீடு, பொருள், பண்டம், என்பவற்றை விலக்கிவிடுவது தியாகமாகாது. நீயே தான் உன் உடம்பு என்ற தப்பான எண்ணத்தைக் கைவிட்டு நீயேதான் ஆத்மா என்ற உண்மை உணர்தலே தியாகமாகும். அப்பொழுதான் நீ சுதந்திரத்தைப் பெறுவாய் – (விடுதலை) மோட்சம்.



சாயி சிந்தனை


# துர்நாற்றம் வீசும் நிலையில் யாழ்.நகர் கழிவு நீர் கால்வாய்

கொழும்புத்துறை,பெப்.19

யாழ்.நகரத்திலுள்ள பிரதான கழிவு நீர்க் கால்வாய்களில் சேரும் கழிவு நீர் வடிந்தோடுவது தடைப்பட்டு தேங்கிய நிலையில் காணப்படுகிறது.

அண்மையில் யாழ். மாநகர சபையால் கால்வாய்களில் உள்ள புற்கள், பற்றைகள், சொப்பிங்பை மற்றும் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன. எனினும் நீர் கடலுக்கு வழிந்தோடக்கூடிய வகையில் இடையிடையே உள்ள மண்திட்டுக்கள் அகற்றப்படாமையால் கழிவுநீர் அந்தந்தப் பகுதிகளில் நீண்டநாள்களாகத்தேங்கி நிற்கிறது.

யாழ்.போதனா வைத்திய சாலையைச் சூழவுள்ள கால்வாய்கள் மற்றும் வர்த்தக நிலை யப் பகுதிகளூடாகச் செல்லும் கால்வாய்களில் இவ்விதமாக கழிவுநீர் தேங்கிக்காணப்படுகிறது.



பெருமளவு மக்கள் தினமும் கூடும் பகுதிகளில் துர்நாற்றம் வீசக்கூடிய நிலையில் கழிவுநீர் தேங்கி நிற்பதுடன், நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு டெங்குத் தாக்கம் அதிகரிக்கும் ஏது நிலையும் காணப்படுகின்றது.

கால்வாய்களின் துப்புரவுப் பணிகளை நல்ல முறையில் மேற் கொண்ட யாழ்.மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் நீர்தேங் காதவாறும் நடவடிக்கைகளை மேற்கொண்டு சுகாதார சீர்கேட்டை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டுமன மக்கள்கோரிக்கைவிடுக்கின்றனர். (வ–135)

## நவீன சந்தைப் பகுதியில் பாதசாரிகள் கடவை

### அடுத்த வாரத்தில் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.19

நவீன சந்தைப் பகுதியில் மக்களது போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக பாதசாரிகள் கடவை அமைப்பதற்கு வியாபாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தைப் பகுதியில் உள்ள வியாபார நிலையங்க ளில் பொதுமக்கள் நடமாட முடியாதவாறு வியாபாரிகள் தமது பொருள்களை கடை களின் வெளிப்பகுதிகளிலும் காட்சிப்படுத்தும் வகையில் வைத்துள்ளனர். இதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தவிர்க்கும் வகையில் போக்குவரத்துக்கு வசதியாக பாதசாரிகள் கடவை வரைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரத்தில் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட வுள்ளதாகவும், வர்த்தகர்கள் இதற்குத் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறும் வருமானத்துறை பிரதம பரி சோதகர் கே.ஜெயராச சிங்கம் அறிவித்துள்ளார். (வ–7)

### வியாபார உரிமக் கட்டணங்களை செலுத்தவும்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட நிரந்தரக் கடைகள் அனைத்துக்குமான வியாபார உரிமக் கட்டணங்களை அதற்கான விண்ணப்பபடிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி உரிய கட்டணங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும்.

தனியார் கல்வி நிலையங்கள், தனியார் மருத்துவ மனைகள், தனியார் ஒப்பந்த காரர் ஆகிய முக்கிய தொழில் மீதான வரிக ளையும் குறிப்பிட்ட திகதிக்கு முன் செலுத்துமாறும் தவறின் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்ப டலாம் என்றும் மாநகர சபையின் பிரதம வருமானப் பரிசோதகர் கே.ஜெயராச சிங்கம் அறிவித்துள்ளார். (வ–7)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவு அட்டை மீளாய்வு

கொடிகாமம், பெப்.19

கொடிகாமம் இராமாவில் ஜே.320 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட எழுபது வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரைஜை களுக்காக வழங்கப்படும் இரண்டாயிரம் ரூபா மாதாந்த உதவிக் கொடுப் பனவுக்கான அட்டை மீளாய்வு நாளை வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மீசாலை கமநல சேவைகள் திணைக்களத்துக்கு அருகேயுள்ள வீதியில் அமைந் துள்ள ஜே 320 கிராமசேவகர் அலுவலகத்தில் இடம்பெற வுள்ளது.

இதில் இரண்டாயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் அனைவ ரையும் தவறாது கலந்து கொள் ளுமாறும் இதுவரையும் குறித்த கொடுப்பனவு பெறாத 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரை ஜைகளுக்கான விண்ணப்பப் படிவத்தை அன்றைய தினம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ–105)

## 'ஆஷா நாயும் அவளும்' சிறுகதை காட்டில் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.19

வள்ளுவர்புரம் யோ.புரட்சி எழுதிய 'ஆஷா நாயும் அவளும்' என்ற சிறுகதை நூல் இன்று வியாழக் கிழமை, முல்லைத்தீவு, விசுவமடு இளங்கோபுரம் பாடசாலைக்கு எதிரில் உள்ள காட்டில் வைத்து முற்பகல் 10 மணிக்கு வெளியிடப் படுகிறது.

லண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகத்தால் வெளியிடப்படும் இந்த நூலுக்கு லண்டன் வாழ் எழுத் தாளர் வவுனியூர் உதயணன் வாழ்த்துரை வழங்கியிருக்கிறார். எழுத்தாள ரின் தாயார் செல்லமுத்து தனது கையெழுத்திலேயே ஆசியுரை வழங்கியிருக்கிறார். யோ.புரட்சி எழுதிய 'எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும்' என்ற கவிதை நூல் கடந்த வருடம் கடலில் வைத்து வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நூல் வெளியீடானது இலக்கிய விமர்சகர் சி.நாகேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)

## பெருந்திருவிழா

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியிலுள்ள சிவ மஹாகாளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (வ)

★★★

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வண்ணை வைத்தீஸ்வரன் பரிவாரத் திருக்கோவில் வேம்படிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் நடை பெறவுள்ளன. (வ)


**தேவை**

★ நெல் கொள்வனவு செய்யப்படும்.
★ மில் வேலை தெரிந்தவர்களும் தேவை.
மாரியன் மில்
T.P: 0777722215

**தேவை**

கலப்பின ஆண் நாய் அல்லது நல்ல ஊர் நாய் 06 மாதத்துக்கு உட்பட்டது தேவை.
தொடர்பு: 072 930 3950

**வீடு விற்பனைக்கு உண்டு**

யாழ் நகரில் ரயில் நிலையம், கல்லூரி, கொன்வென்ற் ஆகியவற்றுக்கு மத்தியில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 071 853 5696

**TVகள் மலிவு விற்பனை**

SONY Wega 14" - 3000/=, 21" -10000/=, 25" - 14000/=
BOX வகைகள், குளிர் சாதனப் பெட்டிகள் -20000/=
கஸ்ற் றேடியோ - 3000/=, Sony DVD - 3250/=
K.K.S வீதி, சுன்னாகம்.

**காணி விற்பனைக்கு**

◆ பளை கச்சார் வெளிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் (ஆறு) 6 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு.
◆ புலோப்பளையில் வயலும் காணியும் விற்பனைக்கு உண்டு.
TP: 075 530 8215, 076 846 5926

**நாஹா மருத்துவ நிலையம்**

◆ தீர்க்கமுடியாதெனக்கருதும் நோய், எலும்புப் பாதிப்புற்றவாதம், தீராதபுண்கள், அல்சர், மர்மகட்டிகள், ஆஸ்மா ஆகியவற்றுக்கு விசேட சிகிச்சை
◆ குழந்தையின்மைக்கு - சிறப்பு சிகிச்சை
TP: 077 321 2740

**தேவ தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்**

1984.02.18 - 2015.02.18
கர்த்தரோடு 31 ஆவது மகிமையான ஆண்டுகள்
அற்பமான ஆரம்பத்தை ஆசீர்வதித்து சிறிதாக விதைக்கப்பட்ட விதையை பெருகப்பண்ணி, போராட்டங்கள், எதிர்ப்புகள், பயமுறுத்தல்கள் மத்தியில் எம்மோடு இருந்து எங்களை வழிநடத்தி வருகின்ற கர்த்தருக்கு நன்றி கூறுகின்றோம்.
"இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை"
-மத்தேயு 16:18 b
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம், 89,நிறவுன் வீதி, கொக்குவில். (56950) (45.7.9)
கல்வாரி ஆடுயர் கொக்குவில்.

**மணமகன் தேவை**

1979 இல் பிறந்த ரோகினி நட்சத்திரம் 76 பாவம் உடைய இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த படித்த மணமகளுக்கு உள்நாட்டு/ வெளிநாட்டு மணமகன் தேவை.
தொடர்பு: 077 414 6593

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தங்கிநின்று வீட்டு வேலைகள் பார்க்கக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 624 6715 (56948) (45.7.3)

**வாகனம் விற்பனைக்கு**

47-XXXX தொடரிலக்கமுடைய நல்லநிலையிலுள்ள ISUZU Cander 350 விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 791 1030, 077 528 3244

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

ஈழத்து காந்தி தந்தை செல்வா அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியை பாதுகாப்போம்.
இன்றைய அரசியல் நிலைமை சம்பந்தமாக கலந்துரையாடல்.
இன்று நம்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் தலைமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் எதிர்காலம் இவை சம்பந்தப்பட்ட வேறு விடயங்கள் ஆகியவை சம்பந்தமாக கலந்துரையாட தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள், தமிழ்மக்களின் எதிர்காலம் தொடர்பாக சிந்திக்கும் ஆர்வலர்கள் ஆகியோர் இக்கருத் தரங்கில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு வேண்டுகிறேன்.
இடம்: தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையகம்.
இல.1077, காங்கேசன்துறை வீதி.
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம்.
காலம்: 21.02.2015 சனிக்கிழமை மாலை 4.00 மணி
மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.தங்கள் வரவை உறுதிப்படுத்தின் (021 222 3631/ 0777890171) நன்றியுடையவனாய் இருப்பேன்.
வீ.ஆனந்தசங்கரி
செயலாளர் நாயகம்
தமிழர் விடுதலைக் கூட்டணி

**இடமாற்றம்**

**நாகபூசணி திருமண சேவை**

15/11, சங்கிலியன் வீதி, நல்லூரில் இயங்கி வந்த நாகபூஷணி திருமணசேவை தற்போது 383/14B, கோயில் வீதி, நல்லூருக்கு (கோயில் வடக்குப் பக்கம்) இடமாற்றப்பட்டுள்ளது. டாக்டர், எஞ்சினியர், அரச உத்தியோகத்தர், தனியார் துறை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பிய மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.
383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:- 077 138 7596, 075 554 6000 (56870)
e mail:- nakapoosany wedding@gmail.com

**ஸ்ரீ ஸர்வ மங்கள சாயிபாபா நூதன விக்கிரக பிரதிஷ்டா**



மஹாகும்பாபிஷேகம்–22.02.2015
20.02.2015 (வெள்ளி) காலை 6 மணிக்கு ஆரம்பம். முற்பகல் 10 மணிக்கு பிரதிஷ்டை
21.02.2015 (சனி) காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை பால்க்காப்பு சாத்தலாம்.
22.02.2015 (ஞாயிறு) காலை 9.31 முதல் மு.ப. 11.12 இற்கு மஹாகும்பாபிஷேகம் இடம்பெறும்.
அனைவரும் வருக! சாயி நாதன் அருள்பெறுக
"சீரடி சாயி மந்திர்"
514, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (56848)(4.3.7)
T.P:077 722 2568, 077 [illegible] 5336

# தமிழர்களின் கல்விக்கு விடுதலை வேண்டும்

## கல்வியியலாளர் தனபாலன் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,.பெப்.17

கல்வி, ஒவ்வொருவருக்கும் ஓர் உரிமையாகவும், எல்லாவித சுதந்திரங்களுக்கும் புரட்சி கரமான மேம்பாடுகள் அனைத்துக்கும் அடிப்படையாக வும் உள்ளது. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் இந்த நிலை தொடர்பாக ஆராய வேண்டியுள்ளது. பொருத்தமற்ற பல் வேறுவிதமான நெருக்கடிகள், அடக்கு முறைகள், பாகுபா டுகள், ஏற்றத்தாழ்வுகள் என்பன தமிழர்களின் கல்வி விடுதலைக்குத் தடைபோடும் காரணிகளாக உள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் கல்வியியலாளர் பா.தனபாலன்.

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற பங்குபற்றல் முகா மைத்துவ வளவாளர்களுக் கான செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் அங்கு மேலும் கூறுகையில்:

"கடந்த முப்பது வருட போர் காரணமாக மாற்றப்பட்ட வடக்கு கிழக்கின் தமிழர் வாழ்விடங்களில் கல்வி மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. இதன் தாக்கங்கள் முழுமையாக ஆய்வு செய்து வெளியிடப்படவில்லை. பல்வேறு ஆக்கிர மிப்புத் தாக்கங்களுக்கு உட் பட்டு புத்திஜீவிகளும், கல்வி யியலாளர்களும் ஏன் அரசியல் வாதிகளும் கூட தமது சுயத்தை இழந்து கல்விச் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்தத் தயங்கு கின்றனர். இந்த நிலையே கல்விப் பண் பாட்டு மௌன நிலை எனப்படு கிறது. நவ பேரினவாதத்தின் இறுதி வெற்றி இதுவாகும். எமக்குள்ளேயே நாம் அடிபடும் இழிநிலையும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டும். இந்த நிலை வடக்கு, கிழக்கு, மலை யகப் பகுதிகளில் நிலவுகின்றது.

தற்போது புரட்சிகரமாக சீரிய கல்விப் பணி செய்யவேண்டும் என்று உளமாற விரும்புவர்கள், செயற்படுபவர்கள் வேதனைக் குள்ளாவதால் அந்த வேதனைகளை மகிழ்ச்சியாக மாற்று கல்வி விழிப்புணர்வு நடவடிக்கையில் மிக அவசரமாக எல்லோரும் ஈடுபட வேண்டும். அதற்கான சூழல் தற்போது ஏற்பட்டு வருகின்றது.

மேலும் அச்சம் என்ற நிலையும் பெருமளவு காணப்படுகின்றது. இது திணிப்புக்கள், பொருத் தமற்ற அதிகாரங்கள், தேசப் பற்றின்மை, விமர்சன பூர்வ மான கருத்துக்களை வெளியிடாமை என்பன ஒரு பண் பாட்டு மௌன நிலையாக ஆகியுள்ளது.

கல்வி நடைமுறைச் சிக்கல்கள், தடைகள் வெளிக் கொணரப்பட்டு நவீன பேரினவாத ஒடுக்குமுறையின் காப்புக் களை உடைத்தெறிய மனித ஆற்றல்களை விரைவாக ஒன்று திரட்ட வேண்டியுள்ளது"– என் றார்.

(வ–29)

# ஜப்பான் இளைஞர், யுவதிகள் மட்டு.மாவட்டத்துக்கு பயணம்




மட்டக்களப்பு, பெப்.19

இலங்கைக்கு ஜப்பான் நாட்டின் சார்பில் வருகைதந்த இளைஞர், யுவதிகளை வரவேற்கும் நிகழ்வு, மட்டக்களப்பு மாவட் டத்தின் வாகரை பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

உலகளாவிய இளைஞர் தலைமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ், இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு இடையிலான இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைய, புரிந்துணர்வு மற்றும் மனித நேய நடைமுறைகளை ஊக்குவிக்கும் 'நிப்பொண்மாரு – நல்லெண்ண உலகசுற்றுலா' என்பதற்கு ஏற்ப இவர்கள் இங்கு வருகை தந்துள்ளனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு பிராந்திய பணிப்பாளர் கே.தவராஜாவின் மேற்பார்வையின் கீழ், மட்டக் களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வாழிகாட்டலுடன், மாவட்ட இளைஞர் கழகங்களின் சம் மேளனமும், வாகரை பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து இந்த வரவேற்பு நிகழ்வை ஏற்பாடு செய்தன.

இரு பிரிவுகளாக நடைபெற்ற இந்த நிகழ்வின்போது, முதலா வதாக மட்டக்களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உருவாக்கத்தில் 'லலிதா கலா' நாட்டியக்குழுவினரின் நடனம் உட்பட கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

அதன் பின்னர், மனிதநேயம் பேணும் சிரமதானம் வாகரை மாவட்ட மருத்துவமனையில் முன் னெடுக்கப் பட்டது. மருத்துவமனையின் சுற்றுப் புறத்தை சுத்தப்படுத்துதல், சுற்றுமதிலுக்கு வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பணிகள் இதன் போது முன்னெடுக் கப்பட்டன.

இந்த நிலையில் ஜப்பான் நாட்டு இளைஞர் குழுவினர், தமது வருகைக்கான நினைவாக வர்ணம் பூசப்பட்ட சுவரில் தமது நாட்டின் தேசியக்கொடியுடன் கூடிய கப் பலை வரைந்து தமது பெயர்களையும் குறிந்துக் கொண்டனர். அத்துடன், வாகரை பிரதேச சம்மேள னத்துக்கும் மருத்துவம னைக்கும் நினைவுச்சின்னமும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சீனித்தம்பி யோகஸ்வரன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வா கப்பணிப்பாளர் மனுலசமல் பேரேரா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு பிராந்திய பணிப்பாளர் கே.தவராஜா, மட்டக்களப்பு மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.என். எம்.நைறூஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(வ)

# ஆன்மிகச் சொற்பொழிவு

தென்மராட்சி,பெப்.19

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியின் மாணவன் இ.சமிலன் 'தவறுகளை வெல் வோம்' என்னும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார்.

(வ–9)


## மரண அறிவித்தல்



### செல்லத்துரை கமலநாதசத்தியேஸ்வரன்

நீர்வேலி, அச்செழுவைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கமலநாதசத்தியேஸ்வரன் 03.02.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- ருக்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் சௌந்தரவல்லியின் அன்புக் கணவரும், சந்திராதேவி, திருச்செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் திலகவதி, சிவகுமார், அமிர்தவல்லி, செல்லத்துரை, சுந்தரேசன், சோமசேகரம், சுந்தரவல்லி ஆகியோரின் மைத்துனரும் பிரதீபன், பிரதீபா, பிரதாபன், பிரின்சி, ஆகியோரின் மாமனாரும் ரிஷாந்தின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2015) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் (பிரான்ஸ் நேரம்) Crematorium du Pere Lachaise, 71 Rue des Rondeaux, 75020 Paris, France இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சௌந்தரவல்லி
0033751396037

தகவல்:
க. சோமசேகரம் (மைத்துனர்)

(56954)(5.3.7)


# லான்ட்மாஸ்டருடன் ஹைஎஸ் மோதியதில் மூவர் காயம்



தென்மராட்சி, பெப். 19

ஏ – 9 வீதியில் சென்ற பஸ்ஸொன்றை முந்திச் செல்ல முயன்ற ஹைஎஸ் வாகனம், எதிர்ப் புறமாக வந்த லான்ட் மாஸ்டர் வாகனத்துடன் மோதி யதில் மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 6 மணியளவில் மீசாலை, ஐயா க்கடையடியில் இடம்பெற்றது.

விபத்தில் ஹைஎஸ் வாக னத்தில் பயணித்த உடுவில் தெற்கைச்சேர்ந்த வரதராஜன் சாந்தகுமார் (வயது–43) மகாலிங்கம் விநாயகமூர்த்தி (வயது – 34) லான்ட் மாஸ்டர் வாகனத்தில் பயணித்த மீசாலை வடக்கைச்சேர்ந்த பவனேந்திரன் கஜதீபன் (வயது –34) ஆகியோர் காயமடைந்தனர். இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சாந்தகுமார் மற்றும் விநாயகமூர்த்தி ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை – குறித்த விபத்தை அடுத்து சிறிது நேரம் அவ்வழியில் போக்குவரத்துத் தடைப் பட்டது. சம்பவத்தை அறிந்து அங்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் வாகனங் களை அப்புறப்படுத்தி போக்கு வரத்தைச் சீர் செய்தனர்.

(வ–9–105)

# அரச சேவை ஓய்வூதியர் நிதியச் சங்க அங்கத்தவர்களுக்கு மானியத் தொகை

அச்சுவேலி, ஏப்.19

அரச சேலவ ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள அங்கத்தவர்களுக்கு 2014 ஆம் ஆண்டு மானிய உதவு தொகையான 12 லட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபாவை வழங்கியுள் ளது.

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் கிளைச் சங்கங்கள் யாழ். மாவட்டத் தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் செயற்படுகின்றன.

யாழ்.மாவட்ட உறுப்பினர்களுக்கு இறப்புப் பணிக்கொடை உதவு தொகையாக 6 லட்சத்து 70 ஆயிரத்து 750 ரூபாவும் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் உதவு தொகையாக 29ஆயிரம் ரூபாவும் கண்சிகிச்சைக்கான உதவு தொகையாக 3 லட்சத்து 51 ஆயிரம் ரூபாவும் மருத்துவமனையில் தங்கி இருந்து சிகிச்சை பெற்றவர்களுக்கான உதவுதொகையாக ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 750 ரூபாவும் இதய, சிறுநீரக சத்திர சிகிச்சை பெற்றோருக்கு 20 ஆயிரம் ரூபா வுமாக மொத்தம் 12 லட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபாவை உதவு தொகையாக ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ–11)

# உங்கள் கணினியின் செயற்பாடு வேகம் குறைவா?



நீங்கள் பயன்படுத்தும் கணினியின் செயற்பாடு சில சமயங்களில் உங்களைப் பொறுமையின் எல்லைக்கு எடுத்துச் செல்லும்.

கணினியின் செயற்பாடுகளில் Processor மற்றும் RAM முக்கியமானவையாக திகழ்கின் றன. இவற்றின் அளவைப் பொறுத்து கணி னியின் செயற்பாடு அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

நமது பயன்பாடுகளுக்கு ஏற்ப Processor மற்றும் RAM ஆகியவற்றின் திறனை மாற்றிக்கொள் வது. கணினியின் இயங்குதிறன் அதிகரிக்க வழிவகுக்கும்.

நமது Processor மற்றும் RAM அதிக அளவில் இருந்தும். கணினியின் செயற்பாடு குறைவாக இருந்தால் நினைவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பயன்பாடுகளை Defragment செய்ய வேண் டியது அவசியம்.

Defragment என்பது கணினியில் பல்வேறு இடங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தரவுக ளையும், துண்டு துண்டாக ஆங்காங்கே இருக்கும் பல்வேறு பைல்களையும் ஒன்றுக் கொன்று தொடர்புடையவையாக நினைவகத் தில் சேமித்து வைக்கும் ஒரு முறை.

1) கணினியில் ஸ்டார்ட் பட்டனை கிளிக் செய்து. சேர்ச் ஆப்ஷனை தெரிவு செய்து. அதிலே Disk Defragmenter என டைப் செய்யலாம்.

2) Start d All Programs dAccessories d System Tools d Disk Defragmenter என்ற வழியிலும் தேர்வு செய்யலாம். பின் அங்கே தோன்றும் Disk Defrag menter பெட்டியில் உள்ள Current status என்ற பிரிவின் கீழே உள்ள கணினி யின் நினைவக பிரிவுகளான சி, டி. இ போன்ற வற்றைத் தெரிவு செய்து, Defragment Disk என்ற பட்டனை கிளிக் செய்து, Defragment செய்யலாம். இந்த முறையை அடிக்கடி செய்து வரும் போது உங்கள் கணினியின் செயற்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது நன்றாகத் தெரியும்.









## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னத மாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண் போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### ஓவியப்போட்டி

| | | |
|---|---|---|
| பிரிவு A | தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B | தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C | தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ............
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு ............
கற்கும் பாடசாலை: ............
தரம்: ............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ............
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ............
ஆசிரியரின் பாடத்துறை: ............

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி ............ அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு





இந்தியாவில் நடைபெற்றுவரும் மாபெரும் விமானக் கண்காட்சி

# ஆசியாவின் மாபெரும் விமானக் கண்காட்சி

## ஆரம்பித்து வைத்தார் பிரதமர் மோடி

பெங்களூர், பெப்19

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பெங்களூரில் இடம்பெற்று வரும் 'ஏரோ இந்தியா' விமானக் கண்காட்சிஆசியாவிலேயேமிகப்பெரியதாகும்.அந்தவகையில்,இந்தஆண்டு 10ஆவது சர்வதேச விமானக் கண்காட்சி பெங்களூரில் உள்ள யெலகன்கா எயார் போர்ஸ் நிலையத்தில்ஆரம்பமாகியுள்ளது.5நாள்கள் நடைபெறும் அந்தக் கண்காட்சியைப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்தார்.

அந்தக் கண்காட்சியில் விமானம் தயாரிக்கும் 328 வெளிநாட்டு நிறுவனங்களும்,295 இந்திய நிறுவனங்களும் கலந்து கொள்கின்றன.

அந்த நிகழ்வில் பிரதமர் மோடி ரபேல் பைட்டர் விமானத்தை செலுத்தவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 1996இல் பிரதமராக இருந்த தேவகவுடாவுக்கு பிறகு சர்வதேச விமானக் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கும் இரண்டாவது பிரதமர் நரேந்திர மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தி மொழிக்கு போட்டியாக டுவிட்டரை அதிர வைத்த தமிழ்

புதுடில்லி, பெப். 19

இந்தியாவில் டுவிட்டர் பாவனையில் அதிக அளவில் பயன்பாட்டில் இருந்த இந்தி மொழிக்குப் போட்டியாகத் தற்போது தமிழ் மொழியும் களம் இறங்கியுள்ளது.

வட இந்தியாவைப் பொறுத்தவரை அரசியல், சினிமா, வணிகம் போன்றவற்றில் எது நடந்தாலும் டுவிட்டரில், ஹாஸ்டக்கை உருவாக்கி மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தி விடுவார்கள். ஆனால், தென் இந்தியாவைப் பொறுத்தவரை அது கொஞ்சம் குறைவு தான். அதில், டுவிட்டர் பயன்படுத்தவதில் தமிழர்கள்கொஞ்சம்சுறுசுறுப்பானவர்கள். அப்படி, அவர்கள் ஹாஸ்டக்கை உருவாக்கினாலும் அது ஆங்கிலத்தில் தான் அதிகமாகப் புழக்கத்தில் இருந்து வந்தது. தற்போது தமிழிலும் ஹாட்ஸ்டக்கை உருவாக்கி உள்ளனர். தமிழ்வாழ்க என்பது தான் அந்த ஹஸ்டக் ஆகும்.

ஒருநாள் இரவிலேயே அதனை இந்திய அளவில் முதல் இடத்துக்கும் கொண்டுவந்துவிட்டனர். இந்த ஹாஸ்டக்கில் பிரபலங்கள், டுவிட் செய்தால் மதிப்பு அதிகம் என்று கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதில் உடனடியாக டுவிட் செய்தது திமுக தலைவர் கருணாநிதிதான். தனது டுவிட்டில், உயிரையே குடிக்க வந்த எதிரியே ஆயினும், உரிய மரியாதை அளிப்பதுதான் இந்த (தமிழ்) மண்ணுக்கே சொந்தமான பண்பாடு என்று கூறி கடைசியாகத் தமிழ்வாழ்க என்று ஹாஸ்டக் போட்டுள்ளார். அதனைத் தொடர்ந்துபலபிரபலங்களும்ஹாஸ்டக்போட்டுள்ளனர்.

# தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்காவில் மாநாடு

வொஷிங்டன், பெப். 19

அமெரிக்காவின் அதிபர் மாளிகையான வெள்ளை மாளிகையில் ஆரம்பமான தீவிரவாதத்துக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் இந்தியா உட்பட 60க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றுள்ளன.

அந்த மாநாடு வொஷிங்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. மூன்று நாள்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், தீவிரவாதச் செயல்களை ஒடுக்குவதற்கு உலக நாடுகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

மாநாட்டின் முதல் இரு நாள்களில் உள்நாட்டு தீவிரவாத ஒழிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ஒபாமா, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி ஆகியோர் அதில் உரையாற்றவுள்ளனர்.

இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத செயற்பாடுகள், உள்நாட்டில் நிலவி வரும் நக்ஸல் தீவிரவாதம் ஆகியவை குறித்து இந்தியா சார்பில் மாநாட்டில் பங்கேற்கும் உளவு அமைப்பு கூட்டுக் குழுவின் தலைவர் ஆர்.என்.ரவி பேசவுள்ளார்.

# செவ்வாய் செல்ல விரும்பும் தமிழக மாணவி சாரதா

புதுடில்லி,பெப்.19

செவ்வாய்கிரகத்துக்குப் பயணம் செய்யத் தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்யும் பணிகளைநெதர்லாந்தை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் தனியார் நிறுவனமான 'மார்ஸ் ஒன்' அமைப்பு ஏற்கனவே ஆரம்பித்திருந்தது..



அதற்கான அறிவிப்பு வெளியானஉடனேயே, உலகம் முழுவதிலும் இருந்து 2 இலட்சத்து 2 ஆயிரத்து 586பேர்செவ்வாய்க் கிரகத்துக்கான பயணத் திட்டத்துக்கு விண்ணப்பித்திருந்தனர். இந்தப் பட்டியலில் இந்தியர்களும் அடங்குகின்றனர். இது ஒரு வழிப்பயணம்ஆகும். செவ்வாய் கிரகத்துக்கு போய்ச் சேர்ந்தால் அங்கிருந்து திரும்பி வர முடியாது.அந்த விநோத பயணத்திற்காக உலகம் முழுவதிலும் இருந்து விண்ணப்பித்தவர்களின் பட்டியலில் இருந்து மூன்று சுற்று சோதனைகள் நடத்தி, 50 ஆண்கள் மற்றும் 50 பெண்கள் கொண்ட 100 பேர்களது பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ள கேரளாவைச் சேர்ந்த இளம்பெண் சாரதா பிரசாத் அமிர்தா பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் படித்து வருகிறார். பெற்றோருக்கு ஒரே பிள்ளை ஆவார். சாரதா பிரசாத் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

செவ்வாய்க்கிரகத்துக்கு சென்றால், திரும்ப முடியாது என்பதால் ஆரம்பத்தில் எனது பெற்றோர் இதற்குச் சம்மதிக்கவில்லை. பெற்றோரைச் சம்மதிக்க வைத்து இந்த தெரிவுப் போட்டிகளில் கலந்துகொண்டேன். இதற்கு மத்தியில் எனது பெற்றோரும் அதற்குமுழுமையான சம்மதம் தெரிவித்துவிட்டனர்.

எனக்கு விண்வெளி அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும் ஆர்வம் அதிகம். அத்துடன், எனக்கு ஆபத்தை எதிர் நோக்குவதிலும், சாகசங்கள் புரிவதிலும் ஆர்வம் உண்டு. செவ்வாய்க் கிரகப் பயணத்தில் இவை இரண்டுக்கும் வாய்ப்பு இருப்பதால், செவ் வாய்க் கிரகத்தில் குடியேற ஆர்வமாக இருக்கிறேன். இது வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் வாய்ப்பாகும். அது இந்தியர்களுக்கு பெருமையாகவும், உலக வரலாற்றில் இடம்பெறு வதாகவும் அமையும் என்றும் அந்தப் பயணத்தை ஆவலுடன் எதிர் பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# அமெ.இந்துக் கோவிலில் 'வெளியே போ' என்ற வாசகம்

## இந்தியா கடும் கண்டனம்



அமெரிக்க நாட்டிலுள்ள இந்துக் கோவிலின் சுவரில் வெளியே போ என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தமைக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.


வொஷிங்டன்மாகாணத்தின்சியாட்டில் துறைமுக நகரில் பிரசித்தி பெற்ற இந்துக் கோவில் ஒன்று உள்ளது.

இந்தக் கோவில் சுவரில் வெளியே போ என எழுதி, இனவெறி, மத வெறித்தாக்குதல்நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை இந்தியாவில் பல்வேறு தரப்பினரும் கடுமையாகக் கண்டித்துள்ளனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் பி.சி. சாக்கோ இதுகுறித்து தெரிவிக்கையில், அமெரிக்கர்கள் எப்போதும் தங்களை பன்முகத்தன்மை கொண்டவர்கள், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடங்கிய சமூகத்தைக் கொண்டவர்கள் என்று கூறுகிறார்கள். அமெரிக்காவில் இப்படிப்பட்ட சம்பவம் நடந்திருப்பது ஏற்க முடியாதது

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது குறித்து அறிக்கையும் வெளியிட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மோடியின் ஆடை ஏலம்



அமெரிக்க அதிபர் ஒபாமாவின் இந்திய வருகையின் போது தங்க இழைகளால் நரேந்திர மோடி என்று ஆங்கிலத்தில் நெய்யப்பட்ட நீல நிற ஆடை ஊடகங்கள் வாயிலாக பிரபலப்படுத்தப்பட்டு பொதுமக்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டது.

மோடியின் ஆட்சி குறித்து பேசி வந்த மக்கள், அவரது ஆடையைப் பற்றி பேசியதுடன், அவருக்கு எதிராக சில எதிர்மறையான கருத்துக்களும் எழுந்தன. இந்த நிலையில், அந்த ஆடை பற்றிய விடயம் அத்துடன் முடிந்துவிடவில்லை. தற்போது அந்த ஆடையை ஏலத்தில் விட்டு, அதன் மூலம் கிடைக்கும் பணத்தை, தூய்மை இந்தியா திட்டத்துக்கு பயன்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆடையை ஏலம் விட்டு அதனை தூய்மை இந்தியா திட்டத்துக்கு பயன்படுத்துவதன் மூலம், மிக விலை உயர்ந்த ஆடையை மோடி அணிந்திருந்தார் என்று. எழுந்த சர்ச்சையின் வலிமை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2015 | பெப்ரவரி 19 | வியாழக்கிழமை
உதயன்

# 21 கிறிஸ்தவர் கொலை பாப்பரசர் கடும் கண்டனம்



மணிலா, பெப். 19

எகிப்தில் 21கிறிஸ்தவர்களைஐ.எஸ். தீவிரவாதிகள் தலை துண்டித்துக் கொலை செய்தமைக்கு போப் பிரான்ஸிஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வத்திக்கானில் உள்ள ஸ்கொட்லாண்ட் தேவாலயத்தில் உரையாற்றிய போப் பிரான்சிஸ், இது குறித்து தெரிவிக்கையில் எகிப்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளால், 21காப்டிக் கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

மேலும்,கத்தோலிக்க,ஆர்தோடக்ஸ், காப்டிக் அல்லது லூதர்ன்ஸ் என எந்தப் பிரிவை சேர்ந்தவர்களானாலும் அவர்களின் நம்பிக்கைகள் கிறிஸ்தவத்தைச் சார்ந்துள்ளதால் அவர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்தின் கொள்கைகளையே பின்பற்றுகிறார்கள். எனவே கொல்லப்பட்டவர்கள் எந்தக் குற்றமும் செய்யாத நிலையில் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காகத் தான் கொல்லப்பட்டிருப்பதாகவும், அவர்கள் இறப்பதற்கு முன்பு ஜீசஸ்ஸே எங்களைக் காப்பாற்றுங்கள் என்பது தான் இறுதி வார்த்தைகளாக இருந்ததாக போப் தெரிவித்துள்ளார்.



சீனர்களின் சந்திரப் புத்தாண்டு ஹொங்ஹொங்கில் இன்று கொண்டாடப்படுகிறது செம்மறிகளின் ஆண்டு என வர்ணிக்கப்பட்டுள்ள அந்த கோலாகலமான கொண்டாட்டத்துக்காக வேடம் பூண்டுள்ள சீனச் சிறுவர்கள்.

# நைஜர் நாட்டில் போகோ ஹராம் தீவிரவாதிகள் 160 பேர் கைது

நியாமி, பெப் 19

நைஜீரியா மற்றும் நைஜர், கமரூன் ஆகிய நாடுகளில் போகோ ஹராம் தீவிரவாதிகள் தொடர்ந்து நாச வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் அந்த நாடுகளின் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்தநிலையில் நைஜர் நாட்டில் போகோ ஹரம் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய 160 பேரை கைது செய்து இருப்பதாக நைஜர் நாட்டு இராணுவக் கப்டன் அடிலி டோரா தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டவர்கள் டிபா நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புடையவர்கள் என்று ...ர் தெரிவித்துள்ளார்.

நைஜர் நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள டிபா நகரில் கடந்த வாரம் தீவிரவாதிகள் தொடர் தாக்குதல் மற்றும் மனித வெடிகுண்டுத் தாக்குதல்களில் ஈடுபட்டனர். அதனையடுத்து அங்கிருந்த பொது மக்கள் வெளியேறியுள்ளனர்.

இதற்கிடையே கடந்த திங்கட்கிழமை நைஜீரிய இராணுவம் போகோ ஹராம் தீவிரவாதிகளிடம் இருந்து இரு நகரங்களை மீட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ரி)






# வட கொரிய அதிபரின் இரகசிய விமானம்

பியொங்ஜாங்,பெப்.19

வட கொரியாவின் அதிபர் கிம் ஜாங் உன் பயன்படுத்தி வரும் இரகசிய விமானத்தின் படங்கள் முதல் முறையாக தற்போது வெளியாகியுள்ளன.

வட கொரியாவின் மறைந்த முன்னாள் தலைவர் கிம்–இல் ஜாங்குடைய பிறந்தநாள் கொண்டாடப்படும் வேளையில் வட கொரிய அரசு நாட்டு மக்களுக்குப் பல நலத் திட்டங்களை அறிவித்து விடுமுறை அளிக்கப்படுவது வழக்கம்.

இந்தநிலையில் கடந்த திங்கட்கிழமை கொண்டாடப்பட்ட அந்தத் தினத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் வட கொரிய அதிபர் தனிப்பட்ட விமானத்திலிருந்து ஏற்பாடுகளை அவதானித்த படத்தைக் கொரிய மத்திய செய்தி மையம் தற்போது வெளியிட்டுள்ளது.

200 பேரைச் சுமந்து கொண்டு செல்லக்கூடிய அந்த விமானம், அமெரிக்க அதிபர்கள் உபயோகப்படுத்தும் விமானங்களுக்கு இணையான நவீன விமானவகையாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கில் 45 பேர் எரித்துக் கொலை

## தீவிரவாதிகளின் அட்டகாசம்

பக்தாத், பெப்.19

ஈராக்கின் மேற்கு நகரான அல்–பாக்தாதியில் இஸ்லாமிய தீவிரவாதிகள் 45 பேரை எரித்துக் கொலை செய்துள்ளனர் என ஈராக்கிய பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அங்கு தாக்குதல்களை மேற்கொண்ட இஸ்லாமிய தீவிரவாதிகள் நகரின் பல பகுதிகளைக் கைப்பற்றினார்கள்.

பாதுகாப்பு படையினரின் குடும்பத்தினர் இருக்கும் வீடுகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் இருக்கும் வீடுகள் சிலவற்றை இஸ்லாமிய தீவிரவாதிகள் சுற்றிவளைத்திருக்கிறார்கள். இதனையடுத்து, அந்தப் பொலிஸ் உயரதிகாரிகள் அரசாங்கத்திடமும், சர்வதேச சமூகத்திடமும் உதவி கோரியுள்ளனர்.



லிபியாவில் காப்டிக் கிறிஸ்தவர்கள் 21பேர் இஸ்லாமிய அரச தீவிரதிகளால் கொல்லப்பட்ட சில தினங்களில் இந்தக் கொலைகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்த யேமன் ஹூதி கிளர்ச்சியாளர்கள்

யேமனில் ஆட்சியை அரசிடம் திருப்பி ஒப்படைக்குமாறு ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஹூதி கிளர்ச்சியாளர்கள் நிராகரித்துள்ளனர்.

இதுகுறித்து ஹூதி கிளர்ச்சியாளர்கள் கடந்த திங்கட்கிழமை வெளியிட்டுள்ளஅறிக்கையில்;

யேமன் மக்களின் விருப்பத்தையும்,இறையாண்மையையும் மதிக்க வேண்டும். பிற நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவது சட்ட விரோதம் எனக் கூறும் சர்வதேசச் சட்டங்களை மதிக்காமல் யேமன் விவகாரங்களில் அயல் நாடுகள் ...லயிட்டு வருகின்றன. அந்த நாடுகளின் பேச்சைக் கேட்டு ஐ.நா. பாதுகாப்பு சபை நடந்து கொள்ளக் கூடாது.யேமனில் ஏற்பட்டுள்ள புரட்சி வளைகுடா நாடுகளுக்கு எதிரானது அல்ல என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வளைகுடாவிலுள்ள யேமனின் ஆறு அயல் நாடுகள், ஹூதி கிளர்ச்சியாளர்க்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கும்படி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கோரிக்கை விடுத்தன.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பாதுகாப்பு ச்சபைக் கூட்டத்தில் இராணுவ நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்படாவிட்டாலும், ஆட்சியை அரசிடம் திருப்பி ஒப்படைக்குமாறு கிளர்ச்சியாளர்களை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

யேமனில் சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட அரசைக் கலைத்துவிட்டு சிறுபான்மை ஷியா பிரிவைச் சேர்ந்த ஹூதி இனக் கிளர்ச்சியாளர்கள் கடந்த வாரம் ஆட்சியைக் கைப்பற்றினர். அதன் காரணமாக, அவர்களுக்கு எதிராகப் போரிடும் உலகின் மிக ஆபத்தான தீவிரவாத இயக்கமான யேமன் பிரிவு அல்குவைதா அமைப்புக்கு ஆதரவு அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)



# நைஜீரியாவில் மனித வெடிகுண்டு தாக்குதல் 14 பேர் உடல் சிதறிச் சாவு

அபுஜா, பெப்.19

வடகிழக்குநைஜீரியாவின் ...ர்னோ மாவட்டத்தில் உள்ள சோ...னைச் சாவடி அருகே உடலில் வெடிகுண்டுகளைச் சுமந்து வ... மர்ம மனிதர்கள் நடத்திய மனித வெடிகுண்டுத் தாக்குதலி... 4 பேர் சாவடைந்துள்ளனர்.

இந்தக்கொடூரத்தாக்கு... அந்தப் பகுதியில் தெரு ஓர... வியாபாரம் செய்து கொண்... தவர்களுடன் குழந்தைகள் ...ட 11 பேர் உடல் சிதறி சா... ந்துள்ளனர். மேலும் அந்தத் ... லை நடத்திய 3 தீவிரவாதி... உயிரிழந்துள்ளதாகவும் உ... ஊடகங்கள் செய்தி வெளி... ள்ளன.

# கமரூன் ராணுவ... த்துடன் மோதல்: 86 தீவிரவாதிகள் உயிரிழப்பு

கமரூன்இராணுவத்துக்கும்போகோ ஹராம் தீவிரவாதிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 86 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், 5 இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கமரூன் பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்;

நைஜீரிய எல்லையையொட்டிய வாஜா பகுதியில் இராணுவத்தினர் மீது போகோ ஹராம் தீவிர வாதிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

அந்தத் தாக்குதலில் 86 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். 5 இராணுவ வீரர்கள்சாவடைந்துள்ளனர்.



தீவிரவாதிகளிடமிருந்து கவச வாகனம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது; மற்றொரு கவச வாகனம் அழிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மோதலில்பங்கேற்ற இராணுவ வீரர் ஒருவர் தெரிவிக்கையில், அந்த மோதல் 3 மணி நேரம் நீடித்ததாகவும்,அதிகமான தீவிரவாதிகள் மோதலில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையே, போகோ ஹராம் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 1,000 பேரைக்கைது செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி)

# ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் பன்னிரு

## திருமுறை பற்றிய ஒரு நோக்கு

பகுதி 4

*அண்மையில் லண்டனில் இடம்பெற்ற இரண்டாவது உலகத் திருமுறை மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.*

மு. மாசிலாமணி

தேவாரஆசிரியர்கள்மூவருக்கும் முன்னோடியாகப் பக்திப் பிரவாகம் பெருக்கெடுத்துக் கடல் மடை திறந்த வெள்ளம் போல் இசையும் இன்தமிழும் இரண்டற இணைந்த வகையில் பல்லாயிரக் கணக்கில் பக்திப் பாசுரங்கள் பாடித் தமிழ் வளம்பெறவிடிவெள்ளி போலத் தோன்றி வழி காட்டிய, திருமுறை ஆசிரியர்கள் 27 பேரில் ஒரேயொரு பெண் பாற்புலவரானகாரைக் காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இந்தத் திருமுறையில் அடங்குவது அதன் மற்றோர் சிறப்பாகும். தமிழ்த் தெய்வமான





முருகனிடம் ஆற்றுப்படுத்தும் திருமுருகாற்றுப்படை, பக்திப் பெருங்காப்பியமான பெரிய புராணத்தைப் பாடுவதற்குச் சேக்கிழாருக்கு ஆதாரமாக அமைந்த திருத் தொண்டர் திருவந்தாதி ஆகியன 11 ஆம் திருமுறையிலிருப்பதும் ஆற்றுப்படை உலா, கோவை, கலம்பகம், அந்தாதி போன்ற இந்தத் திருமுறையில் உள்ள பிரபந்தங்கள், அவ்வகையான பல சிற்றிலக்கியங்கள் பல பிற்காலத்தில் தோன்றித் தமிழிலக்கியம் வளம் பெற முன்னோடியாக அமைந்த வகையிலும் 11ஆம் திருமுறை தமிழ்மொழி வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது.

சங்க காலத்துக்குப் பின் தமிழர்களான சோழராட்சிக் காலத்தில் தமிழைத் தெய்வத் தமிழாக வீறு கொண்டொழுச்சியடையச் செய்த சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டச் தமிழ்ப் புலமையாளரான சேக்கிழாரால் பாடப்பட்ட பெருங்காப்பியமான பெரிய புராணமும், தெய்வத் தமிழின் சீர்மையை விளக்கவல்லதோர் ஒப்பற்றதொரு படைப்பாகும். பல்லவர் ஆட்சிக் காலத்திலிருந்து ஆரம்பித்த கோயிலை முதன்மைப்படுத்திய "கோயிற்பண்பாடு" ஒன்று வளர்ந்து முதலாம் இராசராசன் போன்ற சோழப் பேரரசர் காலத்தில் சமய, சமூக, பண்பாட்டு மையமாகக் கோயில்கள் முக்கியத்துவம் பெற்றுப்பெருவளர்ச்சி எய்துவதற்கு அச்சாணியாக விளங்கிய நாயன்மார்களின் உண்மை வரலாற்றை பக்தி உணர்வும் இலக்கிய இரசமும் இணைந்து இன்பம் பயக்கும் பெரும் படைப்பாகப் பெரியபுராணத்தைத் தமிழ் கூறும் நல் உலகுக்கு அளித்த தெய்வத் தமிழ்ப் புலவர் சேக்கிழார் சைவத் தமிழ் வரலாற்றில் ஒப்பற்ற ஒருவராவார்.

சங்க காலத்துக்குப் பின் தமிழர்களான சோழராட்சிக் காலத்தில் தமிழைத் தெய்வத் தமிழாக வீறு கொண்டொழுச்சியடையச் செய்த சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டச் தமிழ்ப் புலமையாளரான சேக்கிழாரால் பாடப்பட்ட பெருங்காப்பியமான பெரிய புராணமும் தெய்வத் தமிழின் சீர்மையை விளக்க வல்லதோர் ஒப்பற்றதொரு படைப்பாகும்.

முறைப்படுத்தப்பட்ட தெய்வத்தமிழ்ப் பாசுரங்களின் தொகுப்பான பன்னிரு திருமுறைகள் வேத மந்திரமாக விளங்குவன "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரமென்ப" எனத் தொல்காப்பியம் கூறும் மந்திர வரைவிலக்கணத்துக்கு அமையுமாறு இறைசக்தி உள் நின்னுந்த நிறைமொழி மாந்தர்களான அருளாளர்களின் நாவிலிருந்து வேத சாரம் போல் வெளிவந்த ஆணை மொழிகளே அந்தப் பக்திப் பாசுரங்கள். முறைப்படி நியமந்தவறாது ஓதிவரப் பயன்விளை விப்பன; ஆதலால் அவை பூசித்த தற்கும் கிரமமாக ஓதுவதற்கு முரியவை. மறைத்து வைக்கப் பட்டிருந்த தேவாரத் திருமுறை களைத் தேடிக் கண்டெடுத்துச் சைவத் தமிழுலகுக்கு அளித்தது மட்டு மன்றிக் கோயில்களில் அவற்றை நியமந் தவறாது ஓதுவதற்கும் காத்திரமான ஒழுங்குகள் மேற் கொண்ட முதலாம் இராசராசன் போன்ற சோழப் பெரு மன்னர் ஆட்சிக் காலமே தமிழர் வரலாற்றில் "பொற்காலம்" Golden Ageஎன வரலாற்றாசிரியர்களால் பேசப்படுகின்றது. சிறந்த சிவபக் தனான இவன் திரு முறைகளில் மிக்க ஈடுபாடு கொண்டு தான், நிர்மாணித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலில். கிரமமாகத் திருமுறைகளை ஓதுவதற்கென 48 ஓதுவார்களை நியமித்துத் திருமுறைகளை ஒலிக்கச் செய்த இந்த மன்னனின் அரும்பெரும் பணி கள் பற்றிக் கல்வெட்டுக்கள் விரி வாகப் பேசுகின்றன. இவனுடைய மகனான முதலாம் இராசேந்திர சோழன் ஓதுவார்களுக்கு மேலா கத் "தேவாரநாயகம்" என்பவரையும் நியமித்துத் திருமுறை ஓது வதை விரிவாக்கினான். மேற் குறித்தசோழஅரசுகளைப்போலவே இரண்டாம் இராசராசனும் கும்பகோணத்தில் தான் நிர்மாணித்த தாரசுரம் சிவன் கோயிலில் ஓதுவார்களை நியமித்துத் திருமுறைகளை ஒழுங்காக ஓதுவித்ததுடன் வடமொழி வேதங்களுக்குச் சமமான சிறப்பை வழங்கித் திருமுறைகளின் மகத்துவத்தையும் மாண்பினையும் எங்கும் பரவச் செய் தான்.

இவ்வாறு சோழ மன்னர்கள் திருமுறைகளைப் பரப்ப மேற் கொண்ட நடவடிக்கைகளால் அவற்றின் பெருமை எங்கும் பரவிற்று.

*(தொடரும்)*

# சிறந்த செயற்பாட்டாளர்களை கௌரவித்தது 'டிரையம்ப்'



இலங்கையின் முன்னணி உள்ளாடைத் தெரிவுகளை வழங்கி வரும் டிரையம்ப் இன்டர்நெஷனல் நிறுவனம் அண்மையில் கலதாரி ஹோட்டலில் இடம்பெற்ற வருடாந்த விற்பனை மாநாட்டில் மிகச்சிறந்த செயல்பாடுகளை வெளிப்படுத்திய சிறந்த செயற்பாட்டாளர்களை கௌரவித்து வெகுமதிகளை வழங்கியிருந்தது.

ஐ.சி.சி. கிரிக்கெட் உலக கிண்ண 2015 போட்டியின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்விற்கிணையாக இந்த ஆண்டு மாநாடு கிரிக்கெட் கருப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் டிரையம்ப் நிறுவனத்தின் நேரடி விநியோகஸ்தர்கள், மொத்த விற்பனை பங்காளர்கள், விநியோகஸ்தர்கள், முக்கிய கணக்குப் பங்காளர்கள் மற்றும் முக்கிய பங்கு உரிமையாளர்கள் ஆகியோரின் சிறப்பான சாதனைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

உள்நாட்டுச் சந்தையில் புதிய வரையறைகள் மற்றும் தங்கள் இலக்குகளையும் எய்துவதற்கு இரவு பகல் பாராது கடுமையாகஉழைத்த டிரையம்பின்சிறந்தசெயற்பாட்டாளர்களின்முயற்சிகளைக்கௌரவிக்கும் நிகழ்வாகஇம்மாநாடுவிளங்குகிறது.

இந்த நிறுவனம் பாரம்பரியமாக புதுமையான உற்பத்திகளை அறிமுகம் செய்வதில் கவனம் செலுத்தி வருகிறது. பெண்களின் உடலமைப்பு தொடர்பில் ஆழமான அறிவு மற்றும் புரிந்துணர்வை கொண்டுள்ள டிரையம்ப் போட்டிகளுக்கமைய தொழிற்துறை தரங்களை அமைத்து வருகிற்து.

டிரையம்ப் நிறுவனம் தற்போது உள்நாட்டு வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்கள் குறித்தே அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது. டிரையம்ப்பின் வெற்றியில் அதன் பங்காளர்கள் குழுமம் முக்கிய பங்கை வகிக்கிறது. அவர்களுடைய ஆதரவின்றி, டிரையம்ப் நிறுவனத்தினால் நிச்சயமாக உள்நாட்டுச் சந்தையில் இத்தகைய நிலையை அடைந்திருக்க முடியாது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் மிகச்சிறந்த செயல்பாடுகளை வெளிப்படுத்திய சிறந்த செயற்பாட்டாளர்கள் இந் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். டிரையம்ப் நிறுவனத்தின் எதிர்கால இலக்குகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் பங்குதாரர்களை ஊக்குவிப்பது போன்றவற்றை கலந்துரையாடுவதற்கான முக்கிய மாநாடாக இது விளங்கியது.

கிரிக்கெட் கருப்பொருளின் கீழ் இடம்பெற்ற நிகழ்வை டிரையம்ப் இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவின் தலைமை செயற்பாட்டு அதிகாரி அமல் பெர்னாண்டோ 2015 ஆம் ஆண்டிற்கான டிரையம்ப்பின் குறிக்கோளை பகிர்ந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

கடந்தாண்டுகளில் எமது உள்நாட்டு விற்பனை பங்குதாரர்களின் அதியுயர் சாதனைகள் குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எமது நிறுவனத்தின் வளர்ச்சியில் எமது பங்காளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களது தனிப்பட்ட அர்ப்பணிப்பு, ஈடுபாடு மற்றும் நிலைபேறுதன்மை ஆகியன வர்த்தக குறியீட்டினை இலங்கையில் மிக உயர்ந்த இடத்துக்கு கொண்டு சென்றுள்ளது.

எமது வர்த்தகத்தின் முதுகெலும்பாக விளங்கும் எமது விற்பனைக் குழுவினரை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறோம். எமது விற்பனைக் குழுவினர் எமது பங்குதாரர்களுடன் இணைந்து தமது சிறப்பான செயல்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பர் எனவும், 2015 மற்றுமொரு அற்புத ஆண்டாக அமையும் என எதிர்பார்க்கிறோம் எனவும் டிரையம்ப் இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி அமல் பெர்னாண்டோ தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு வெற்றிகரமான ஆண்டாக டிரையம்பிற்கு அமைந்திருந்ததுடன், ஆசியா முழுவதும் 2ஆவது மிக வேகமாக வளர்ந்து வரும் சந்தையாக டிரையம்ப் அமைந்துள்ளது. டிரையம்ப் இன்டர்நெஷனல் நிறுவனத்தின் இலங்கைக் குழுவினர் மற்றும் எமது வணிக பங்காளர்களின் அர்ப்பணிப்பானது பாராட்டு மற்றும் அங்கீகாரத்தை பெற வழிகோலியுள்ளது என இந்தியா மற்றும் இலங்கைக்கான பொது முகாமையாளர் சலிந்த்ர பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாம் கடந்தாண்டில் பல தடைகளைச் சந்தித்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு மிகவும் சிறப்பாக அமைந்திருந்து. கடந்த 2014இல் எமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது. உங்களது பெறுமதியான பங்களிப்பின்றி இந்த வெற்றி சாத்தியமில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நாம் இந்த வெற்றியை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம் என டிரையம்ப் இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் விற்பனை தலைவர் சஜீவ திலகரத்ன தெரிவித்தார். (த)

# வாசகர் திருமுகம்



**ஐ.நா. மனித உரிமைகள் சபையினால், இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில், உதயனின் முகநூலில் வாசகர்கள் பதிவு செய்த கருத்துக்கள்.**

**கிருமதி** – புதிய அரசுக்கு எதுவரை கால அவகாசம் கொடுத்திருக்கு என்று பார்ப்பம்.

**ருசா கண்ணன்** – சுதந்திர தினத்துக்கு மேற்குலகை திருப்திப்படுத்தச் சென்றமைக்கு கிடைத்த முதல் பரிசு. உலகை அனுசரித்து அரச இயந்திரம் செய்யும் விடயம் அனைத்தும் ஜனநாயகச் செயற்பாடு. அடக்கப்படும் இனம் செய்தால் ? இதற்கு மேல் எதுவும் கூற முடியாது. அப்படிக் கூறினால் நானும் பயங்கரவாதி. எங்களுக்கு அப்பாற்பட்ட சக்தி உண்டு. அதை மட்டும் நம்புவோம்.

**கபிலன்** - எமது இனத்துக்கு என்றுமே நியாயம் கிடைக்காது.

**சுதா தர்மா** - பொறுத்திருந்து பார்ப்போம்.

**கிருமதி** - பொறுத்தார் பூமியாள்வார்.

**ரூபன் செல்வரூபன்** - அரசியல் பேசுவதற்கான திறமை எம்மிடம் இல்லை.

**ஞானசூரி சுகன்யா** - கண்டனத்துக்குரிய செயல் இது. ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்பும் தாமத மேன்? பொறுத்திருந்து பார்ப் போம். தாமதிக்கப் பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமம்.

**குணரட்ணம் பிரகாஷ்-** – நமக்கு சார்பாக எவையும் நடக்கப் போவது இல்லை. உலக நாடுகள் தமது நலன் சார்ந்துதான் ஒரு முடிவு எடுக்கும். அது மட்டும் அல்ல நமக்கு தற்போது சிறந்த தலைமை இல்லாமையும் ஒரு காரணம்.

**ராஜ்மோகன் மோகனராஜ்** – பிற்போடப்பட்ட மைக்கு ரி.என்.ஏயின் ஜனாதிபதித் தேர்தல் முடிவும் காரணம்.

**சர்வானந்தா** – ஒத்திவைக்கப்பட்டது என்பதில் மாற் றங்கள் எவ்வாறானதாக இருக்கும்??? இப்போது உள்ள அறிக்கையின் நியாயங்கள் மூடி மறைக்கப்படுமா??. ஐ.நா. அறிக்கையே தமிழ னுக்கு ஒன்றும் பெரிதாக செய்துவிட போவதில்லை, இதில் ஒத்திவைப்பு வேறா?? மங்களவின் மூலம் மஹிந்த அரசை காக்கும் மங்களமான திட்டம் இது.

**அன்ரன்** - அப்படி என்றால் எப்போது ? தமிழர்கள் அழித்தபின்னரா?


# "வருவாரா ஆணையாளர்"

யாழ்.சின்னக்கடைப் பொதுச் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்யும் நாம் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றோம்.

பிற்பகல் இரண்டு மணியுடன் சந்தை நிறைவடைந்ததும். எமது மிகுதி மரக்கறிகளை எமது பட்டறையில் வைத்துவிட்டுச் செல்வது வழமையாகும். அங்கு மாலையில் உள்நுழையும் கட்டாக்காலி நாய்கள், எமது மரக்கறிகளை அசிங்கப்படுத்துகின்றன. சின்னக் கடைச் சந்தையின் நுழைவாயிலில் உள்ள கதவுகள் உடைந்து காணப்படுகின்றன. அதன் ஊடாகவே நாய்கள் வருகின்றன. சந்தையில் உள்ள இரண்டு மலசலகூடங்களும் கதவுகள் இன்றிக் காணப்படுகின்றன. இவை தொடர்பாக மாநகர சபைக்கும் சந்தைக் குத்தகைகாரர்களுக்கும் பல தடவைகள் தெரிவித்தும் பயன் இல்லை. யாழ்.மாநகரசபை ஆணையாளரிடம் நேரடியாகச் சென்றும் தெரிவித்தோம். அவர் வந்து பார்ப்பதாகச் சொல்லி 6 மாதங்கள் கடந்து விட்டன. இன்னும் வரவில்லை. இனியாவது வந்து எமது பிரச்சினைகளைச் சரி செய்வாரா?

*ந.ரூபன், மரக்கறி வியாபாரி*

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

அடுத்து வரும் மாதங்களில் இலங்கை தொடர்பான இரு முக்கிய விடயங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் இறுதிப் போரில் இலங்கை அரசு இழைத்த போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசு பதவியேற்ற பின்னர் வருகின்ற முதலாவது அமர்வாக இந்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு உள்ளது.

மாற்றம் என்ற கோஷத்தை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்ட பொது எதிரணியின் வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் உள்நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. புதிதாக பதவியேற்ற அரசு அத்தியாவசியப் பொருள்களின் விலையை உடனடியாகக் குறைத்ததுடன் நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றமை சர்வதேச மட்டத்தில் இலங்கை நற்பெயரை சம்பாதிக்க வழி வகுத்து வருகிறது. அதிலும் குறிப்பாக தமிழர் தாயகப் பகுதியில் விடுவிக்கப்படாத – பாதுகாப்பு வலயங்களாக கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள தமிழர்களின் நிலங்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு ஆரம்பித்திருக்கிறது. இந்த நல்லெண்ண நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ள தருணத்தில் ஜெனிவாவில் ஐ.நா. விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் புதிய அரசின் நல்லெண்ண நடவடிக்கைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவும், புதிய அரசு ஐ.நாவிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தும் அந்த அறிக்கையை வெளியிடுவதற்கு மேலும் 6 மாதங்கள் பிற்போடுவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் அறிவித்திருக்கிறார். தமிழர்களைப் பொறுத்தமட்டில் இந்த அறிவிப்பு பெரும் ஏமாற்றமாக இருந்தாலும் இலங்கை அரசைப் பொறுத்தமட்டில் இது ஒரு சாதகமான விடயமாகவே நோக்கப்படுகிறது.

அடுத்த விடயமாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கை நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைய இருப்பதால் பொதுத் தேர்தலுக்கான ஆரம்ப செயற்பாடுகள் இப்போதே களைகட்டத் தொடங்கிவிட்டன. கட்சிகள் பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வருகின்றனர்.

இந்த இரு முக்கியமான விடயங்களுக்கும் நடுவே தமிழர் தாயகப் பகுதியிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள்ளே கருத்து மோதல்களை ஆரம்பித்திருப்பதுதான் வெட்கக் கேடான விடயம். மிக முக்கிய தருணத்தில் இந்த கருத்து மோதல் ஆரம்பமாகியிருப்பது குறித்து தமிழ் புத்திஜீவிகள் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தமிழர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற பிரதான கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்களில் தன்னை முற்றுமுழுதாக ஈடுபடுத்தி செயற்பட்டு வருகிறது. தமிழர்களின் மீள்குடியமர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, அபகரிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல், உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் ஆகியன உட்பட பல்வேறு பிரச்சினைகளில் கூட்டமைப்பு தன்னை முழுமையாக ஈடுபடுத்தி செயற்பட்டு வருகிறது. இந்தத் தருணத்தில் புதிதாக பதவியேற்றுள்ள மைத்திரி அரசுக்கு தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் 72 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக இலங்கையின் தேசிய சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொண்டார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். தமிழரின் நல்லெண்ணத்தை சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கையாக சம்பந்தன் இதைச் செய்திருந்தாலும் அந்த செயற்பாடு உள்நாட்டிலும் புலம் பெயர் தேசங்களிலும் பெரும் விமர்சனங்களை உண்டுபண்ணியுள்ளது. சம்பந்தனின் இந்த நடவடிக்கை தொடர்பாக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தாலும் அவற்றையெல்லாம் மிக அமைதியாகக் கையாண்டு ராஜதந்திர ரீதியாக அணுகி காய் நகர்த்தும் அரசியல் தந்திரம் கூட்டமைப்புக்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

அதேநேரத்தில் முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டு இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் பிரிந்து சென்று உருவான தமிழ்த் தேசிய முன்னணி என்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சி மீதும் கூட்டமைப்பு மீதும் வசைபாடத் தொடங்கியிருக்கிறது. ஆட்சி மாற்றத்துக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது தவறு என் றும், சுதந்திர தின வைபவத்தில் சம்பந்தன் கலந்து கொண்டிருக்கக் கூடாது என்றும் கருத்துக்களை முன்வைத்து கூட்டமைப்பு மீது குற்றச்சாட்டுக்களைத் தொடுக்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அதேபோன்று தமிழர்களின் இன ஐக்கியத்தை சிதைக்காமல் சம்பந்தனை தலைவராக ஏற்றுக் கொண்டு கூட்டமைப்புடன் வந்து இணையுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். எனவே முக்கியமான தருணங்களில் இவ்வாறு பிரிந்து நின்று கொண்டு ஒருவர் மீது ஒருவர் வசைபாடுவதை தவிர்த்து இனியாவது அனைவரும் ஒன்றித்து ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. அவ்வாறு அவர்கள் செய்யத் தவறினால் அதனைப் பெரும்பான்மைக் கட்சிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஈழத் தமிழர்களின் விவகாரங்களில் காலம் வாங்கும் போக்கு ஏனோ....?

இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை அண்டை நாடான இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்தார். இலங்கையர்களின் -- சிங்கள மக்களினதும், தமிழ் மக்களினதும் -- பூர்வீகம் இந்தியாவின் வடக்கும், தெற்கும் என்பதால் மைத்திரியின் முதலாவது உத்தியோகபூர்வ பயணம் (Maiden Visit) பாரத நாட்டுக்கு அமைந்தமை பொருத்தமானதே.

ஆனால் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையில் இடம்பெற்ற கன்னிப் பேச்சுக்களின் போது, ஈழத் தமிழர்களின் எந்த விடயம் குறித்தும் கண்டு கொள்ளப்படவில்லை!

பேச்சுக்களை முடித்துக் கொண்டு, நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில், இரு நாடுகள் குறித்த விடயங்கள் தொடர்பில் கருத்துப் பரிமாற்றங்களை வெளிப்படுத்திய இரண்டு தலைவர்களும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எதுவுமே தெரிவிக்காமல், மௌன ஆசாமிகளாகச் செயற்பட்டனர், நடந்துகொண்டனர்.

ஈழத்தமிழ் மக்கள் தொடர்பில் எதனையுமே, வெளிப்படுத்துவது இல்லை என்று இரண்டு தரப்புகளும் ஒப்பந்தம் செய்தனவோ என்று சந்தேகிக்கும் வகையில் அவர்களது செயற்பாடு -- ஊடகவியலாளர் சந்திப்பு-- அமைந்திருந்தது. இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு, குறிப்பிட்ட கால வரையறைக்குள் தீர்வுகள் காணப்பட வேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்திய ஆட்சியாளர்களை பல்வேறு சந்தர்ப்பங்களிலும், நரேந்திரமோடியின் மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.

சிங்கள மக்களுக்கு உரிய உரிமைகள் பலவும் இன்றி, இலங்கை வாழ் தமிழ் அரசியல், வாழ்வியல் விடயங்களில் அவர்கள் பாகுபாடுகளை அனுபவிக்கும் அவலம் தொடர்கிறது.

உதாரணத்துக்கு ஒன்று --

ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட அரசைமப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் நோஞ்சான் நிலையிலேயே இன்னமும் புதையுண்டு கிடக்கிறது.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பு உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு மூலம், பிளக்கப்பட்டு விட்டது. - பிரிக்கப்பட்டு ஆண்டுகள் பத்துப் பறந்து போயின.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த புதிய ஜனாதிபதியும், புதிய அரசும் அது குறித்து, தான் கண்ணை மூடினால் பூலோகம் இருண்டு விட்டதாக நினைக்கும் பூனையின் நிலையைக் காட்டி நிற்கின்றனர்.

இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் தமது சந்திப்பின்போது, நான்கு ஒப்பந்தங்களை கச்சிதமாகச் செய்துள்ளனர். ஆனால் இலங்கைவாழ் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து, எந்த விதமான (Positive) சாதகமான நிலைமை நாடியும் கருத்துப் பரிமாறப் பட்டதாகத் தகவல் இல்லை.......!

தமிழ் மக்களின் மனித உரிமைகள் இந்த நாட்டில் மீறப்பட்டமை குறித்து தக்க வகையில் எந்தவித ஆக்கபூர்வமான விசாரணையும் மேற்கொள்ளப்படாதிருத்தல் --

தமிழர்களின் பிரதேசங்களில் இருந்து இராணுவத்தை குறைக்காதிருத்தல், நீண்டகால விவகாரமான கச்சதீவுப் பிரச்சினை போன்றவை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதா என்று தானும் உத்தியோகபூர்வ அறிவித்தல் இல்லை!

மேலும், இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையில் நிரந்தர தீர்வுகாணப்படாத முக்கிய பிரச்சினைகள் நெடுங்காலமாக அனுமார் வால் போன்று, நீண்டு கிடக்கின்றன.

அதனைக் கருத்தில் கொண்டேனும், இரண்டு அரசுகளும் பேச்சுவார்த்தைகள் மூலம் செயற்திட்டங்களை வகுத்து, குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்ற வேண்டும் என இந்திய அரசு வலியுறுத்துமா என்பது குறித்து வெளிச்சமான சூழலைக் காண முடியவில்லை.

இந்தியாவின் புதிய நரேந்திரமோடி அரசும், இலங்கையின் புதிய மைத்திரிபால சிறிசேன அரசும் --

முந்தைய இந்திய சோனியா அரசும் இலங்கையின் மஹிந்த ராஜபக்ஷ அரசும் - ஒளித்துப் பிடித்து விளையாடியதைப் போன்றே, ஈழத்தமிழர்களின் விவகாரங்களில் காலத்தை வாங்கப் போகின்றன என்பது வெளிச்சமாகத் தெரிகிறது!

# பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் மூலோபாய நகர்வு



இலங்கையின் புதிய அரசு, பல பில்லியன் டொலர் பெறுமதியான சீனத்துறைமுகத் திட்டத்தை மீளவும் தொடர்வதற்கான ஆதரவை வழங்குவதென அதிர்ச்சி தரவல்ல தீர்மானத்தை எட்டியதானது இந்தப் பிராந்தியத்தில் நீண்ட காலமாகச் செல்வாக்குச் செலுத்தும் சீனாவுக்கு இலங்கை அரசால் எவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

அயல் நாடுகளுடனான தொடர்பை விரிவுபடுத்துவதற்காக, இந்திய மாக்கடலின் கரையோரம் முழுவதிலும் பாதுகாப்பான வலைப்பின்னலை உருவாக்கும் நோக்குடன் சீனாவால் மேற்கொள்ளப்படும் துறைமுக அபிவிருத்தித் திட்டத்துக்கு இலங்கையின் தற்போதைய புதிய அரசு தனது ஒப்புதலை வழங்கியுள்ளமை அதிர்ச்சியளிக்கும் விடயமாகும்.

சிறிலங்காத் தீவின் மேற்குக் கரையோரத்தில் உள்ள கொழும்பில் 1.4 பில்லியன்டொலர்பெறுமதியில்துறைமுக நகரம் ஒன்றை உருவாக்குகின்ற சீனாவின் திட்டத்தைத் தடைசெய்வேன் என தேர்தல் பரப்புரையின் போது சிறிலங்காவின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அதிபர் மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்தபோதும், தற்போது அவர் சீனத் திட்டத்திற்குப் பச்சைக் கொடியைக்காண்பித்துள்ளதானது கடந்த வாரத்தின் பிரதான செய்தியாகக் கருதப்பட்டது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டபோது அவரது தேர்தல் அறிக்கைகள் சீனாவிடமிருந்து சிறிலங்கா தனது உறவை விரிசலாக்கும் என்பதைக் கோடிட்டுக் காட்டியிருந்தன. அதாவது சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ சீனாவுடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணியிருந்தார்.

அதனை முறியடிப்பதற்காக மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் சீனாவுடனான உறவு விரிசலடையும் என்கின்ற எதிர்பார்ப்பைத் தோற்றுவித்திருந்தநிலையில், கடந்த வாரம் சீனாவின் துறைமுக நகரத் திட்டத்துக்கு புதிய அரசு தனது அனுமதியை வழங்கியதானது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கையின் புதிய அரசு கடந்த மாதம் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர், புதிய அரச அதிகாரிகள் சீனாவால் மேற்கொள்ளப்படும் திட்டத்தால் ஏற்படவல்ல பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பான தமது கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

மேற்குலகுக்குச் சவாலாக இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனா தனது இருப்பை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதானது, இந்தியா போன்ற அயல்நாடுகளுக்குவருத்தத்தைஅளித்துள்ளது. கடந்த ஆண்டு சீன நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கான அனுமதியை அப்போதைய இலங்கை அரசு வழங்கியமை இந்திய அரசை வியப்பில் ஆழ்த்தியது.

சீனாவின் கரையோரப் பட்டுப் பாதைத் திட்டம் இந்திய உபகண்டத்தை சீனா தனது ஆதிக்கத்துக்குள் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியாகும் என இந்திய பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தென் சீனக் கடலில் நிலவிய சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் அமெரிக்கா சில ஆண்டுகளைக்கழித்தது. இந்தக் காரணத்தாலேயே சிறிலங்கா, பாகிஸ்தான், மாலைதீவு, கொமோரஸ் மற்றும் செச்சல்ஸ் போன்ற நாடுகளில் சீனாவால் மேற்கொள்ளப்படும் அடிக்கட்டுமான முதலீடுகள் மற்றும் பொருளாதார, இராஜதந்திர, சாத்தியமான இராணுவத் தொடர்புகளை விரிவாக்குவதை அமெரிக்கா தற்போது உற்றுநோக்குகிறது.

சீனாவைப் பொறுத்தவரை கரையோரப்பட்டுப்பாதையானது பொருளாதார அபிவிருத்தித் திட்டமாகும். சீனாவுக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இடையில் பொது அபிவிருத்தி மற்றும் செழுமையைக் கொண்டுவருவதைப்பிரதானநோக்கமாகக் கொண்டே பட்டுப் பாதைத் திட்டம் மேற் கொள்ளப்படுவதாக சீன அதிபர் குறிப்பிட்டுள்ளார்.


பெரிய, நவீன துறைமுகங்களைக் கட்டுதல் மற்றும் ஏனைய கட்டுமானங்களை நிறுவுதல் போன்றவை பிராந்தியம் முழுவதிலும் வர்த்தகம் சார் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது மட்டுமன்றி, பெரிய, குறுகிய கால பொருளாதார நடவடிக்கைகளை பட்டுப் பாதைத் திட்டம் மேற்கொள்ளப்படும் நாடுகளில் விரிவுபடுத்துவதையும் சீனா நோக்காகக் கொண்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, சிறிலங்காவின் துறைமுக அபிவிருத்தித் திட்டத்துக்காக புதிய முதலீட்டில் 13 பில்லியன் டொலர்கள் செலவிடப்படுகிறது.

ஆனால் இவை அனைத்தும் வெறும் டொலர்கள் மற்றும் சதங்களை நோக்காகக் கொண்டதல்ல. கரையோரப் பட்டுப் பாதைத் திட்டத்துக்கான முயற்சிகள் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனா தனது இருப்பைப் பலப்படுத்தவும், தென்கிழக்காசியாவில் பல ஆண்டு கால இறுக்கமான, நெருக்கமான இராஜதந்திரத் தொடர்பின் பின்னர் தனக்கான நட்பு நாடுகளை அதிகரித்துக் கொள்வதற்கும் வழிகோலுகிறது.

சீனாவின் கரையோரப் பட்டுப் பாதைத் திட்டமானது ஒரு மூலோபாயக் கூறாகும். அடிக்கட்டுமானத் திட்டங்களில் அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் பிராந்தியத்தில் சீனா தனது செல்வாக்கை அதிகரிப்பதற்கும், நட்பு வட்டார வலைப்பின்னலை உருவாக்குவதற்கும் உதவுகிறது என ஆசிய-பசுபிக் பாதுகாப்பு ஆய்வாளரான விர்ஜினியா மரன்ரிடோ குறிப்பிட்டுள்ளார்.

*(நன்றி : புதினப்பலகை)*



■ சேரலாதன்

மக்கள் மத்தியில் மஹிந்தவின் செல்வாக்கு இன்னமும் காணப்படுகின்றது. அவரது சகோதரரும் முன்னாள் பாதுகாப்பு செயலருமான கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வேண்டியவர்கள் படையினர் மத்தியில் முக்கிய பொறுப்புக்களை வகித்து வருகின்றனர். இவர்கள் நிலைமைக்கேற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ளக் கூடியவர்கள்.



# ஜனாதிபதியின் எதிர்கால அரசியல் கேள்விக் குறியாக மாறிவிடுமா?

## ஊழல், மோசடி புரிந்தோர் தண்டிக்கப்படாதுவிட்டால்

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு பதவியேற்றுக் கொண்டதும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அரசின் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பான தகவல்கள் வெளிவர ஆரம்பித்தன. மஹிந்த ஆட்சியில் நாடு முழு அளவில் சூறையாட்டப்பட்டமையும் மக்களுக்குத் தெரியவந்தது. இலங்கையின் வரலாற்றிலேயே இவ்வாறான ஊழல், மோசடிகள் முன்னொரு போதும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென புதிய ஜனாதிபதி உட்பட அரசின் முக்கியஸ்தர்கள் உறுதி வழங்கினார்கள். ஆனால் புதிய அரசு பொறுப்பேற்று ஒரு மாதம் கழிந்த நிலையிலும் குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக விசாரணைகள் இடம்பெறுவதாக மட்டுமே தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் மோசடிகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு ஆதாரமிருந்தால் கைது செய்து காவலில் வைக்க முடியும். ஆனால் இதுவரை அப்படி எதுவுமே இடம்பெறவில்லை. மாறாக இவர்களின் பாதுகாப்பை அதிகரிக்கச்செய்யும்நடவடிக்கைகளே இடம்பெற்று வருகின்றன. இதன் உள்ளார்ந்தம் புரியவில்லை. ஆனால் முன்னாள் ஜனாதிபதி மீதான அக்கறை மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் இன்னமும் உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவற்றைப் பயன்படுத்தி குற்றம் புரிந்தவர்களென இனம் காணப்பட்டவர்களை உடனடியாகவே சிறைக் காவலில் வைக்கமுடியும். சிலவேளை ஜனாதிபதித் தேர்தலில் தாம் தோற்றிருந்தால் தற்போது உயிருடன் இருந்திருக்க முடியாதென்றும், தமது குடும்பத்தினர் கூடச் சீரழிக்கப்பட்டிருப்பார்கள் எனவும் பகிரங்கமாகக் கூறிய ஜனாதிபதி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதித்தமை அவரது மென்போக்கையே எடுத்துக் காட்டுகின்றது.

நாடு அரசியல் குழப்பமொன்றை எதிர்கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதி தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டு வருவாராயின் தற்போதைய அரசு மட்டுமல்ல முழு நாடுமே பாதிக்கப்படுவது உறுதியாகும்.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தாம் அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டதாக இதுவரை அறிவிக்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் போஷகராக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நிகரான வகையில் மற்றொரு முன்னாள் ஜனாதிபதியும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவருமாகிய மஹிந்த ராஜபக்ஷ பதவி வகிக்கின்றார். அவரைத் தீவிர அரசியலில் குதிக்க வைப்பதற்கான முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. அவர் மூலமாகப் பயனடைந்தவர்கள் அந்தப் பயன்களை இழந்து விடுவதை விரும்பமாட்டார்கள் என்பதால் மஹிந்தரை ஓய்ந்திருப்பதற்கு அனுமதிக்கமாட்டார்கள். அது மட்டுமல்லாது மோசடிக் குற்றச்சாட்டுக்களில் சிக்கிக்கொண்டவர்களும் தாம் அவற்றிலிருந்து விடுபடுவதற்கு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை வகித்தால் மட்டுமே முடியுமென நம்புகின்றனர். ஆகவேதான் இத்தகையவர்கள் மஹிந்தரை இந்த நாட்டின் உயர்பதவியில் அமர்த்துவதற்குத் துடியாய்த் துடிக்கின்றனர்.

தீவிர இடதுசாரிக்கொள்கைகளைக் கொண்ட ஜே.வி.பி.கட்சியின் பரப்புரைச் செயலாளராகப் பதவி வகித்த விமல் வீரவன்ஸ பின்னர், தமது குடும்பத்தை வளர்த்துக்கொள்வதற்காக மஹிந்தவுடன் ஒட்டிக் கொண்டார். அமைச்சர் பதவியையும் வகித்தார். ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் இவர்மீது மட்டுமல்ல இவரது மனைவி மீதும் சுமத்தப்பட்டுள்ளன. இவரை ஏற்றுக் கொள்வதற்குத் தற்போதைய ஜனாதிபதி தயாரில்லை என்பதும் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இதனால் மஹிந்தரை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கு இவர் முன்னின்று முயன்று வருகின்றார்.

இவருடன் மக்கள் செல்வாக்கு இல்லாத நிலையிலும், இடதுசாரிகள் என்ற பெயரை மட்டுமே பயன்படுத்தி வருகின்ற வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர ஆகியோரும் இணைந்துள்ளமை வேடிக்கை தருவதாக உள்ளது.

தெற்கில் மஹிந்தவின் செல்வாக்கு மக்கள் மத்தியில் இன்னமும் காணப்படுகின்றது. அவரது சகோதரரும் முன்னாள் பாதுகாப்பு செயலருமான கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வேண்டியவர்கள் படையினர் மத்தியில் முக்கிய பொறுப்புக்களை வகித்து வருகின்றனர்.

இவர்கள் நிலைமைக்கேற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ளக் கூடியவர்கள்.

கோத்தபாய கூட சதிப் புரட்சி ஒன்றுக்கு தூபமிட்டவரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட போதிலும் இன்னமும் சுதந்திரமாகவே நாட்டில் உலவி வருகின்றார். இவரொரு இரட்டைக் குடியுரிமை பெற்ற அமெரிக்கப் பிரசை என்கின்ற போதிலும் அமெரிக்கா சென்றால் இடர்களை எதிர்கொள்ள வேண்டுமென்ற அச்சத்தில் இங்கேயே தங்கியுள்ளார்.

மேலும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலும் சிக்கல்கள் மற்றும் குழப்பங்கள் நிறைந்ததாக அமையப்போகின்றது. தற்போதைய பிரதம மந்திரியான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்தப் பதவியில் நீடிப்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. தேர்தல் முடிவுகள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குச் சாதகமாக அமைந்துவிட்டால் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே அந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம். அது மஹிந்தராகக் கூட இருக்கலாம்.

ஆகவே ஜனாதிபதி மைத்திரிபால தமக்குரிய நிறைவேற்று அதிகாரங்களைத் துறந்து அவற்றைப் பிரதம மந்திரியிடம் ஒப்படைப்பதற்கு அவசரப்பட வேண்டிய தருணம் இதுவல்ல. மாறாக நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஊழல், மோசடிகள் மற்றும் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அனைவரையும் உடனடியாக உரிய ஆதாரங்களுடன் நீதியின் முன் பாக நிறுத்துவதே அவரது தற்போதைய முக்கிய கடமையாகும். அதன் மூலமாக மஹிந்த மீதான மக்கள் செல்வாக்கு வீழ்ச்சியடையும் என்பதில் சந்தேகமில்லை. அதன் மூலமாகத் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குச் சாதகமாக அமைவதுடன் எதிர்ப்பாளர்களும் அடக்கப்பட்டு விடுவார்கள்.

இதைவிட்டு வீணாக்கப்படும் ஒவ்வொரு கணமும் ஜனாதிபதிக்குப் பின்னடைவை விளைவிப்பதாக மாறி விடும் என்பதை மறுக்கவே முடியாது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 6 | | 7 | 9 |
| | | | | | | | | 6 |
| | | 5 | | | | 3 | 8 | |
| | 3 | 9 | 1 | | 5 | | | 7 |
| 1 | 8 | | 4 | 6 | 9 | | 3 | 2 |
| 2 | | | 3 | | 7 | 9 | 4 | |
| | 9 | 8 | | | | 4 | | |
| 5 | | | | 4 | | | | |
| 3 | 2 | | 9 | | | 6 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 2 | 6 | 9 | 4 | 3 | 1 | 7 |
| 9 | 1 | 3 | 5 | 7 | 2 | 4 | 6 | 8 |
| 7 | 6 | 4 | 3 | 1 | .8 | 2 | 5 | 9 |
| 6 | 3 | 1 | 4 | 5 | 7 | 9 | 8 | 2 |
| 2 | 7 | 8 | 9 | 6 | 1 | 5 | 3 | 4 |
| 4 | 9 | 5 | 2 | 8 | 3 | 1 | 7 | 6 |
| 1 | 2 | 9 | 8 | 3 | 6 | 7 | 4 | 5 |
| 3 | 4 | 6 | 7 | 2 | 5 | 8 | 9 | 1 |
| 8 | 5 | 7 | 1 | 4 | 9 | .6 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**மாசி-08**
**வெள்ளிக்கிழமை**
**20.02.2015**

திதி: துதியை: பி.இ.01.55 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ.04.30
சுபநேரம்: 06.32-08.02 வரை
இராகுகாலம்:11.02-12.32 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பயன் கருதாத செயல் சிறந்தது

மிகச்சாதாரண எந்த வேலையையும் இழிவாகக் கருதக் கூடாது. எந்த வேலையையும் சுயநல மில்லாமல் செய்ய வேண்டும். சுயநலமில்லாமல் செயல் புரிய வேண்டும் என்பதை அறிந்து கொள்ளாத மனிதன் முதலில் சுயநலத்துக் காகவாவது செயல் புரிய வேண்டும். அதன் பின்னராவது ஒவ்வொருவரும் பயன் கருதாது செயல் புரிகின்ற மேலான நிலையைப் புரிந்து கொள்ளவும் பயன் கருதாது செயல் புரியவும் ஆரம்பிக்க வேண்டும்.

## தவக்காலச் சிந்தனை



# சிலுவை வழியே இறைவழி

இறைவழி நடப்பது என்பது சுலபமான காரிய மல்ல. பல்வேறு சவால்கள், சோதனைகள், இடர்கள், நோய்கள், சோர்வுகள், கடமைகள், உறவுகள், பரிகாசங்கள், விமர்சனங்கள் போன்ற சிலுவைகளை தளராத உறுதியுடன் சுமந்து சென்று இலக்கை அடைய முயலும் கடினமான பாதைப் பயணமே இறைவழிக்கு எம்மை இட்டுச் செல்லும். இதனையே இயேசு "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தமது சிலுவையைநாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" என்று கூறியதோடு மட்டுமல்ல செயலிலும் காட்டினார். இறைவழியே நிலை வாழ்வை பரிசாகப் பெற் றுத்தர வல்லது. இதனை மறந்து முறையற்ற விதத்தில் பணம், பட்டம், பதவி , புகழ், அதிகாரம், சொத்துக் குவிப்பு, மண், பெண், பொன் போன்ற உலகியல் சிலுவைகளுக்கு அடிமையாகி அமிழ்ந்து விடும் நிலையே இன்றைய சமகால நிகழ்வுகளாகி விட்டன. இவ்வாறு உலகம் முழுவதையும் தம தாக்க முனைந்து தமது வாழ்வையே இழப்பா ரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன? உலக செல்வங்கள் உலகுக்கே உரியன. நாம் புரியும் ஆன்மிக செல்வங்களான நற்செயல்கள் விண்ணக வாழ்வுக்கு உரியவை.

எனவே எமது அன்றாட வாழ்வில் எவற்றை நாம் சில்லுவைகளாக உணர்கிறோமோ அவற்றை பொறுமையுடன் ஏற்று எமது அருள் வாழ்வின் படிக்கற்களாக மாற்றி இயேசு கற்பித்த கல்வாரிப் பாடத்தின்படி வாழ்வோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 550 | 600 | 700 | 600 | 500 |
| நண்டு | 400 | 350 | 450 | 300 | 300 | – |
| கணவாய் | 400 | 550 | 550 | 500 | 300 | – |
| பாரை | 550 | 400 | 400 | 450 | 450 | 380 |
| சுறா | 600 | 500 | 550 | 550 | – | 460 |
| சீலா | 450 | 400 | 450 | 350 | 400 | 350 |
| விளை | 450 | 350 | 400 | 450 | 400 | 350 |
| முரல் | 350 | 300 | 350 | 300 | 350 | – |
| கும்பிளா | 400 | 250 | 300 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 400 | 500 | 450 | 300 | 400 | – |
| ஒரா | 350 | 300 | 350 | 350 | – | – |
| திரளி | 350 | 250 | 300 | 200 | 200 | – |
| நகரை | 300 | 300 | 350 | 300 | – | 300 |
| சூடை | 100 | 150 | 120 | 80 | 150 | 60 |
| ஒட்டி | 200 | 150 | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 250 | 300 | 150 | 250 | 200 | 140 |
| பாலை | 300 | 250 | 300 | 400 | – | – |
| வாழை | 350 | 150 | 350 | 300 | 200 | 250 |
| கொய் | 100 | 150 | 90 | 100 | – | – |
| மதனம் | 250 | 250 | 300 | 200 | - | 250 |


## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 30 | 60 | 20 | 40 | 40 |
| கத்தரி | 80 | 60 | 80 | 100 | 80 | 80 | 60 |
| கரட் | 120 | 140 | 160 | 140 | 120 | 160 | 100 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 60 | 40 | 60 | 45 |
| பயிற்றை | 140 | 140 | 100 | 150 | 120 | 160 | 100 |
| பாகல் | 100 | 100 | 100 | 140 | 140 | 140 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 40 | 80 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 90 | 80 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 80 | 110 | -80 | 100 | 120 | 100 |
| பூசணி | 100 | 100 | 120 | 100 | 100 | 140 | 120 |
| தக்காளி | 300 | 200 | 260 | 220 | 220 | 240 | 220 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 90 | 80 | 80 | 80 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 80 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 40 | 30 | 10 | 15 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 110 | 120 | 120 | 280 | 200 |
| புடோல் | 70 | 60 | 70 | 80 | 60 | 80 | 80 |
| கோவா | 100 | 90 | 80 | 120 | 70 | 100 | 80 |
| வெண்டி | 80 | 100 | 60 | 80 | 80 | 80 | 120 |
| போஞ்சி | 200 | 150 | 100 | 120 | 160 | 160 | 120 |
| லீக்ஸ் | 140 | 160 | 140 | 180 | 160 | 200 | 180 |
| தேங்காய் | 60 | 40 | 60 | 50 | 50 | 40 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 90 | 90 | 60 | 80 | 65 |
| தேசிக்காய் | 30 | 50 | 40 | 40 | 40 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 | 10 | 20 |
| கறிமிளகாய் | 200 | 180 | 180 | 140 | 220 | 140 | 220 |
| இராசவள்ளி | 100 | 180 | 100 | 120 | 100 | 120 | 120 |
| பனங்கிழங்கு | 04 | 04 | 05 | 05 | 05 | 05 | 03 |

# கருந்துளசியின் நன்மை

சளித்தொல்லையால் பாதிக்கப்படாதவர்களே இல்லை எனலாம். இதற்காக நாங்கள் எடுத்துக் கொள்ளும் மருந்துகளால் தற்காலிக நிவாரணம் தான் கிடைக்கிறதே ஒழிய, முழுமையான நிவாரணம் கிடைப்பதில்லை. பெரும்பாலும் எமக்கு எதிர்ப்புச் சக்தி நன்றாக இருக்கும் போது, எவ்வித சிகிச்சையும் எடுத்துக் கொள்ளாம லேயே நோய் குறைந்துவிடுவதுண்டு. ஆனால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும்போது சளித்தொல்லை எமது மூச்சுப்பாதையை பாடாய்படுத்தி விட்டுத் தான் நம்மைவிட்டு அகலுகிறது. நுரையீரலில் வறட்சி ஏற்படாமல் இருப்பதற்காக இயற்கையாக படைக்கப்பட்ட சளி, தனது அளவுக்கு மீறி பல்கிப், பெருகி வேதனையை உண்டாக்கும் போது, பெருகிய சளியை வெளியேற்றி மீண்டும் ஒவ்வாமை யினால் சளி உண்டாகாமல் தடுக்க நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகப்படுத்தும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும். மஞ்சள், மிளகு, சிற் றரத்தை, பூண்டு, மல்லி, சிறிய வெங்காயம் ஆகியவை நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகப் படுத்தும் இயற்கை உணவுகள். இவற்றை அன் றாட உணவில் அதிகம் சேர்க்க வேண்டும். அடிக்கடி ஏற்படும் சளித் தொல்லையை நீக்கி நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்தி பால், தயிர் போன்ற உணவுகளையும் நன்கு எடுக்கு மளவுக்கு, நுரையீரலுக்கு வலுவை தரும் அற்புத மூலிகை கருந்துளசி. கருந்துளசிச் செடிகளின் இலைகள் கபத்தை நீக்கி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். சளியை கட்டுப்படுத்த இரண்டு அல்லது மூன்று கருந்துளசி இலைகளை பசும்பாலில் போட்டு காய்ச்சிக் குடிக்க, பாலின் ஒவ்வாமையால் ஏற்பட்ட கபம் நீங்கும். இதை நீரில் போட்டு கொதிக்கவைத்து ஆவி பிடிக்க 'சைனஸ்' தொல்லையால் ஏற்பட்ட சளி நீங்கும். அடிக்கடி சளி பிடிக்காமல் இருக்க ஐந்து அல்லது பத்து கருந்துளசி இலைகளை, ஒரு லீற்றர் நீரில் ஊறவைத்து அந்த நீரை அருந்தி, பின் இலை களை மென்று சாப்பிட வேண்டும். தினமும் அதிகாலையில் இரண்டு முதல் நான்கு கருந் துளசி இலைகளை வெறும் வயிற்றில் சாப் பிட்டுவர ஒவ்வாமை மற்றும் கிருமித் தொற் றினால் ஏற்படும் சளித் தொல்லையிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

# நட்சத்திரமும் ரேகையும்



'பரணி' நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பல லட்சம் பேர் இருந்தும் தரணி ஆள முடியவில்லை. அதற்கான காரணம் என்ன? அவர்களுடைய கால் பெருவிரல் ரேகையில் கஜமுகமும், வாகைக் கோடுகளும், அமையாமல் இருப்பது தான் முதற்காரணம். ஆக 'பரணி', 'மகம்' நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய கால் பெருவிரல் ரேகை அமைப்பில் 'கஜமுகமும்' வாகைக் கோடுகளும் அமைந்திருந்தால் ஒரு நாட்டையே (தரணியை) ஆளும் தகுதி அவர்களுக்குத் தானாகவே வந்து சேரும்.

சூரியக்கோடு மட்டும் தனிப்பட்ட முறையில் அமைந்திருப்பது கடினம். அவ்வாறு அமையப் பெற்றவர்கள் எப்போதும் சிரமமில்லாத வாழ்க்கை வாழ்வர்.

கத்தரிக்கோடுகள் அமையப் பெற்றவர்கள் முட்டாள்தனமாகவும், மிருகத்தனமாகவும் நடந்து கொள்வதோடு, கொலை செய்வதற்கும், கொள்ளை அடிப்பதற்கும் அஞ்சாதவர்களாக இருப்பார்.

அவர்கள் தண்டனையை நிச்சயம் பெறுவர். அவர்களுடைய கால் பெருவிரல் ரேகையில் சக்கரக் கோடுகள் அமையப் பெற்றிருப்பது கடினம். அவ்வாறு சக்கரக் கோடுகள் அமைந்திருந்தால் எந்த விதக் குற்றங்களிலிருந்தும் சுலபமாகத் தப்பி விடுவார்.

## தொழிலில் வெற்றி பெற

முக்கியமாகச் செய்து கொண்டிருக்கும் தொழிலில் அல்லது ஆரம்பிக்கின்ற தொழிலில் முன்னேற்றம் அடைந்து தொழிலதிபர்களாக முடியுமா? முடியாதா? அரசியலில் தொண்டாற்றுகிறவர்கள் அவரவர் சார்ந்த கட்சிகளில் நிலைத்து நின்று நல்ல பதவிகளைப் பெற முடியுமா? முடியாதா? அவ்வாறு முடியாமல் போனால் என்ன செய்வது எனச் சிந்திக்கும் முன்னரே அவரவர் கால் பெருவிரல் ரேகையின் நியமப்படி அவர்கள் என்ன மாற்றத்தைச் செய்தால், தொழிலில், அரசியலில் நல்ல முன்னேற்றங்களையும், வாய்ப்புக்களையும் பெறலாம் என்பதை அறிந்து கொண்டு, அதன்படி தவறாது கடைப்பிடித்து நடந்தால் நிச்சயம் நல்ல பயன்கள் கிடைக்கும்.

மனிதர்களின் கை அமைப்பு வகைகள் ஆறு என்றும், ஏழு என்றும் ஆராய்ந்த முனிவர்களும் நிபுணர்களும் பல ஆண்டு ஆராய்ச்சிக்குப் பின்னர் முடிவுகளை மக்களிடத்தில் கொண்டு வந்துள்ளனர். அதில் விரல்களின் அமைப்பு, நகங்களின் அமைப்பு, கணுக்களின் அமைப்பு, கிரக மேடுகள் அதிலுள்ள குறிகள் கங்கண, பிராயண, திருமணம், குழந்தை பேற்றுக்கான அபூர்வமான ரேகைகளும் மற்றும் இணை ரேகைகள், அலைகளுள்ள ரேகைகள், கிளை ரேகைகள் என அனைத்து ரேகைகளின் பலன்களையும் கை ரேகையில் காண்பதை விட துல்லியமாக கால் பெருவிரல் ரேகையில் கணிக்கலாம்.

குரு மேடு, சனிமேடு, சூரியமேடு, புதன்மேடு, செவ்வாய்மேடு, சுக்கிரமேடு, சந்திரமேடு, ஆகிய மேடுகள் உயர்ந்திருந்தால் ஏற்படும் பலன்கள், மத்தியமாக இருந்தால் ஏற்படும் பலன்கள், தாழ்ந்து இருந்தால், ஏற்படும் பலன்கள் ஆகியவற்றையும் கூட கால் பெருவிரல் ரேகைகளில் தெளிவாகக் காணலாம்.

## கோடுகளின் பலன்கள்

கத்தரிக் கோடுகள், கூர்மக் கோடுகள், அந்திமக் கோடுகள், சந்திரக்கோடுகள், குழி முகம், கருடமுகம், கோமுகம் என இன்னும் பல்வேறு கோடுகள் பல்வேறு மனிதர்களின் கால் பெருவிரல் ரேகைளில் மாறி மாறி அமைந்துள்ளன. அவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கோடுகள் கூட ஒரே மனிதரின் கால் பெருவிரல் ரேகையில் அமைந்திருக்கும். அவை அவர்களது வாழ்க்கையை உன்னத நிலைக்குக் கொண்டு செல்லும்.

உதாரணமாக, ஒருவருடைய கால் பெருவிரல் ரேகையில் வருணக் கோடுகள் அமைந்திருக்குமானால், அவர் அதிகமாக யாருடனும் தொடர்பு கொள்ளாமல் தானுண்டு தனது வேலையுண்டு என்றிருப்பார். சதாகாலமும் தன் குடும்பம் பற்றியே சிந்திப்பவராக இருப்பார். அந்தக் கோடுகளுடன் சூரியக் கோடுகளும் அவருக்கு அமைந்திருந்தால் அவர் எப்போதும் பணத்தில் புரளும் நிலை நாளடைவில் உருவாகும்.

இதுவும் ஆராய்ச்சியின் மூலம் கண்ட உண்மை. வாகைக் கோடுகள் அமையப் பெற்றவர், எல்லோருக்கும் வளைந்து கொடுப்பவர், மரியாதை மிக்கவர். ஒரு குறிக்கோளை மனதில் ரகசியமாக வைத்துக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பவர். அவர் எடுக்கும் முயற்சிகளில் சிறு மாற்றம் செய்தால் வளமான வாழ்க்கையைப் பெறுவது நிச்சயம். அவர் செய்ய வேண்டிய மாற்றங்களை அவருடைய கால் பெருவிரல் ரேகைகளின் மூலம் கண்டறிய முடியும்.

# ஓய்வு அவசியம் தேவை



அனைத்து வேலைகளையும் கடுமையாகச் செய்யும் பெண்கள், பகலில் சிறிது நேரம் உறங்குவது நன்மையே தரும். பகல் தூக்கம் என்பது பொதுவாக வீட்டில் இருக்கும் பெண்கள் பலருக்கும் இருக்கும் பழக்கமாகும். ஆனால், பகல் தூக்கம் தவறான பழக்கம் என்பது அந்த வாய்ப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் பலரும் கூறும் தகவலாகும். பகல் தூக்கம் யாருக்கு நல்லது, யாருக்குக் கெடுதலைத் தரும் என்ற விவரங்களை ஆயுள்வேதம் விரிவாக எடுத்துக் கூறுகிறது. உத்தராயணம் எனும் சூரியனின் வடக்கு நோக்கிய பாதையின் பயணத்தால் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். மனிதர்களுக்கு குளிர்ச்சியான பொருள்களின் மீது ஏற்படும் மோகத்தாலும், காற்றில் ஈரப்பதம் குறைந்துள்ள வறட்சியான நிலையாலும், பகல் நீண்டு இரவின் நேரம் குறைவதாலும், உடலில் வாயுவின் சில குணங்களாகிய வறட்சி, லேசான தன்மை, குளிர்ச்சி போன்றவை அதிகரிப்பதால் தன் இருப்பிடங்களாகிய [illegible] இடுப்பு, தொடை, செவி, எலும்பு, தோல் ஆகிய பகுதிகளில் சீற்றம் கொள்கிறது. [illegible]




# பெண்கள் மன அழுத்தத்தை குறைக்க

- காலையில் குறித்த நேரத்துக்கு பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே எழுந்து விடுங்கள்.
- எங்கேயாவது செல்ல வேண்டியிருந்தால் அதற்குரிய ஆடைகள், பொருள்களை முன் கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.
- ஒரு காகிதத்தில் அன்றைய தினம் செய்ய வேண்டிய பணிகளையும், எந்த நேரத்தில் செய்யப் போகிறோம் என்பதையும் குறித்து வையுங்கள்.
- காத்திருபது சிரமம் என்று கருதாதீர்கள். ஒரு புத்தகத்தை கையில் வைத்திருப்பது காத்திருத்தலை சுகமாக்கும். தேவையற்ற மன அழுத்தத்தைக் குறைக்கும்.
- வேலைகளைத் தள்ளி வைப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கும். செய்ய வேண்டியதை தாமதப்படுத்தாமல் செய்யுங்கள்.
- முன்கூட்டியே திட்டமிடுங்கள். எதையும் கடைசி நேரம் வரை காத்திருந்தபின் செய்வதைத் தவிருங்கள்.
- சற்று முன்கூட்டியே செல்ல பழக்கப்படுங்கள். பத்து நிமிடத்தில் போகக் கூடிய இடத்துக்கு இருபது நிமிடத்துக்கு முன்பாகவே புறப்படுங்கள்.
- சில மாற்று யோசனைகளைக் கைவசம் வைத்திருங்கள். உதாரணமாக பஸ் தாமதமானால் இப்படிச் செய்வேன்? என்பது போன்றவை.
- தவறாய் போன ஒரு விடயத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டே இருப்பதை விட, சரியாய் நிகழ்ந்த பலவற்றைக் குறித்து அடிக்கடி நினைத்து மகிழுங்கள்.
- செல்லும் இடங்கள் புதிய இடங்களாக இருந்தால் வழியை முதலிலேயே தெளிவாகக் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.
- சற்று நேரம் கைப்பேசிகளையும், தொலைபேசிகளையும் துண்டித்து விடுங்கள். ஓய்வு எடுங்கள் எந்த தொந்தரவும் இன்றி.
- உணவு, உடை, உறைவிடம் தவிர்ந்த எதுவும் உங்களை மன இறுக்கம் கொள்ளச் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன்னுரிமை எதற்குக் கொடுக்க வேண்டும் என்பதில் தெளிவு அவசியம்.





# விந்தைப் பூச்சிகள்

பூரானுக்கு நூறு கால்கள் உண்டு என்று சொன்னாலும்கூட, உண்மையில் அதற்கு நூறு கால்கள் கிடையாது. ஒற்றைப் படை ஜோடியில் அமைந்த கால்களே அவற்றுக்கு இருக்கும். குறைந்தபட்சம் 7 ஜோடிக் கால்கள் இருக்கும்.

மின்மினிப் பூச்சிகளில் சிறிய மின்மினிப் பூச்சிகளால் ஒளியை உருவாக்க முடியாது. பெண் மின்மினி, ஆண் மின்மினியைக் கவர்வதற்காக ஒளியை உமிழுகிறது. வண்ண வெட்டுக்கிளி ஜெயின்ட் மில்க்வீட் எனப்படும் எருக்கம் வகைச் செடியில் இருந்து நஞ்சை சேகரித்துக்கொண்டு, இரைகொல்லிகளுக்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றது.

வாழைப்பழத்தைப் போலிருக்கும் ஓடற்ற மஞ்சள் நத்தைக்கு ஒற்றை நுரையீரலே உண்டு.

தலைவெட்டி நத்தை எனப்படும் இரைகொல்லி நத்தை வகை, தோட்டத்தில் மேயும் பிற நத்தைகள், ஓடற்ற நத்தைகள், ஆகியவற்றின் முட்டைகளைச் சாப்பிட்டுவிடும்.

ஜப்பானிய ஹார்னெட் ஸ்டிங் எனப்படும் தேனீ, மனிதச் சதை, திசு, எலும்புகளைக் கரைத்துச் சாப்பிட்டுவிடக் கூடியது.

சிவப்பு வெல்வெட் மைட் எனப்படும் உண்ணி முதலில் ஒட்டுண்ணியாகஏனைய பூச்சிகளைச்சார்ந்து வாழ ஆரம்பிக்கும், பிறகு அது இரைகொல்லியாக மாறிவிடும்.


உதயன்

துணிச்சலும், பெருமையும் கொண்ட ஆசிரியர்பீட அணியுடன்

# இணையுங்கள்

புதிய பொலிவு பெற்றுள்ள உதயன் பத்திரிகையில் உதவி ஆசிரியர்களாக, செய்தியாளர்களாகப் பணியாற்றுவதற்கு ஆர்வமும் தேடலும் உள்ளவர்களையும் தேடி வருகின்றோம். புதினங்களைத் தேடும் ஆர்வம், தமிழ் மொழியில் சிறந்த ஆளுமை, ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் தேர்ச்சி அனைத்தும் இருந்தால், பெருமையும் துணிச்சலும் கொண்ட ஆசிரியர்பீட அணியில் ஒருவராக உடனடியாக இணைந்து கொள்ளலாம். இவை அனைத்தும் இல்லாவிட்டால் பரவாயில்லை, தமிழ் மொழி ஆளுமையும் தேடல் ஆர்வமும் மட்டும் இருந்தாலே போதும் எங்கள் பயிற்சி அணியில் இணைந்து கொள்ளவும் அரிய வாய்ப்பு உண்டு. 5 வருடாங் களின் பின்னர் மீண்டும் ஒரு சந்தர்ப்பம்.

## 1 உதவி ஆசிரியர்கள்

- தமிழ் மொழியில் முழுமையான ஆளுமையைக் கொண்டிருப்பதுடன் ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும்.
- பத்திரிகைத்துறை அல்லது எழுத்துத் துறையில் கட்டாயம் அதீத ஆர்வத்தைக் கொண்டிருக்கவேண்டும்.
- செய்திகளை, கட்டுரைகளை, ஆக்கங்களை செம்மைப்படுத்தி, செழுமைப்படுத்தும் திறமை மற்றும் பொறுமையைக் கொண்டிருக்கவேண்டும்.
- தமிழ் மொழியில் பட்டம் அல்லது ஊடகக் கற்கைத்துறை ஒன்றில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றிருப்பது மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

## 2 செய்தியாளர்கள்/ பத்தியாளர்கள்

- செய்திகளை நுகர்ந்து அறிந்துகொள்ளும் ஆர்வமும் ஆற்றலும் எத்தரப்பினருடனும் நெருங்கிப் பேசி வசியப்படுத்தும் இயல்பும் எழுதுவதற்கான துடிப்பும் இருக்கவேண்டும்.
- மொழியை வசப்படுத்தி வசியப்படுத்தும் திறனைப் பெறுவதற்கான முயற்சி உடையவராக இருத்தல் வேண்டும்
- ஊடகத்துறையில் பட்டயக் கற்கை அல்லது சான்றிதழ் கற்கையை முடித்திருப்பது மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.
- சுய உந்தல், தம்மைச் சுற்றி நடப்பவை பற்றிய விழிப்புணர்வு, பரபரப்பான நடப்பு விவகாரங்கள் பற்றிய நுகர்வு என்பன முக்கியம்.
- பல்துறை அறிவும் வெவ்வேறு தலைப்புகளில் எழுதும் திறனும் அவசியம்.

**வேண்டுகைகளையும் சுயவிவரத்தையும் அனுப்ப,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
editor@uthayan.com

கிளிநொச்சி, வவுனியா, மன்னார்,
முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கு சிறப்பு வாய்ப்பு


# வர்ணம் தீட்டலாம் வாங்க...



# எம்மாலும் முடியும்

'நண்பரே! நேற்று உங்களிடம் ஒரு அவசர வேலையைச் சொல்லியிருந்தேனே. முடித்து விட்டீர்களா? 'அதுக்கென்னங்க இப்ப அவசரம்? ஆகட்டுங்க. அப்புறம் மெதுவாப் பார்க்கலாம்' என்றார் சர்வ சாதாரணமாக. அந்த நண்பருக்கு இளமையிலிருந்தே அந்தக் குணம் உண்டு.

எந்தவொரு அவசரமான, தள்ளிப் போட முடியாத காரியத்தைச் சொன்னாலும், பின்னால் பார்த்துக் கொண்டால் போகிறது. இப்போதைக்கு தள்ளிப் போடுவோமே! என்று சொல்லும் மனோபாவம். இத்தகைய தள்ளிப் போடும் மனப்பான்மை இன்று பெரும்பான்மையானவர்களிடம் மண்டிக் கிடக்கும் உடன் பிறந்த நோய் என்றே கூறலாம். இத்தகைய நோயை நாம் வளரவிடாமல் அது தோன்றியதற்கான காரணத்தையும், அதற்கு அடிப்படை என்னவென்பதையும் தீர ஆராய வேண்டும். எதையும் காலம் தாழ்த்தாமல் அன்றே செய்து முடிப்பவர்கள்தான் செயல் வீரர்கள்.

இன்று வேண்டாம், நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடுபவர்கள் நாளைய வாதிகள். இவர்களெல்லாம் நாளை நாளை என்று கூறிக் கொண்டேயிருப்பார்களே தவிர, எதையும் குறித்த நேரத்தில் செய்து முடிக்க மாட்டார்கள். இதுவே, பலருடைய வாழ்க்கையில் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாகியிருக்கின்றது. ஒரு விதையை உடனே ஊன்றி நீர் விட்டால்தானே அது வளர்ந்து பயன் தரும். நாளை, நாளை என்று தள்ளிப் போட்டுக் கொண்டேயிருந்தால் அந்த விதை மக்கியல்லவா போய்விடும். அன்றே பாடங்களைப் படித்து விட்டால் தேர்வைப் பற்றி என்றும் அஞ்ச வேண்டியதில்லையல்லவா? எமது குழந்தைப் பருவத்தில் நாம் கற்ற பழக்க வழக்கங்கள், அனுபவங்கள் ஆகியவைகள் தான் எமது பிற்கால வாழ்வில் எம்மை ஆட்சி செய்கின்றன. அத்தகைய பழக்கங்களை நாங்கள் மாற்றுவதற்கு பின்னாளில் மிகவும் தொல்லைப்படுகிறோம். சிலர், நாங்கள் ஒரு காரியத்தைச் செய்தால்தானே எம்மைக் குறை சொல்லி நகைக்கிறார்கள், எந்தக் காரியத்தையுமே செய்யாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே போனால் தப்பித்துக் கொள்ளலாமே! என்கிற அச்ச உணர்வினால் காரியங்களைத் தள்ளிப் போடுகின்றனர்.

(தொடரும்)



# மோசமான ஆட்சிக்குரிய அறிகுறி மறையவில்லை

## மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப்.19
சமகால அரசிலும் மோசமான ஆட்சிக்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன என்று மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"புதிய அரசின் இடைக்கால வரவு – செலவு திட்டத்தின் மூலம் அதிகரிப்பதாக பரிந்துரைத்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு, எதிர்வரும் மார்ச் மாத சம்பளத்துடன் வழங்கப்பட வேண்டும்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"தனியார் துறைக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சட்ட மூலத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும், தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் 800 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்"– என அவர் வலியுறுத்தியதுடன், தொழில் அமைச்சுக்கு மேலும் ஓர் அமைச்சரை நியமிக்க வேண்டும்"– எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

# நாட்டை ஐக்கியமாக்கியதே தோல்விக்கான காரணம்

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19
நாட்டை ஐக்கியப்படுத்தி இருக்காவிட்டால் நான் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருந்திருப்பேன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"நாட்டைஐக்கியப்படுத்தியகாரணத்தால்வடக்கு மக்களுக்கு எனக்கு எதிராக வாக்களிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. தோல்வியை ஒப்புக்கொண்டு 24 மணித்தியாலத்திற்குள் நாம் சொந்த ஊருக்கு வந்துவிட்டோம். எனினும் எமக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. அரசியல் ரீதியான சேறு பூசல்கள், அவதூறுகள் அதிகரித்துள்ளன." – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இந்த சேறு பூசல்கள் நிறுத்தப்பட வேண்டு மென்றே கருதுகின்றேன். சிறிமா பண்டாரநாயக்கவின் குடியுரிமை ரத்து செய்யப்பட்டது. போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி எம்மை மக்களிடமிருந்து விலக்கப் பார்க்கின்றார்கள். நாட்டின் 58 லட்சம் மக்கள் எமக்கு வாக்களித்துள்ளனர். மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் உரிமை எமது கட்சிக்கு உண்டு. கடந்த தேர்தலின் பின்னர் அரசியல் ரீதியாக சில அதிகாரிகள் பழி வாங்கப்படுகின்றனர்.

இது ஒரு வருந்தத்தக்க விடயமாகும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ." தெரிவித்துள்ளார். (ற)


# பாலிதவுக்குப் பிணை

கொழும்பு, பெப், 19
ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெரும பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அஹலவத்த நகரில் பாலிந்த நுவர பிரதேச சபை உறுப்பினர் புஸ்பகுமார மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் பாலித கடந்த மாதம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நேற்றுக் காலை மதுகம நீதிவான் முன்னிலையில் பாலித முன்னிலைப்படுத்தப்பட்டார். அதன்போது அவருக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டது. (ற)

## மரண அறிவித்தல்



### கந்தன் குணம் (குலசேகரம் மாஸ்டர்)

(ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர்-ஆங்கில ஆசிரியர்)

28, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப் பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் குணம் (குலசேகரம் மாஸ்டர்) நேற்று (18.02.2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி-நாகம்மா தம்பதியரின் மரு மகனும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், பாமினி, சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாதன் (வைத்தியக் கலாநிதியும், சமாதான நீதிவானும்-மன்னார், மூர் வீதி) ஜெயராஜசிங்கம் (பிரதம இறைவரிப் பரிசோதகர் -யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, நாகபரமசாமி (ஓய்வுபெற்ற அதிபர்), செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கதிரேசுவின் சகலனும், பிரணவன், மதுரன், கிஷாலினி, சாருகா, கார்த்திகா, துஷிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

28, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு.
0232250585, 0779237720

தகவல்: Dr.S.லோகநாதன்
குடும்பத்தினர். (மருமகன்)
கா. ஜெயராஜசிங்கம் குடும்பத்தினர்.
(மருமகன்)

(56974) (10)

## மரண அறிவித்தல்



### திருமதி ஜெகதீஸ்வரி கணேசலிங்கம்

தோற்றம் 31.10.1948 — மறைவு 17.02.2015

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இல. 51, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி கணேசலிங்கம் 17.02.2015 வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி கணேசலிங்கத்தின் அன்பு மனைவியும்,காலஞ்சென்ற வைரமுத்து - மகேஸ்வரி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், க.ஜெயகாந்தன் (லக்கி வீடியோ முதலாம் குறுக்குத்தெரு வவுனியா), திருமதி மு.இராஜேஸ்வரி (ராஜி - சமுர்த்தி முகாமையாளர் கச்சேரி, வவுனியா), Dr. திருமதி சோ.விக்னேஸ்வரி (கனடா), Dr. திருமதி டே.வாணிஸ்ரீ (மாவட்ட பொது வைத்தியசாலை வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி ஜே. சுதர்சினி (ஆசிரியை, வ/சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி), கு.முரளிதரன் (காணி பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர் கச்சேரி, வவுனியா), Dr.G. சோமசேகரம் (கனடா), S.டேமியன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை (RDHS OFFICE) வவுனியா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 20/02/2015 வெள்ளிக்கிழமை காலை 09 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(56209)(45.3.7) தொ.பே. 024 222 0068

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை மாசிலாமணி

(இளைப்பாறிய இலங்கை போக்குவரத்துச் சபை, சாலை முகாமையாளர்)



நவாலியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தில் வசித்து வந்தவருமான ஐயம்பிள்ளை மாசிலாமணி (இளைப்பாறிய இலங்கை போக்குவரத்துச் சபை சாலை முகாமையாளர்) நேற்று (18.02.2015) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற வைரவிப்பிள்ளை-பார்வதி தம்பதியரினதும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-கனகம்மா தம்பதியரினதும் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சந்திரமலர் ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற மனோகரன் (இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்) மற்றும் மங்களேஸ்வரி, மாணிக்கவாசகர் (இளைப்பாறிய பொறியியற் பகுதி மேற்பார்வையாளர், வட இலங்கைப் போக்குவரத்துச் சபை), மகிழ்ராஜா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், பிறேமதாஸ் (உத்தியோகத்தர் பொறியியற் பகுதி, இலங்கை போக்குவரத்துச் சபை), பிறேமஜெயந்தி, பிறேமவசந்தி, பிறேமஸேழினி (ஆசிரியை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), பிறேமறஞ்சினி, பிறேமநளினி (ஆசிரியை, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலேஸ்வரி, நாகரட்ணம் (ஓய்வுநிலை அதிபர் குளமங்கால் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்), யோகேந்திரா (கொள்வனவு அதிகாரி, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்), லிங்கசபேசன் (யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப் பலகு), ஞானேந்திரம் (இலங்கைப் போக்குவரத்துச் சபை அலுவலர்), செல்வவிக்னேஸ்வரராஜா (வியாபாரி) ஆகியோரின் அன்பு மாமனும், மயூரிக்கா (மாணவி, வவுனியா சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), டிசானா (ஆசிரியை, ஆன்வேட் தமிழ் கலவன் பாடசாலை), டிலக்சன் (மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவன்), டினேஸ், கோபிநாத் (ஆசிரியர், மத்திய கல்லூரி இரத்தினபுரி), காயத்திரி(செய்தி தயாரிப்பாளர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்), கார்த்திகா (விஞ்ஞானபீட மாணவி, ஊவா வெல்லச), விதுசா (மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சவிதன் (மாணவன், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), சர்கேஸன் (மாணவன், உடுவில் மகளிர் கல்லூரி), கோபிகிஷான் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), யதுகிஷான் (மாணவன், உடுவில் மகளிர் கல்லூரி), மோகிஷா, தேனுஷா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2015) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(56976) (10)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வீரபாகு கனகசுந்தரசுவாமி

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும், தமிழ்தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினரும்)

புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும், தமிழ்தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினருமாகிய வீரபாகு கனகசுந்தரசுவாமி 17.02.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வீரவாகு காலஞ்சென்ற கற்பகம் தம்பதியரின் அன்புப்புதல்வனும், காலஞ்சென்ற நல்லையா-புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி சண்முகப்பிரியாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை புது/ம.கல்லூரி) அன்புக் கணவரும், ஜனார்த்தனி, ஜீவர்சினி (பட்டதாரி), ஜனமேஜெயந் (பட்டதாரி), யதுகுலன் (லண்டன்), அமுர்தவர்சினி (பல்கலைக்கழக புகுமுக மாணவி விவசாய விஞ்ஞானபீடம்), அம்சத்வனி (பல்கலைக்கழக புகுமுக மாணவி பொறியியல் பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேஸ்வரனின் அன்புச் சகோதரனும், சண்முகப்பிரபு, சோதிசொருபினி, கம்சானந்தி, பாலமுரளி கிஸ்னா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக புதுக் குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# குமார் குணரட்னத்தை நாடு கடத்த அனுமதி

## உயர்நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு, பெப்.19
முன்னணி சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்னத்தை நாடு கடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.
நாடு கடத்துவதோ அல்லது கைது செய்வதோ அடிப்படை உரிமை மீறல் எனத் தெரிவித்து குமார் குணரட்னம் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். இந்த மனு தொடர்பில் நேற்று உயர் நீதிமன் றில் விசாரணை நடத்தப்பட்டது.
பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன், ஈவ வனசுந்தர மற்றும் பிரசாத் டெப் ஆகியோர் இந்த மனுவை பரிசீலனை செய்தனர்.
30 நாள் நுழைவிசைவு அடிப்படையில் குமார் குணரட்னம் இலங்கைக்கு வந்து தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தார். ஆஸ்திரேலிய பிரஜையான குமார் குணரட்னம் இலங்கையில் நுழைவிசைவு காலாவதியானதன் பின்னர் தங்கியிருக்க முடியாது என நீதிமன்றம் அறிவித்துள்ளது.
ஆஸ்திரேலிய குடியுரிமையை கைவிட்டு இலங்கையில் மீளவும் குடியுரிமை பெற்றுக்கொள்ள விரும்புவதாக குமார் குணரட்னம் சட்டத்தரணிகளின் ஊடாக தெரிவித்திருந்தார். எனினும், இந்த தர்க்கங்களை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. (ற)

# உயர்கல்வி அமைச்சராக நியமிக்கப்படலாம் ராஜீவ

கொழும்பு, பெப்.19
உயர்கல்வி அமைச்சராக ராஜீவ விஜேசிங்க நியமிக்கப்படலாம் என தற்போதைய உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.
உயர்கல்வி ராஜாங்க அமைச்சராக ராஜீவ விஜேசிங்க கடமையாற்றி வரும் நிலையில் அமைச்சரவை அந்தஸ்துடைய உயர்கல்வி அமைச்சுப் பொறுப்பு ராஜீவவுக்கு வழங்கப்பட உள்ளது என்று கூறப்படுகின்றது.
"அமைச்சர்களை நியமிப்பது நீக்குவது தொடர்பிலான அதிகார்ரம் ஜனாதிபதிக்கே உண்டு. ஜனாதிபதி அவ்வாறான தீர்மானம் எடுத்தால் அதனை மதித்து அதிகாரத்தை ஒப்படைக்கத் தயார்" என கபீர் ஹாசிம் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (ற)

## பதவி இல்லாவிட்டாலும் மைத்திரியுடன் இருப்பேன்

### ராஜீவ விஜேசிங்க

கொழும்பு, பெப்.19
அமைச்சுப் பதவி இல்லாவிட்டாலும் ஜனாதிபதியுடன் இணைந்திருப்பேன் என உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.
"நாட்டுக்குதத் தேவையானவற்றைச் செய்யக்கூடிய ஒரே நபரே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமைச்சரவை அமைச்சு கிடைக்காவிட்டாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக செயற்படுவேன். தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் ஒரு சில கட்சிகள் கொண்டுள்ள அரசியல் நிலைப்பாடுகள் குறித்து எந்த வகையிலும் திருப்தி அடைய முடியாது.– என்று அவர் தெரிவித்துள்ளார்.
நல்லாட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அரசு தெரிவிப்பதில் பயனில்லை. அதனை செயலில் காண்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
கண்டியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ற)

உதயன்
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



### செல்லையா ஜெகநாதன் (காந்தி)

(பனை அபிவிருத்தித் திணைக்களம் யாழ்ப்பாணம் - கைதடி)

கெற்பேலி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் சப்பச்சிமாவடியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா ஜெகநாதன் நேற்று முன்தினம் (17.02.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் செல்லையா- காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் மகேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும் புஸ்பலதா (ஆசிரியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)வின் அன்புக் கணவரும் விஸ்ணவி, விஹாசினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாதன் (நாதன் ஸ்ரோர்ஸ் சாவகச்சேரி) யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுசீலாதேவி, சாரதா, புஸ்பதேவி, புஸ்பராணி, பாஸ்கரன், அமுதா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சப்பச்சிமாவடி,
சாவகச்சேரி.
(51903)(5.3.7)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### கந்தையா பாலசுந்தரம்


யாழ்ப்பாணம் நீர்வேலியை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுந்தரம் கடந்த 17.02.2015 செவ்வாய் கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கமுத்து தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான லோகநாதன் தில்லைநாதன் சண்முகநாதன் மற்றும் திருமதி வே.புஷ்பமலர் ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் அநுராதா(சுவிஸ்) திருச்செந்தூரன்(கனடா) ஜீவராசா(உதவிப்பொறியியலாளர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபானந்தன் (சுவிஸ்) விஜிதாம்பிகை(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் அபர்நாத் அபிநயா (சுவிஸ்) ஸர்யுன் யாதுரி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மாயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிருஸ்ணன் கோயில் வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
(56977) (10)
தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு:
பா. ஜீவராசா (0771520086)



### வைத்திலிங்கம் கணேசரத்தினம்

(முன்னாள் மனேஜர் - V.M.S)

வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கணேசரத்தினம் (முன்னாள் மனேஜர்- V.M.S ) நேற்று (18.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சறோஜினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் சிவசோதி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசரத்தினம், சற்குணரத்தினம், நவரத்தினம் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் சுசிலாதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மாவதி, நகுலேஸ்வரி (ஆசிரியையா/வட்டு மத்திய கல்லூரி), கோணேஸ்வரன் (லண்டன்), விக்கினேஸ்வரி, வேலாயுதபிள்ளை காலஞ்சென்ற சன்முகராசா மற்றும் மல்லிகா, குலசேகரம், பேரின்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2015) வியாழக்கிழமை பிப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(56978) (10)
தகவல்: குடும்பத்தினர்.

## கேள்வி அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வடமாகாணம் வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளுக்கான வழங்கல் சேவைகள் 2015/16

1. வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுவினால் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட நிறுவனங்கள்ஃ வைத்திய சாலைகளுக்கு 2015/16ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல் ஃ சேவைகளுக்கு பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| வழங்கல் வகை | ஆவண இலக்கம் | வைத்தியசாலை /நிறுவனங்கள் | மீளளிக்கப்படாத வைப்பு தொகை | கேள்விப் பிணை ரூபா. |
|---|---|---|---|---|
| சமைத்த உணவு | RDHS/VA/M/02 | பிரதேச வைத்தியசாலைகள் நெடுங்கேணி, புளியங்குளம், மாமடுவ, சிதம்பரபுரம், பூவரசங்குளம், உளுக்குளம், நேரியகுளம், பாவற்குளம். | 500.00 | 20.000.00 |
| அழுக்குத் துணி சலவை சேவை | RDHS/VA/M/03 | ஆதார வைத்தியசாலை செட்டிக்குளம். | 500.00 | 10.000.00 |
| | | **பிரதேச வைத்தியசாலைகள்** நெடுங்கேணி, புளியங்குளம், மாமடுவ, சிதம்பரபுரம், பூவரசங்குளம், உளுக்குளம், நேரியகுளம், பாவற்குளம், வைகவுற | 200.00 | 3.000.00 |
| வாகன சுத்திகரிப்பு சேவை | RDHS/VA/M/04 | வவுனியா பிராந்தியம் | 1000.00 | 10.000.00 |
| வாயு சீராக்கி (AC) பராமரிப்பு சேவை | RDHS/VA/M/05 | வவுனியா பிராந்தியம் | 500.00 | 5.000.00 |

02 விலைக் கேள்விதாரர் ஒரு தனிநபராகவோ வியாபார பதிவினுடைய நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும். விலைக் கேள்விதாரர் தனி நபராயின் வவுனியா மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பதுடன் கிராம சேவையாளரினால் வதிவிடத்தினை உறுதிப்படுத்திய சான்றிதழ் கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட நிறுவனமாயின் வவுனியாவில் ஒரு முகவரையோ அல்லது ஒரு கிளையையோ கொண்டிருத்தல் வேண்டும்.

03 நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மீளளிக்கப்படாத வைப்புப்பணத்தை செலுத்தி கேள்வி ஆவணங்களை **வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வவுனியாவின்** அலுவலக நேரங்களில் 10.03.2015 திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

04 பொருத்தமான கேள்வியினை ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் தனித்தனியாக பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக கேள்வி பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05 கேள்வி ஆவணங்கள் 15.03.2015 மு.ப 10.30 இற்கு முன்னதாக வ்வுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கணக்காளர் அறையில் காணப்படுகின்ற பெறுகைப்பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06 கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் வழங்கல் வகை அடையாள இலக்கம் மற்றும் வைத்தியசாலை / நிறுவனத்தின் பெயர் என்பன தெளிவாக எழுதப்பட வேண்டும்.

07 முத்திரை இடப்படாத தாமதமான உரிய மீள்அளிக்கப்படும் வைப்புத்தொகை செலுத்தாத கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

08 கேள்வி நேரம் முடிவடைந்த உடனடியாக கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் இதில் விலை மனுதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ளலாம்.

09 கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை முழுமையாகவோ பகுதியாகவோ நிராகரிப்பதற்கோ மீள் கேள்வி கோரலை கோரவோ கோரப்பட்ட பொருள்கள் சேவைகள் வேறு மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கோ ஒப்பந்தகாரர்களை மாற்றி அமைப்பதற்கோ பெறுகைக்குழுவின் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

மேலதிக விவரங்களை நேரடியாகவோ அல்லது **0242222140** என்ற தொலை பேசி மூலமாகப் பெற்றுக்கொள்ளளாம்

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிமனை ,**
**யாழ்பாணம்.**
18.02.2015

# இலங்கையில் இடம்பெறும் விசாரணைகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் இறுதியான தருணத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்கு அரசு ஆயத்தமாகி வருவதை வரவேற்பதாக தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா. விசாரணைகள் தொடர்பாக அரசு இரண்டு வகையான அணுகுமுறைகளைக் கையாள்வதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. சாட்சியங்கள் இருக்குமாயின் மனித உரிமைகளை மீறியவர்கள் மீது இலங்கை நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்து விசாரணைகளை மேற்கொள்ளுதல் முதலாவது அணுகுமுறையாகும். இரண்டாவதாக தென் ஆபிரிக்கா வின் உண்மைகளைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் நடவடிக்கைகளை ஒத்ததான நல்லிணக்க நடவடிக் கைகளை மேற்கொள்வதாகும்.

ஆனால் அரசு இதனை மன்னிப்பு வழங்குவதற்கு மட்டுமே பயன்படுத்தாது பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்லிணக்கத்துடன் கூடிய செயன்முறை ஒன்றை நடைமுறைப்படுத்தவே விரும்புவதாகத் தெரிகின்றது என்றும் பேரவை தெரிவித்துள்ளது

உண்மைகளை கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரம் இல்லாது விட்டால் குற்றம் புரிந்தவர்கள் தாம் புரிந்த குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கான சாத்தியங்கள் இல்லாமல் போய்விடுமென தேசிய சமாதானப் பேரவை கருதுகின்றது. ஆகவே மன்னிப்பு வழங்கும் அதிகாரங்கள் வழங்கப் பட்டால் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தாம் புரிந்த குற்றங்களை ஏற் றுக்கொள்வதுடன்திருந்திநடப்பதற்கும்வாய்ப்புஏற்படுமெனபேரவைகருதுகின்றது.

போர் இடம்பெறும்போது உண்மைகளைக் கண்டறிவதும், அங்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வதும் சிரமமான காரியமாகும். மேலும் ஆதாரங்கள் கிடைப்பதிலும் சிரமங்கள் காணப்படுவதால் யார் தவறு செய்தார்கள்? குற்றம் புரிந்தவர்கள் யார்? என்பதைக் கண்டு பிடித்து உண்மைகளை வெளிக்கொணர்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

தென் அமெரிக்காவில் தாம் புரிந்த குற்றங்களை ஒப்புக்கொண்ட வர்களுக்கு உண்மைகளைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினால் மன்னிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. ஆனால் குற்றம் புரிந்தவர்கள் அனைவருக்கும் அங்கு மன்னிப்பு வழங்கப் படவில்லை. மன்னிப்புக் கோரி விண்ணப்பித்த 7000 பேரில் 1000 பேருக்கு மட்டுமே மன்னிப்பு வழங்கப்பட்டது.

இலங்கையில் உண்மைகளை ஒப்புக்கொண்ட முன்னாள் போராளிகள் பலருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. இதேவேளை கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகளோ அல்லது உண்மைகளைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணையோ இடம்பெற்றால் அவை இலங்கையில் வாழுகின்ற அனைத்து இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபை அண்மையில் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில் இறுதிப்போரின் போது இழைக்கப்பட்ட இனப் படுகொலை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட குழு பரந்தளவிலான விசாரணைகளை நடத்தி மனித உரிமைகள் சபையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்கத்தை அடைவதற் கான பாதையில் தொடர்ந்து பயணித்து அனைத்து இலங்கை மக்களும் எதிர்பார்க்கின்ற எதிர்காலம் அமைய வேண்டும் என்பதே தேசிய சமாதானப் பேரவையின் விருப்பமாகும் என்றும் பேரவையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

### கண்ணீர் அஞ்சலி

கரவெட்டி பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் **சுப்பிரமணியம் ரவிகரன்** அவர்களின் பாசமிகு தந்தை

**கார்த்திகேசு சுப்பிரமணியம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயர் பகிரும்
அத்தாய் மகளிர்
கிராம அபிவிருத்தி சங்கம்

அத்தாய், அல்வாய். (54208) (10)

### கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சமுர்த்திக் கிளையில் பொதுமுகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்

**திருமதி நவநீதன் கார்த்திகா**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி ஜெகதீஸ்வரி கனகரத்தினம்**


அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

C 19778(5)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06★06★1971 | மறைவு 01★03★2014



அமரர்

**மார்க்கண்டு மனோகரன் (ரவி)**

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மைச் சென்றதுவோ
ஆண்டொன்று போனாலும்
ஆறாது உம் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு
மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து
கரைக்கின்றோம் எம் வாழ்வை
மண்மீது உமை எண்ணும்
மனதோடு வாழ்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

குடமியன், வரணி. குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி

கரவெட்டிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் **சுப்பிரமணியம் ரவிகரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**கார்த்திகேசு சுப்பிரமணியம்**

அவர்கள் 17.02.2015 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைந்தோம் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள்
நலன்புரிசங்கம் யாழ் மாவட்டம்.

(56979(3,E7))

### கண்ணீர் அஞ்சலி



பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது உழைத்த எமது நிறுவன ஆய்வு கூட உத்தியோகத்தரான

**செல்லையா ஜெகநாதன்**

அவர்கள் 17.02.2015 இறைபதமடைந்த செய்திகேட்டு கவலையடைந்தோம், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
பனை ஆராய்ச்சி நிறுவனம், கைதடி.

(56969) (10.7.3)

### 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு ★ 30 ★ 03 ★ 1936



இறப்பு ★ 04 ★ 02 ★ 2015

**அமரர் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை**
**(சின்னமணி)**
(வில்லிசைப் புலவர், கலாவிநோதன்)

வில்லிசையால் வேள்வி செய்தே
விடைபெற்ற ஈழத்து சின்னமணியே!
சொல்லிசைய வில்லை கலைஞனே
சோகமே ஈழமெங்கும் சூழ்ந்ததையா
பல்லோரும் போற்றிடும் நடிகனே
பாவரசனே வில்லிசைப் பேரரசனே
எல்லோரின் இதயத்துள்ளும் கொலுவிருந்த
ஈழத்து வில் சின்னமணியே
உங்கள் ஆத்மா விநாயகர் பாதார விந்தத்தில்
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த, இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, 20.02.2015 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சரஸ்வதி வித்தியாலய வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் ★ 10 ★ 05 ★ 1951



மறைவு ★ 20 ★ 01 ★ 2015

**அமரர் ஆரோக்கியநாதர் பேரின்பநாதன்**

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப்பாரினில் எம்மைப் பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் அப்பாவே

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

ஆலடி, ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.

# பூனையாக இருந்த வடமாகாண சபை புதிய ஆட்சியில் புலியாக மாறிவிட்டதாம்

## பொது பல சேனா கூறுகின்றது

கொழும்பு, பெப்.19

இனவாத பிரிவினைக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் வடக்கு மாகாண . சபையும் முயற்சிக்கின்றது என்று பொதுபல சேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுபல சேனா அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

"வட மாகாண சபையின் செயற்பாடுகள் அண்மைக் காலங்களில் மிகவும் மோசமானதாகவுள்ளன. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் வட மாகாண சபையும் இனவாத பிரிவினைக்கு முயற்சிக்கின்றது என்பது அண்மையில் வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் மூலம் தெரிவந்துள்ளது."– என்று அவர் தெரிவித்தார்.

"கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் வட மாகாணத்தை சரியாக கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். போரை வென்றவுடன் வடக்கிற்கு உரிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதுடன் நாட்டின் நிலைமைகள் மீண்டும் பின் நோக்கி நகர்கின்றன. 2002ஆம் ஆண்டில் நாடு எவ்வாறானதொரு அரசியல் சூழ்நிலையில் இருந்ததோ அவ்வாறானதொரு நிலைமை தற்போது மீண்டும் உருவாகி வருகின்றது. அன்று மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் ஆட்சியில் பூனைகள் போல் பதுங்கி கொண்ட வட மாகாண சபை இன்று மீண்டும் புலிகளாக மாற ஆரம்பித்து விட்டது."– என்று அவர் தெரிவித்தார்.

"வடக்கு மாகாண சபையில் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானமானது இலங்கைக்கு மிகவும் அச்சுறுத்தலான ஒன்றாகும். இவ்விடயத்தினை சாதாரணமாக எடுத்துக்கொண்டால் நாடு பாதாளத்தின் பக்கமே கொண்டு செல்லப்படும்."– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"வட மாகாண சபையின் இனப் படுகொலை தொடர்பில் பிரேரணை கொண்டுவரப்பட்டமை சர்வதேசத்தை மகிழ்விக்கவேயாகும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் அமைதி காக்கின்ற நிலையில் கூட்டமைப்பின் தலைமையில் இருந்து சம்பந்தனை ஓரங்கட்டிவிட்டு சி.வி.விக்னேஸ்வரனை கூட்டமைப்பின் தலைவராக்கும் முயற்சிகள் சர்வதேச மற்றும் புலம்பெயர் புலி அமைப்புகளால் முன்னெடுக்கப்படுகின்றது. இன்னும் சிறிது காலத்தில் இது நடந்தே தீரும்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

---

### மாற்றம்

குறித்த நிகழ்வு 'மாற்றம்' என்ற நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது. அதில் கொழும்பு அமைச்சர்களானராஜிதசேனாரத்ன, நவீன் திஸாநாயக்க, சம்பிக்க ரணவக்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் பங்கேற்பார்கள். அவர்களுடன் வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட அமைச்சரவையும் கலந்துகொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அதில் வடக்கு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

நிகழ்வின் காலை அமர்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்திலும், மாலை அமர்வு கொழும்பு – மாகாண அமைச்சர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான கலந்துரையாடலாக – அமைச்சு ரீதியாக வெவ்வேறு இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தம்முடன் எந்தவொரு கலந்தாய்வும் இல்லாது அழைப்பிதழில் தமது பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண அமைச்சர்கள் தரப்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. அதேவேளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அரசியல் சார்ந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மைக்கு கல்விச் சமூகத்தில் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இது தொடர்பாக நிகழ்வை ஏற்பாடு செய்த 'மாற்றம்' அமைப்பின் பொதுச் செய லருக்கு வடக்கு முதல்வர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். "இந்தக் கூட்டத் துக்கான திகதி எமது ஒப் புதலோ, கலந்தாய்வோ இல்லாது நிர்ணயிக்கப்பட் டுள்ளது. இந்தக் கூட்டத் தில் அரசியல் உள்நோக்கங்கள் இருப் பதாகப்படுகின் றது. மத்திய அரசும், மாகாண அரசின் அமைச்சர்களும் அல்லது பொருத்தமான அலுவலர் களுக் கும் இதன் நோக்கம் மற் றும் இது எந்தவிதத்தில் வடக்கு மாகாண மக்க ளுக்கு நன்மை பயக்கும் என்பது பற்றிக் கலந்துரை யாடாது என்னையும், எனது அமைச்சர்களை யும் நிகழ்வுக்கு அழைப் பது பொருத்தற்றது."– என்று அதில் அவர் குறிப்பிட்டுள் ளார்.

"இது தொடர்பில் நீங்கள் மத்திய அரசின் அமைச் சர்களுக்கு என்ன கருத்தைக் கூறியிருக்கின்றீர்கள் என்பது தெரியவில்லை. எங்கள் அமைச்சர்கள் எவரும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டார்கள் என்பதைக் கவலை யுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்"– என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள், குறித்த கூட்டக்தில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று கூறப்பட்டிருக்கும் மத்திய அரசின் அமைச்சர் களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (ற–5)

### டெங்கு

அவர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதனையடுத்தே அவர் களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் தீவிர நடவடிக்கை எடுத்த சுற்றாடல் பொலிஸாரையும் நீதிமன்று பாராட்டியது. தொடர்ந்து அந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளது.

வீடுகள் மாத்திரமன்றி திணைக் களங்களிலும் டெங்கு பரவும் சூழல் காணப்படுகின்றது. எனவே எந்தத் திணைக்களமாக இருந்தாலும் சரி எந்த அதிகாரிக்குட்பட்ட திணைக்களமாக இருந்தாலும் சரி டெங்கு பரவும் சூழல் காணப்படும் திணைக்கள அதிகாரிகள், பொறுப்பதிகாரிகள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு யாழ்.நீதிமன்று சுற்றாடல் பொலிஸாருக்குப் பணித்துள்ளது.

கடந்த மாதத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 614 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. இந்த மாதம் கடந்த வாரம் வரையான காலப்பகுதியில் 113 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டு வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த வருடத்தின் கடந்த வாரம்வரை 727 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் ஆயிரத்து 833 பேர் டெங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ற–4,103)

### உள்ளக

"இலங்கையில் போருக்குப் பிந்திய ஏனைய நிகழ்ச்சி நிரலைப் போன்று, மேலதிக பொறுப்புக் கூறல் மேற்கொள்வதன் மூலம் நாட்டில் அமைதி, ஜனநாயகம், அபிவிருத்தியில் மேலும் முன்னேற்றத்தைக் கொண்டு வரும். போருக்குப் பிந்திய பிரச்சினைகளைத் தீர்க்கும் இலங்கையின் முயற்சிகளுக்குத் தொடர்ந்து உதவும் பொறுப்பு ஐ.நா.வுக்கு உள்ளது."– என்றும் அவர் தெரிவித்தார்.

"ஐ.நா. மனித உரிமைகள் சபையின், அறிக்கை ஒத்திவைப்புத் தீர்மானம் தொடர்பான பல்வேறு சமூகங்களின் பிரதிபலிப்புகளை ஐ.நா. பொதுச்செயலர் அறிவார். புதிய அரசுடன் ஐ.நா. பொதுச் செயலர் சாதகமான பேச்சுக்களில் ஈடுபடுவதுடன், அதன் முயற்சிகளுக்கு ஆதரவும் அளிப்பார்"– என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்த போது, "பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள் போன்றவற்றில் இலங்கை உறுதியானதும், தெளிவானதுமான கடப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்"– என்று ஐ.நா. பொதுச்செயலர் வலியுறுத்தியிருந்தார். (ற–5)

### ஐ.நா.

"ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் உண்மையுடன் நிறைவேற்றுவார் என்பதில், அமெரிக்கா முழு நம்பிக்கை கொண்டுள்ளது. அவர் தனது ஆணையை எவ்வாறு மிகச்சிறந்த முறையில் நிறைவேற்றலாம் என்பதற்கான வழிகாட்டுதலை வழங்க நாம் தயாராக இருக்கிறோம். அறிக் கையை வெளியிடுவதைத் தாம திக்க எடுத்துள்ள ஒருமித்த முடிவு டன் நாமும் இணைந்து கொள்கிறோம்.

கிடைக்கக் கூடிய புதிய தகவல்கள் அறிக்கை, சபைக்கும், இலங்கை மக்களுக்கும், போரின் போது என்ன நடந்தது என்ற இன்னும் தெளிவான விளக்கத் தைக் கொடுக்கும் என்று நம்புகிறோம். இலங்கையின் சகல மக்களுக்கும் பொறுப்புக்கூறல் – நீதி – நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதை உறுதிப்படுத்தும் கடப்பாட்டில் அமெ ரிக்கா உறுதியாக இருக்கிறது என்பதை மீளவும் உறுதிப்படுத்திக் கொள்கின்றேன்."– என்றும் ஹாப் பர் தெரிவித்துள்ளார். "இந்த இலக்குகளை அடைவதற்கு ஜெனிவாவில் முன்னெடுக்கப்ப டும் முயற்சிகள், சர்வதேச சமூக மும், இலங்கையும் இணைந்து செயற்படுவதற்கு உதவும்"– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற–5)

### பகிடிவதை

என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

அமாலி இறுதியாக எழுதிய கடிதத்தில் எனது இறுதிச் சடங்கில் பல்கலைக்கழக மாணவர்களை இணைத்துக் கொள்ள வேண்டாம் என் றும் எனது பூதவுடலை பொரளை பொது மயானத்தில் தகனம் செய் யுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற–10)

### வன்னியில்

கிளிநொச்சி மலையாளபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயம், கிளி. பன்னங்கண்டி இ.த.க பாடசாலை போன்ற பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்ந்து நிலவுகின்றது என்று பெற்றோர்கள் கூறுகின்றனர்.

நகரப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக் குறை இருந்தபோதும் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் அல்லது அயல் வீடுகளில் உள்ள படித்தவர்களிடம் சென்று தங்களது கல்வியை வளர்த்துக் கொள்கின்றார்கள். பின்தங்கிய பகுதிகளில் இவ்வாறான ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் போது மாணவர்கள் எங்கு செல்வார்கள்? என்று கேள்வி எழுப்பும் பெற்றோர், வன்னி மாவட்டத்திற்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் கஷ்டப் பிதேசத்தில் உள்ள பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கே நியமிக்கப்படுகின்றார்கள். இம்முறையாவது எமது பாடசாலைகளுக்கு இந்த ஆசிரியர் பற்றாக் குறைகளை தீர்க்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து வடக்குமாகாண கல்வி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"வன்னியில் இருந்து 400 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் செல்கின்ற அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்தும் சுமார் 700 வரையிலான ஆசிரியர்கள் வன்னி வலய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். எனவே எதிர்காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவமாட்டாது"– என்றும் அவர் தெரிவித்தார. (ற–21)

### மர்ம

குறித்த பெண் கரவெட்டி யார்க்கருப் பிரிவில் உள்ள வயலில் வேலை செய்துவிட்டு மதிய உணவின் பின்னர் அருகில் இருந்த பனை மர நிழலில் ஓய்வெடுத்துள்ளார். அப்போதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார், யாழ்ப்பாணத்திலிருந்து விசேட பொலிஸ் அணியினதும் மோப்ப நாய் மூலம் தேடுதல்களை மேற்கொண்டனர். ஆயினும் சந்தேகத்துக்குரிய பொருள்கள் அகப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற–108)

### விபத்தில்

உழவு இயந்திரத்தை பின்னால் வந்து கொண்டிருந்த உழவு இயந்திரம் முந்தி செல்ல முற்பட்ட வேளை உழவு இயந்திரம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 10 பேர் காயங்களுக்கு உள்ளான நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (ற)

### தேர்தல்

கலைக்காது நாள்களை நீடித்தாவது தேர்தல் முறைமையில் மாற்றத்தை கொண்டுவரவேண்டும் என அவர் கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே தேரர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற)

### சிறைச்சாலை

"யாழ்ப்பாண சிறைச்சாலை உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை உள்ளது.அதற்கான உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது. ஆள்சேர்ப்பு நடவடிக்கையை ஏப்ரல் மாதத்திற்குள் பூர்த்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது."– என்றும் அவர் தெரிவித்தார்.

"சிறைச்சாலைகளில் நிலவும் பதவி வெற்றிடங்கள் காரணமாக அண்மையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதிகள் தப்பிச் சென்றிருந்தனர். அதனால் சிறைச்சாலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சிறச்சாலை உத்தியோகத்தர்களாக முதலில் 200 பேர் உள்வாங்கப்படவுள்ளனர்"– என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–4)


**தொழிலாளர் தேவை**

நன்கு வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் உடன் தேவை. இடம்: யாழ்ப்பாணம்.

தொடர்பு இலக்கம்: 077 895 4882 (56972)(10)

**வான் விற்பனைக்கு**

53-xxxx எனும் தொடர் இலக்கம் உடைய HIACE வான் விற்பனைக்கு.

தொடர்பு: 077 895 4882 (56971)(10)

**கார் விற்பனைக்கு**

NISSAN 16 Super saloon model silver Auto HU xxxx கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 072 935 7431 (C/19776)(10)

**காணி தேவை**

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் சுத்தோலிக்க குடும்பம் ஒன்று வாழ்வதற்கு உகந்த இடத்தில் வீடு கட்டுவதற்கு 2 பரப்புக்குட்பட்ட காணி தேவை - (தரகர்கள் தேவையில்லை)

தொடர்பு :

077 902 5450 (56967)(3.3.7)

**பெயர் மாற்றம்**

தண்ணீர்த்தாங்கி 5ஆம் குறுக்குத்தெரு குருநகரைச் சேர்ந்த பௌடிற் எலிசபெத்தம்மா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை முகமது பைசர் மிஸ்றியா என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(56973)(5.3.7) முகமது பைசர் மிஸ்றியா

**கால நீடிப்பு**

கரவெட்டிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் 08.02.2015 அன்று உதயன் பத்திரிகையில் 17ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட கட்டட நிர்மாணத்துக்கான மூலப்பொருள்கள் கொள்வனவுக்கான விலைமனுக்கோரல் 23.02.2015 அன்று முற்பகல் 10.00 மணி வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

தலைவர்.

# திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி நிகழ்வு


மன்னார், பெப்.19
இலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்தரி நிகழ்வுகள் பக்தி பூர்வமாக நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றன.
மன்னார் மாவட்டம் வாழ் இந்துக்கள் பெருமளவில் இந்தப்பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன், நாட் டின் பல பாகங்களில் இருந்தும் லட்சக்கணக்கான மக்கள் திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர்.
இரவு முழுவதும் ஆலயத்தில் தங்கியிருந்து இறைவனின் இஷ்டசித்திகளைப் பெற்றுக் கொண்டனர். கலைநிகழ்வுகளும், விசேட சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.
நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, கடந்த காலங்களை விட மிகவும் உற்சாகமாக இந்த முறை சிவராத்திரி நிகழ்வுகளில் தாம் கலந்து கொள்வதாக ஆலயத்துக்கு வந்திருந்த பக்தர்கள் தெரிவித்துள்ளனர்.
மன்னாரில் இருந்தும் நாட்டின் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு அரச தனியார் போக்குவரத்துச் சேவைகள் விசேட சேவைகளாக இடம் பெற்றன. (வ-56)



நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, கடந்த காலங்களை விட மிகவும் உற்சாகமாக இந்தமுறை சிவராத்திரி நிகழ்வுகளில் தாம் கலந்து கொள்வதாக ஆலயத்துக்கு வந்திருந்த பக்தர்கள் தெரிவித்துள்ளனர். ’’







## ஐ.நா.அறிக்கை திட்டமிட்ட தினத்தில் வெளியிட வேண்டும்

வலியுறுத்துகிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், பெப். 19
இலங்கை தொடர்பான ஐ.நா. அறிக்கை, திட்டமிட்ட தினத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபை, இலங்கை தொடர்பான போர்க் குற்ற அறிக்கையை அடுத்த மாதம் வெளியிடுவதாக இருந்தது. அது தற்போது, எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
ஐ.நா. அறிக்கை உரிய தினத்தில் மார்ச் 28 ஆம் திகதி வெளியிடப்பட்டே ஆக வேண்டும். அதுதான் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது.
அறிக்கையை உரிய தினத்தில் சமர்ப்பிக்க வேண்டும். வேண்டுமானால் அதன் உள்ளடக்கத்தை செப்ரெம்பர் மாதத்துக்கு தள்ளி வையுங்கள். ஆனால் அறிக்கை உரிய தினத்தில் கிடைக்க வேண்டும். அறிக்கையைத் தாமதப்படுத்துவது, அந்த அறிக்கையை வெளி வராமல் விடுவதற்கான எந்தவித நடவடிக்கையையும் எடுப்பதற்கு இடம்அளிக்கக் கூடாது என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (வ-5)

# மட்டக்களப்பு முன்பள்ளி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

அரச சேவைக்குள் உள்வாங்கி நியமனம் வழங்கக்கோரி



மட்டக்களப்பு, பெப்.19
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களை அரச சேவைக்குள் உள்வாங்கி அரச நியமனங்களை வழங்குமாறு கோரி மட்டக்களப்பு நகரிலுள்ள காந்திப் பூங்காவுக்கு முன்பாக அடையாள ஆர்ப்பாட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்டத் திலுள்ள 500 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் இந்த அடையாள ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, பேரணியாக மட்டக்களப்பு கச்சேரி வரை சென்றனர். இந்த நிலையில், தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸிடம் கையளித்துள்ளனர்.
அண்மையில் கிழக்கு மாகாண சபையாலும் கல்வித் திணைக்களத்தாலும் முன்பள்ளி ஆசிரியர்களை உள்வாங்கி அவர்களுக்கான நியமனங்களை வழங்குவதாக தெரிவித்தபோதிலும், அது மேற்கொள்ளப்படாமையால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்.
"ஆரம்பக்கல்விக்கு அடித்தளம் இடும் எங்களுக்கு அரசு வழங்கும் ஆதரவு போதுமா?, முன்பள்ளி ஆசிரியர்கள் என்றால் ஏளனமா?, முன்பள்ளி ஆசிரியர்களை அரச சேவைக்குள் உள்வாங்குங்கள்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர். (வ)

## முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் இரு குறும்படங்கள் வெளியீடு

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில்



யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக குறும்படச் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு, திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் தணிக்கைக் குழுவினரின் அனுமதி பெற்று இயக்கப்பட்ட இரு குறும்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
இயக்குநர் எஸ். சிவராஜின் இயக்கத்தில் 'பை', 'பிகரை தியேட்டருக்கு கூட்டிப்போறது எப்படி?' ஆகிய இரு படங்களுமே வெளியிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் ஞாயிற்றுக்கிழமை இரு காட்சிகளாக நடைபெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு குறும்படங்களை வெளியிட்டு வைத்தார்.
குறும்படங்கள் குறித்து இயக்குநர் எஸ்.சிவராஜ் கூறுகையில்;
"எனது பல வருடக் கனவு நிஜமாகியுள்ளது என்றே சொல்ல வேண்டும். 'பை' குறும்படத்தில் சுலக்சன், நில்றுக்ஷன், விஜய ரூபன் ஆகியோர் நடித்துள்ளதுடன் ஜி.சத்யன் இசை வழங்கியுள்ளனர். 'பிகரை தியேட்டருக்குக் கூட்டிப்போறது எப்படி' என்ற குறுந் திரைப்படத்தில் காண்டீபன், ஷனா ஆகியோர் நடித்துள்ளதுடன் மதீசன் இசை வழங்கியுள்ளார். முழு நீளத் திரைப்படத்துக்கான ஆரம்பப் புள்ளி இது' –என்றார். (வ-10)

## புத்தூர், சிறுப்பிட்டி பகுதிகளில் வெங்காயச் செய்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.19
வலி.கிழக்கு பிரதேசத்தின் புத்தூர், சிறுப்பிட்டி போன்ற பிரதேசங் களில் விவசாயிகள் கூடுதலாக வெங்காயச் செய் கையில் ஈடுபட்டுள்ளனர்.
விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட வெங்காயப் பயிர்கள் தற்போது நல்ல நிலையில் காணப்படுகின்றன. அதனைவிட சில விவசாயிகள் இந்த வெங்காயத்தை அறுவடை செய்தும் வருகின்றனர்.
இது இவ்வாறிருக்க குறித்த பிரதேசத்தில் பெரும்போக நெற் செய்கை முடிவுற்று, அறுவடை செய்த விவசாயிகள் அந்த வயல் நிலங்களில் வெங்காய செய்கையில் ஈடுபடுவதை முன்னிட்டு தயாராகியும் வருகின்றனர்.
இதற்கென வயல் நிலங்களை உழுது சீர் செய்வதிலும் விவ சாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.
இதேசமயம் தற்போது அறுவடை செய்யப்படும் வெங்காயங்கள் சந்தைக்கு எடுத்து வரப்படுவதால் அவற்றின் விலை சரிந்து காணப்படுகின்றன. (வ-17)

# அக்கராயன் பகுதியில் விரைவில் மேம்பாலம்

கிளிநொச்சி, பெப்.19
அக்கராயன் பகுதியில் மேம்பாலம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் குளத்திலிருந்து வான் பாயும்போது, திருமுறிகண்டியிலிருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதியை ஊடறுத்து வெள்ளநீர் பாய்வதால், அக்கராயன் மத்திய பகுதிக்கும், அக்கராயன் கிழக்குப் பகுதிக்குமான போக்குவரத்து துண்டிக்கப்படுகிறது. அத்துடன் அக்கராயன் பிரதேச மருத்துவமனை வாகனத்தின் மூலம் நோயாளர்களைக் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லமுடியாத நிலை உள்ளது.

இதனால் வான் பாய்கின்ற இடத்தில் மேம்பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நீர்ப்பாசனபொறியிலாளர், அக்கராயன் குளத்தின் வான்வெள்ளம் 600 அடி நீள வான் வழியாகவே வெளியேறுகின்றது. 25 அடி நீளமான தாழ்வான வீதியில் அமைந்துள்ள இந்தப் பாலத்தின் ஊடாக விரைவாக நீர் வெளியேற முடியாததன் காரணமாக வீதியை மூடி வெள்ளம் பாய்கின்றது.

அந்த இடத்தில் மேம்பாலம் அமைப்பதன் மூலம் போக்குவரத்து தடை நீங்கும். வீதி அபிவிருத்தித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறினார். (த)

# பியர் ரின் விற்றவருக்கு ரூ.40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், பெப். 19
சட்டவிரோதமாக மது விற்பனை தொடரும்நிலையில், வீட்டில்வைத்து இரண்டு பியர் ரின் மதுபானத்தை விற்றவருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது யாழ்.நீதிமன்று.

யாழ்.நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று வந்தது. யாழ்.மதுவரித் திணைக்களத்தினரால், யாழ். கொட்டடியைச் சேர்ந்த குடும்பஸ்தருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சுமார் 400 ரூபா விலையுடைய குறித்த ரின் பியர்களை வீட்டில்வைத்து விற்பனைசெய்ததை அவர் ஏற்றுக் கொண்டதையடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக மது விற்பனை செய்வது மட்டுமன்றி அளவுக்கதிகமாக குடித்துவிட்டு இடையூறு விளைவிப்பது, மதுபோதையில் வாகனம் செலுத்துவது உட்படப் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படும் நிலையில் இவ்வாறு அதிகளவு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (த-4)

# பறங்கி ஆற்றில் இருந்து வவுனிக்குளத்துக்கு நீர்

முல்லைத்தீவு, பெப்.19
துணுக்காய் மற்றும் பாண்டியன் குளம் ஆகிய இரு பிரதேச செயலகங்களுக்கும் உட்பட்ட பறங்கியாற்றிலிருந்து வவுனிக்குளத்துக்கு நீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதியிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் உறுதியளித்ததாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் மகாலிங்கம் தயாநந்தன் தெரிவித்தார்.

குறித்த இரு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மக்கள் சிறுபோகம் மற்றும்பெரும்போகம்என்பவற்றை மேற்கொள்வதற்கு நீரில்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது குறித்து குறித்த பிரதேசங்களிலுள்ள கமக்கார அமைப்புக்கள், மக்கள் ஆகியோர் என்னிடம் முறையிட்டனர்.

வவுனிக்குளத்துக்கு பறங்கியாற்றிலிருந்து நீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்த மக்களின் கோரிக்கைக்கு அமைய அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

இதுகுறித்து ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசி விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக அமைச்சர் வாக்குறுதியளித்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# சுகாதாரத் தொண்டர் மீண்டும் போராட்டம்

## நிரந்தர நியமனம் வழங்கக் கோரி



யாழ்ப்பாணம், பெப். 19
தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி யாழ்.மாவட்ட சமூக சுகாதாரத் தொண்டர்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்பாக நேற்று முற்பகலிலிருந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிரந்தரநியமனம்தரும்வரைதொடர் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் தேவையேற்படின் உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபடுவோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

**யாழ்.போதனா வைத்தியசாலை யில் சில வருடங்கள் பணியாற் றியவர்கள் மாத்திரமன்றி அங்கு ஒரு நாள்கூடப் பணியாற்றாத வர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.**

யாழ்.போதனா வைத்தியசாலையில் சில வருடங்கள் பணியாற்றியவர்கள் மாத்திரமன்றி அங்கு ஒரு நாள்கூடப் பணியாற்றாதவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க 10 வருடங்களுக்கு மேலாக 16 வருடங்கள் வரை பணியாற்றிய தமக்கு ஏன் இன்னும் நிரந்தர நியமனம் தரவில்லை? என்றும் அவர்கள்கேள்வியெழுப்பியுள்ளனர்.

'புதிய அரசே ஊழியர்களுக்குப் 10,000 ரூபா மேலதிகக் கொடுப்பனவு வழங்குகிறீர்கள். எம்மை ஏன் கவனத்தில் எடுத் துக் கொள்கிறீர்களில்லை?, எங் கள் குடும்ப வறுமையையும் கொஞ்சமாவது சிந்தித்துப் பாருங்கள், வடமாகாண சுகாதார அமைச் சரே சுகாதாரத் தொண்டர்களாகிய எமக்கு நிரந்தர நியமனத்தை எழுத்தில் தா, உங்களுக்கு மனிதாபிமானமே இல்லையா, மகளிர் விவகார அமைச்சரே உடனே விரைந்து வாருங்கள். எங்கள் கோரிக்கையைத் தாங்கள் கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுங்கள், 6 மாதங்கள்வேலைசெய்தவர்களுக்கு நியமனம் வழங்குகிறீர்கள்.

எங்களுக்கு ஏன் நியமனம் தரக்கூடாது? ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடு பார்க்காது எங்களையும் கவனத்தில் எடுத்து நியமனம் தாருங்கள், நிரந்தர நியமனம் வழங்கும் வரை போராட்டத்தில் ஈடுபடுவோம், வடமாகா[illegible] முதலமைச்சரே தொண்டர்களுக்[illegible] நிரந்தர நியமனத்தைப் பெற்றுத் தாருங்கள், எமது குடும்ப வறுமையை நேரில் வந்து பாருங்கள் என்று எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வருடமும் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிலருக்கு மாத்திரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு இது வரை வழங்கப்படவில்லை. கடந்த வாரங்களும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் தமக்கு நிரந்தர நியமனம் தரும்வரை தொடர்ந்து கவனவீர்ப்பில் ஈடுபடப் போவதாகவும், தேவையேற்படின் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவ[illegible] தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாண பிர[illegible]தம செயலாளர் அ.பத்திநாதனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது சுகாதாரத் தொண்டர்களின் 80[illegible] ஆவணக் கோப்புக்களையும் ஒன்றாகத் தந்துள்ளனர். அவை சரி பார்க்கப்படுகின்றன. இந்த வாரத்திற்குள் வடமாகாண ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்தார். (த-4)



# மரத்துடன் மோதி தடம் புரண்ட பஸ்

வவுனியா, பெப்.19
வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் மரத்துடன் மோதித் தடம் புரண்டது.

நெடுங்கேணி, புளியங்குளம் வீதியில், நைனாமடுப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த சிலருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்கு நேற்றுக் காலை பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது. பஸ்ஸின் முன்பக்கச் சங்கரங்கள் இரண்டும் கழன்று வேறாகின.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

# மண் அணைகளை அகற்ற கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.19
முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகளை அகற்றித்தருமாறு அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**இடர் முகாமைத்து அமைச்சின் ஊடாக கிடைக்கும் நிதியுதவியின் மூலம் மண் அணைகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கோம்பாவில், மந்துவில், வள்ளு வர்புரம், தேவிபுரம், ஒட்டுசுட்டான், துணுக்காய் ஆகிய பகுதிகளிலுள்ள குடியிருப்புக் காணிகளையும், பயிர்ச்செய்கைக் காணிகளையும் ஊடறுத்துச் செல்லும் வகையில் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள் இதுவரை அகற்றப்படாமல் உள்ளன.

இதனால் பயிர்ச் செய்கை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இவற்றை அகற்றித்தர நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இடர் முகாமைத்து அமைச்சின் ஊடாக கிடைக்கும் நிதியுதவியின் மூலம் மண் அணைகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. மாந்தை கிழக்கு மூன்றுமுறிப்பு பகுதியில் அமைந்திருந்த மண் அணை கடந்த காலங்களில் அகற்றப்பட்டது. இவையும் அகற்றப்படும் என முல்லைத்தீவு மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (த)

## கத்தி முனையில் தாலி கொள்ளை

வீட்டில் தனியே இருந்த வயோ திப மாதுவைக் கத்தி முனையில் அச்சுறுத்தி தாலிக்கொடி மற்றும் தோடு போன்றவற்றைக் கொள்ளையன் அபகரித்துச் சென்றுள் ளான்.

வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த பெண்ணின் கணவர் சிவராத்திரிக்காகக் கோயிலுக்குச் சென்ற வேளை வீட்டுக்குள் புகுந்த கொள்ளையன், அங்கு தனியே இருந்த 68 வயதுடைய பெண்ணை அச்சுறுத்தி எட்டுப் பவுண் தாலிக்கொடியையும், அவர் அணிந்திருந்த தோட்டையும் அபகரித்துச் சென்றுள்ளான்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-109)

# 35 தமிழர்கள் மாத்தறையில் கைது

### வெளிநாடு செல்ல முயன்றதாக

கொழும்பு, பெப். 19

வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதற்கு முயற்சித்த, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 35 பேரை மாத்தறைப் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, முல்லைத்தீவு, மாங்குளம், ஒட்டுசுட்டான், மல்லாவி, ஒலுமடு, வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 தொடக்கம் 40 வயது வரை உடைய ஆண்கள், பெண்கள் என்று 35 பேர் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

மாத்தறை வெலிகம கடற்கரைப் பகுதியில் இருந்து மீன்பிடிப் படகு மூலம் இவர்கள் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். தகவல் அறிந்த கடற்படையினர், இவர்களைக் கடலில் வைத்து மடக்கிக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸாரால் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-5)

## ஆசிரியர் நியமிக்குமாறு கோரி கல்விப் பணிப்பாளருக்கு மனு

கிளிநொச்சி,பெப் 19

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் விஞ்ஞான பாடத்துக்கு தேவையான ஆசிரியர்களை உடனே நியமிக்குமாறு கோரி நேற்றுக் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேளிடம் மனு கையளித்தனர் முருகானந்தா கல்லூரயின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு மூன்று விஞ்ஞானபாட ஆசிரியர்கள் தேவையாக இருந்தனர். ஆனால் இதுவ்ரை காலமும் அந்த மாணவர்களுக்காகு கல்லூரியின் ஒரு விஞ்ஞான பாட ஆசிரியர் தான் பாடங்களைக் கற்பித்தார். அத்துடன் ஆங்கில மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் அவரேதான் விஞ்ஞானத்தை கற்பித்தார். ஆனால் தற்போது அவரும் தேசிய பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

எனவே அந்த ஆசிரியர் இடமாற்றம் பெற்று செல்வதற்குமுன் முருகானந்தா கல்லூரிக்கு விஞ்ஞான பாட ஆசிரியரை நியமியுங்கள் என்று கூறியே இந்த மனு கையளிக்கப்பட்டது.

இந்த ஆசிரியர் பற்றாக்குறை சம்மந்தமாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜாவிடம் தொடர்புகொண்டு கேட்டபோது' முருகானந்தா கல்லூரியில் இதுவரை காலமும் விஞ்ஞான பாடம் கற்பித்த அசிரியர் தானாகவே இடமாற்றம் பெற்றுள்ளார். அவர் மத்திய அமைச்சின் கீழேயே பணியாற்றுவதற்காக நியமனம் பெற்றுள்ளார். இதை மத்திய அரசே சிந்தித்திருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லாத ஆசிரியர்களின் விபரங்களை இம்மாதம் 23ஆம் திகதிக்குள் தருமாறு கேட்டிருந்தோம். அது போலவே அந்த விபரங்களும் கிடைக்கவுள்ளன.

சுமார் 278 வரையிலான கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் வரவுள்ளனர். ஏப்ரல் மாதம் இரண்டாம் தவணைப் ஆரம்பத்திலேயே வன்னி வலயங்களில் உள்ள கணித, விஞ்ஞான பாடங்களுக்குத் தேவையான ஆசிரியர்கள் பற்றாக் குறையான இடங்களுக்கு நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார். (த-21)

# மஹிந்தவுக்கு ஆதரவாக நுகேகொடையில் பேரணி

கொழும்பு, பெப் 19

மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து நாட்டை வெற்றிகொள்வதற்கு நீங்கள் தயாரா என்ற அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி நுகேகொடையில் நேற்று இடம்பெற்றது.

நுகேகொடை ஆனந்த சமரக்கோன் மைதானத்தில் ஆரம்பமாகிய இந்தப் பேரணியில் தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் முன்னணி, தூய ஹெல உறுமய, மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணியைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் விமல் வீரவன்ஷ, வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன மற்றும் உதய கம்மன்பில ஆகியோரும் இந்த பேரணியில் இணைந்துகொண்டனர்.



மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மாகாண அமைச்சர் நிமல் லான்சா, கீதாஞ்சன குணவர்தன, தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில், பேராசிரியர் நளின் டி சில்வா, கலாநிதி தயான் ஜயதிலக, மேல் மாகாண சபை உறுப்பினர் சிசிர ஜயகொடி, ரொஜர் செனவிரத்ன, களனி பிரதேச சபைத் தலைவர் பிரசன்ன ரணவீர ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.(த)

# பஸிலுக்கு 3 மாதம் விடுமுறைக்கு அனுமதி

கொழும்பு, பெப் 19



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பஸில்ராஜபக்ஷ நாடாளுமன்றத்திடம் விடுமுறைக்காக விண்ணப்பித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டீ சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன் பின்னர் பஸில் ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தினால் 3 மாதகால விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த)

# எலிக் காய்ச்சலால் 2 இளைஞர்கள் சாவு

கொழும்பு, பெப். 19

எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கம்பஹா, வீரகுல பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 19 வயதுகளுடைய இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரும் எலிக் காய்ச்சல் காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என பரிசோதனையிலிருந்து தெரிய வந்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எலிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வீரகுல பிரதேசத்தைச் சேர்ந்த 13 பேர் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த இளைஞர்கள் இருவரும் வயல்வெளியில் தொடர்ச்சியாக விளையாடியமை காரணமாகவே இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளாக்கியுள்ள தாக தெரியவந்துள்ளது.

எலிக் காய்ச்சலினால் இலங்கையில் இதுவரையில் 543 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் அநுராதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என இனங்காணப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் 63 பேர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

# இஸ்லாமியவாத கட்சியின் தலைவர் போர்க் குற்றவாளி

### பங்களாதேஷ் நீதிமன்றம் சாவுத் தண்டனை விதிப்பு

டாக்கா, பெப். 19

பங்களாதேஷில் சுதந்திர போர் காலப் பகுதியான, 1970 களில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த, மிகப் பெரிய இஸ்லாமியவாதக் கட்சியொன்றின் மூத்த தலைவர் ஒருவருக்கு அந்நாட்டு நீதிமன்றமொன்று சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

ஜமாத் – இ – இஸ்லாமி என்ற கட்சியின், மூத்த உறுப்பினரான அப்துஸ் சுபஹான் என்ற 79 வயதுடைய இவர், கொலை, இனப்படுகொலை மற்றும் சித்திரவதை போன்ற ஆறு வெவ்வேறு குற்றச்சாட்டுக்களில் குற்றவாளி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கிக் கொண்டிருந்தபோது, அரச எதிர்ப்பு ஆர்வலர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களால் வீசப்பட்ட மூன்று குண்டுகள் மத்திய டாக்காவில் அமைந்துள்ள இந்த நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே வெடித்தன. இந்த வழக்கில் மேன்முறையீடு செய்யவுள்ளனர் என அப்துஸ் சுபஹானின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (த)

## வெலிக்கடை மோதல்; விசாரிப்பதற்குக் குழு

கொழும்பு, பெப் 19

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்குக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் விமல் நம்புவாசம் தலைமையில், அசோக விஜய திலக்க, ஓய்வு பெற்ற நிர்வாக உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.கே.லியனே ஆகியோரே இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான ஆதாரங்கள் அல்லது ஏதேனும் தகவல்களை பொதுமக்கள் வழங்க முன்வருவார்களாயின், அதனை வரவேற்பதாக, நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

இந்தக்குழுவின் அலுவலகம் இல.35ஏ, டாக்டர். என்.எம் பெரேரா மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரியிலுள்ள கட்டடத்தின் நான்காம் மாடியில் அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (த)

## பாலாவி வாசியை மரம் நட உத்தரவு

தென்மராட்சி.பெப்.19

போதையில் பொது இடத்தில் பொதுமக்கள் முன்னிலையில் அசிங்கமாக செயற்பட்ட பாலாவி வாசிக்கு நீதிமன்ற வளாகத்தில் 5 நாக மரக் கன்றுகளை கொள்வனவு செய்து நடுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்ற விசாரனைக்கு எடுக்கப்பட்ட போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்தே 5 மரக் கன்றுகளை கொள்வனவு செய்து நீதிமன்ற வளாகத்தில் நடுமாறு நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (த-9)

# சிவப்புச் சட்டையை விற்றுவிட்டார் அநுர

### வீரவன்ஸ சாடல்

கொழும்பு, பெப். 19



பிரதமர் ரணில் விக்ரமசிங்க அரசு ஒன்றை ஏற்படுத்துவதற்காக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தனது சிவப்புச் சட்டையை விற்றுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதிகாரத்தை கொள்ளையிட்டுள்ளதாகவும், அவருக்குச் சொந்தமில்லாத பிரதமர் பதவியை அவர் அனுபவித்து வருகிறார் எனவும் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த என்பது பெயரல்ல எனவும், அது நாடு எனவும், மகிந்த ராஜபக்ச தோல்வியடையவில்லை எனவும் வீரவன்ஸமேலும்கூறியுள்ளார். (த)

# மகுடம் சூடியது மானிப்பாய் இந்து

வலி.வடக்கு, பெப் 19.
இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கான பிரிவு மூன்று அணிகளுக்கு இடையே நடைபெறும் டெஸ்ட் தொடரின் ஆட்டமொன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியை மானிப்பாய் இந்துக் கல்லூரி 9 இலக்குகளினால் வெற்றி பெற்றுள்ளது.

தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 09 இலக்குகளை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. அதிகபட்சமாக பிரதீபன் 53 ஓட்டங்களையும் டியோன் 61 ஓட்டங்களையும் சஜித் 21 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் ஜிந்துசன் 03 இலக்குகளையும் ரவிவர்மன் 02 இலக்குகளையும் மதனரூபன் 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்க தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணக் கல்லூரி அனைத்து இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக ரவிவர்மன் 25 ஓட்டங்களையும் மதனரூபன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக பிரதீபன் 07 இலக்குகளையும் டிலக்சன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து களத்தடுப்பு செய்ய தகுதி அற்ற நிலையில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி இருந்தபொழுது மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடுமாறு மானிப்பாய் இந்துக்கல்லூரி பணித்தது.

இதனால் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணக் கல்லூரி மீண்டும் சொதப்பி அனைத்து இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களை மட்டுமேபெற்றது. அதிகபட்சமாக மதனரூபன் 30 ஓட்டங்களையும், விவேஸ் 28 ஓட்டங்களையும் மிதுசன் 24 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக குகபிரசாத் 03 இலக்குகளையும் கஜன், பிரதீபன் தலா 02 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

ஆறு ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற மிக இலகுவான இலக்குடனும் நிச்சயம் வெற்றி என்ற தெளிவான முடிவுடனும் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு இலக்கினை இழந்து 9 இலக்குகளால் இமாலய வெற்றியை பதிவு செய்தது.

(த-ரி-86)

# கூட்டமைப்போடு முட்டி மோதி அரசியல் செய்ய விரும்பவில்லை

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்



கொழும்பு, பெப். 19
நட்புறவோடு நாங்கள் நடந்து கொள்கின்ற பொழுது, மிகவும் பக்குவமாக வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றபொழுது தமிழ் தேசியத் தலைமைகளிடமிருந்து வருகின்ற வார்த்தைப் பிரயோகங்கள் ஏதோவோர் ஆற்றாமையின் காரணமாகத் தான் காட்டமாக இருப்பதாகத் தெரிகிறது.தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு முட்டி மோதிக் கொண்டு அரசியல் செய்ய நாங்கள் விரும்பவில்லை.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர அபிவிருத்தி நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி நடைபெறவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் மத்தியில் ஆலங்குடா பீ முகாம் என்ற கிராமத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது.

சமகாலத்தில் சுவாரஷ்யமான சில விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வடகிழக்கில் வாழும் தமிழ் பேசும் சமூகத்தினரான முஸ்லிம்கள் பற்றிய பிரஸ்தாபம் குறித்து எமது மக்கள் மிகவும் ஆதங்கத்தோடு இருக்கின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவில் தனது முதலாவது உத்தியோக பயணத்தை மேற்கொண்டிருக்கின்றார். அவரும் இந்தியப் பிரதமர் மோடியும் சந்தித்துக் கொள்கின்றார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் பலவிதமான நம்பிக்கைகள் மக்கள் மத்தியில் துளிர்விட ஆரம்பித் திருக்கின்றது. இரண்டு நாடுகளுக்குமான இருதரப்பு பிரச் சினைகளுக்கான தீர்வு மாத்திரமல்ல, இலங்கையில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வு காண்பது குறித்து விடயங்களும் பேசப்படலாம் என நம்பப்படுகின் றது.

அண்மையில் எழுந்த கிழக்கு மாகாண முதலமைச்சர் விவகாரத்தில், முஸ்லிம் காங்கிரஸ் அந்த முதலமைச்சர் பதவியை பெற்றிருக்கின்றது என்ற நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு கூட்டுக் கட்சியின் தலைவரான நண்பர் சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டமாக ஒன்றைச் சொல்லியிருப்பதை இன்றும் கூட நான் பார்த்தேன்.அண்ணன் சம்பந்தன் கூட வழக்கமாக அவரது உரை களில் காணப்படும் தமிழ்–முஸ்லிம் உறவு குறித்த அம்சங்களை குறித்து, மிக காட்டமான, விமர்சன ரீதியான கருத்துக்களை முன்வைப் பது குறித்து நாம் வேதனையடைகின்றோம்.

இந்த விரிசல் வேண்டுமென்றே ஏதாவது அரசியல் காரணங்களுக்காக ஏற்படுத்தப்படுகின்றதா? அடுத்து வரும் தேர்தலை மையமாக வைத்து தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து இவ்வாறு பேசுகின் றனரா? என்று யோசித்தாலும் கூட அவ்வாறு அவர்கள் நடந்து கொள்வதனால் என்ன நன்மை கிடைக்கப் போகின்றது என்று எங்களுக்குப் புரியவில்லை.

முதலமைச்சர் விவகாரத்தில் இவ்வளவு மன உளைச்சல் ஏற்பட்டு விட்டதா? முதலமைச்சர் விவகாரத்தில் நாங்கள் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை என்பதை நான் மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டும். சில நியாயங்களை நாங்கள் பேச வேண்டும். வெறும் அறிக்கை விடுவதில் பயனில்லை. அவர்கள் விடும் அறிக்கைளுக்கு மாற்று அறிக்கை விடுவதைக் கூட நான் தவிர்த்துக் கொண்டு வருகின்றேன்.

முல் லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அந்த மண்ணைச் சேர்ந்த உங்கள் மத்தியில் நான் இதனைக் கூற வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு முட்டி மோதிக் கொண்டு அரசியல் செய்ய நாங்கள் விரும்பவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமை, கிழக்கு மாகாணத்திலும், கண்டி, கொழும்பு மாவட்டத்திலும் வாழும் முஸ்லிம்களுக்காக மட்டும் பேசுகின்ற தலைமையொன்றல்ல. முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் வாழும் மக்களையும் மனதில் கொண்டு தான் நான் பேச வேண்டும். எனவே, எனது வார்த்தைகளில் பக்குவம் பேணப்பட வேண்டும். நேர்மையும் தூர நோக்கும், சாணக்கியமும் இருக்க வேண்டும். ஆனால், இவை எவையுமே இன்று தமிழ் தேசிக் கூட்டமைப்பினரின் பேச்சுக்களில் தென்படவில்லை என்றுதான் நான் இன்று இந்த விடயத்தை நோக்குகின் றே ன்–என்றார்

.(த)

# ஆண்களுக்கான கபடியில் கோயிற்கடவை சம்பியன்

வடமராட்சி, பெப். 19
கரவெட்டி பிரதேச இளைஞர் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான கபடியில் கோயிற்கடவை இளைஞர் விளையாட் டுக்கழகம் சம்பியனாகியது.

ஆண்களுக்கான கபடிப் போட்டியில் 6 அணிகள் பங்குபற்றியதுடன், போட்டிகள் இமையாணன் மத்திய மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இறுதிப்போட்டியில் மனோகரா இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கோயிற்கடவை இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் கோயிற்கடவை இளைஞர் கழக அணி 42:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

(த)

# வாகை சூடியது மைக்கல்




வடமராட்சி, பெப். 19
கரவெட்டி பிரதேச இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டியொன்றில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் 4 இலக்குகளால் வெற்றிபெற் றது.

ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் மைக்கல் விளையாட்டுக்கழகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. மொத்தமாக 23 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டன. அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக நடைபெற்றன.

இறுதிப்போட்டியில் மைக்கல் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொம்பாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொம்மாந்துறை அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 3.1 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. (த)

# கிழக்கு வீரர்களுக்கு வர்ண விருதுகள்

மட்டக்களப்பு, பெப்.19
2013 – 2014ஆம் ஆண்டுக்கான, கிழக்கு மாகாண வர்ண விருது வழங்கல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் என். மணிவண்ணன்தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார, விளையாட்டுத்துறை அமைச்சின் உதவி செயலாளர் எம்.ஐ.பிர்ணாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ரீதியில் 2013 ஆம் 2014 ஆம் ஆண்டு கபடி, கிரிக்கெட், மல் யுத்தம், குத்துச் சண்டை,கூடைப்பந்து,கராத்தே ஆகிய போட்டிகளில் பதக்கம் வென்ற வீர, வீராங் கனைகள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், மாகாணத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை வீரர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய ரீதியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்குப் பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

தங்கம் வென்றவர்களுக்கு 20,000 ரூபாவும், வெள்ளி வென்றவர்களுக்கு 15,000 ரூபாவும், வெண்கலம் வென்றவர்களுக்கு 12,500 ரூபாவும் வழங்கப்பட்டன.அத்துடன் விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தேசிய ரீதியில் வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளை பயிற்றுவித்த பயிற்றுநர்களுக்கும் இதன்போது பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கௌரவிப்பும் வழங்கப்பட்டது.

(த)


**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கிவரும் உயர்கல்வி நிறுவனம் ஒன்றுக்கு பெண் வரவேற்பாளர் (Receptionist) பதவிக்கு வெற்றிடம் ஒன்று உள்ளது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். சகல ஆவணங்களுடனும் 20.02.2015 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நேரில் வரவும்.

முகவரி:
இல. 154 A/1, நாவலர் வீதி,
(பிறவுண் வீதியும், நாவலர் வீதியும் இணையும் சந்தி)
யாழ்ப்பாணம். தொலைபேசி: 0217200777
(56966)
(10.7.3)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. நாம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS வழங்குகிறோம். ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள். (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ். வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு விசேட கட்டண குறைப்பு

உடன் அழைத்து புதிய வகுப்புகளுக்கு பதிவுசெய்யுங்கள்..

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**A/L பொருளியல் வினா-விடை 2**

வே. கருணாகரன்
ஆசிரியர்
பொருளியற்கல்லூரி

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
(56961)
(10.7.3)


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.